# தமிழரசு

1-9-1991 ரூ.1





# உடல் ஊனமுற்றோர் பேருந்தில் பயணம் செய்ய இலவச அட்டைகள்

உடல் ஊனமுற்றோருக்குப் போக்குவரத்துக் கழக நகர-புறநகரப் பேருந்துகளில் இலவசப் பயணம் செய்ய அடையாள அட்டைகள் வழங்குவது பற்றி அரசு ஆராய்ந்தது.

சமூக நலத்துறை வழங்கும் அடையாள அட்டையிலுள்ள ஊனத்தின் தன்மை-அளவு பற்றிய மருத்துவ அலுவலரின் சான்றிதழின் அடிப்படையில் போக்குவரத்துக் கழகங்கள் இலவசப் பயணச் சலுகை வழங்கும்.

ஊனத்தின் தன்மை, அளவு, விகிதம் ஆகியவை பற்றி அளவிடப்படும் ஊனத்தின் அளவு 50 சதவிகிதம் அல்லது அதற்கு மேல் இருக்கும் ஊனமுற்றவர்கள் மட்டுமே இலவசப் பயணச் சலுகை பெறத் தகுதியுடையவராவர்.

தற்போது நடைமுறையில் உள்ளவாறு கல்வி நிறுவனம் மருத்துவமனை பணியிடம் செல்லும் ஊனமுற்றவர் சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து ஓர் சான்றிதழ் வாங்கி அளித்தல் வேண்டும்.

மருத்துவமனை, பள்ளி, பயிற்சி நிலையம், கல்லூரி, பணியிடம் மற்றும் அனைத்து இடங்களுக்கும் சென்று வருவதற்கான அனைத்துப் பயணங்களுக்கும் தற்போது நடைமுறையில் உள்ளது போல் (திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தவிர) அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகை தொடரப் படும் (நடைமுறையில் மாற்றம் ஏதும் இல்லை).

மருத்துவமனை, பள்ளிக்கூடம் ஆகியவற்றுக்குச் சென்றுவர அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் (திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தவிர) 15 வயது வரை உள்ள மாணவர்களுக்கு அனுமதிக்கப்பட்டு வரும் இலவசப் பயணச் சலுகை, இனி கல்லூரிப் பயிற்சி நிலையம் சென்று திரும்ப 20 வயது வரையுள்ள மாணவர்களுக்கும் அனுமதிக்கப்படும்.

மருத்துவமனை தவிர, பள்ளிக்கூடம், பயிற்சி நிலையம் பணியிடம் சென்று திரும்பி வருவதற்கு வழங்கப்படும் இலவசப் பயணச் சலுகை, இனம் ஆறில் உள்ள அரசாணையில் குறிப்பிடப்பட்ட 23 நிறுவனங்கள் மட்டுமல்லாமல் அரசு சமூக நலத்துறையால் அங்கீகரிக்கப்பட்ட மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான நிறுவனங்களில் கல்வி பயிற்சி பெறும், பணிபுரியும் மனவளர்ச்சி குன்றியவர்களுக்கும் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் (திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தவிர) இலவசப் பயணச் சலுகை வழங்கப் படும். மேலும் அவருடன் ஒரு உதவியாளர் (அட்டண்டர்) சென்றால், அவருக்கும் இலவசப் பயணச் சலுகை வழங்கப்படும்.

# இந்த இதழில்...


ஒற்றுமை காப்போம்
உரிமைகளை மீட்போம்!
—முதல்வர் உரை ... 2
மாண்புமிகு முதல்வர் பங்கேற்ற மாபெரும் அரசு நலத்திட்ட விழா ... 7
நல்லாசிரியர்களை நாடு மறவாது ... 15
தென்னாட்டுத் திலகர் வ.உ.சி. ... 17
நாணயத்தின் கதை ... 19
மகளிர் கல்வி வளர்ச்சி ... 20
மதுவை மறப்பீர் ... 22
வளரும் வேளாண்மை ... 23
நிலம், நீர், பயிர் ... 27
குழந்தைத் தொழிலாளர் பிரச்னைகள் ... 30
ஒவ்வாமை ... 33
மத்திய அரசுக்கு மாண்புமிகு முதல்வர் கோரிக்கை ... 41
துரித இரயில் போக்குவரத்து ... 44



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2022

ஆவணித் திங்கள் - 16

மலர்:22 இதழ்:5

1-9-1991




# ஒற்றுமை காப்போம் உரிமைகளை மீட்போம்!

## 45-ஆம் விடுதலை நாள் விழாவில் மாண்புமிகு முதல்வர் முழக்கம்

இந்தியாவின் 45-வது சுதந்திரநாள் விழா, தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

*15.8.1991* அன்று காலையிலேயே புனித ஜார்ஜ் கோட்டை, விழாக் கோலம் பூண்டிருந்தது. கோட்டைக் கொத்தளம் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உயர் அதிகாரிகள், கல்வியாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் எனப் பலரும் வருகை தந்து விழாவைச் சிறப்பித்தனர்.

சரியாக 8.30 மணிக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் கோட்டைக் கொத்தளத்தின் அருகே அமைந்திருந்த வணக்கம் ஏற்கும் மேடையருகே வந்தார். அவரைத் தலைமைச் செயலாளர் திரு டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்று அங்கு ஆந்திரம், தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் மற்றும் கோவாவைச் சேர்ந்த முப்படை ராணுவ உயர் அதிகாரிகளையும், மாநிலக் காவல்துறை உயர் அதிகாரிகளையும், சென்னை மாநகர ஷெரீப் அவர்களையும் அறிமுகப்படுத்தி வைத்தார். பின்பு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையினை ஏற்று அணிவகுப்பைப் பார்வையிட்டார்.

பிறகு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்துச் சுதந்திர தின உரை நிகழ்த்தினார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்களின் விடுதலை நாள் விழா கொடியேற்றுச் சிறப்புரை:

**மகிழ்ச்சிகரமான இவ் விடுதலை நாளில், தமிழக அரசின் தலைமையகத்தில் நடைபெறும் கொடியேற்று விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ள, என் வணக்கத்திற்குரிய பெரியோர்களே! என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! புரட்சித் தலைவரின் ரத்தத்தின் ரத்தமான என் உயிரினும் மேலான அருமை உடன் பிறப்புக்களே!** உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் தாய்த்திரு நாட்டின் மணிக்கொடியை, வரலாற்றுச் சிறப்பு மிக்க இக்கோட்டையில் ஏற்றுவிப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்; இத்தகைய அரிய வாய்ப்பை எனக்கு வழங்கியுள்ள தமிழகத்துச் சான்றோர்கள் - பெருமக்கள் - தாய்மார்கள் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்வதோடு, அனைவருக்கும் என் இனிய விடுதலை நாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.





அந்நியர்கள் நம் மண்ணில் முதன் முதலில் காலெடுத்து வைத்துக் கட்டிய இக்கோட்டையின் கொத்தளத்தில், நம் விடுதலைக் கொடி இன்று பட்டொளி வீசிப் பறப்பது, நம் சுதந்திரத்தின் மகிமையை உலகுக்கு உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது.

விடுதலை நாள் விழாவைக் கொண்டாடுகிற இந்த நேரத்தில் அதற்கு வித்திட்டவர்களின் தியாகங்களைப் பெருமையோடு நினைவுகூர்வது நம் கடமையாகும். இந்த விடுதலைதான் இந்தியாவை ஒரே நாடாக்க உதவியது; அடிமை இந்தியனைச் சுதந்திர மனிதனாக அரியாசனத்தில் அமர்த்தியது.

எனவே, தாய்த்திரு நாட்டின் விடுதலைக்காகத் தம் உயிர், உடல், உடைமைகளை ஈந்த பல்லாயிரக்கணக்கான விடுதலைப் போராட்ட வீரர்களுக்குத் தமிழ்நாட்டு மக்கள் சார்பில் எனது வீர வணக்கத்தை அஞ்சலியாக்குகின்றேன்.

இந்திய நாட்டில் அமைந்திருந்த நூற்றுக்கணக்கான சிற்றரசுகள் நமது பெருமைகளை மறந்து, தங்களுக்குள் சண்டையிடுவதையே வாடிக்கையாகக் கொண்டிருந்ததால்தான், தேசிய உணர்வு அவர்களிடமிருந்து விடைபெற்று வெகுதூரம் சென்றுவிட்ட நிலையில், அடிமை வாழ்வு நாம் அழைக்காமலேயே குடியேறியது; நமது சுயமரியாதையையே அடித்து வீழ்த்தியது.

இந்தப் படிப்பினை நமது நினைவில் இன்றும் நிலைத்திருப்பதால்தான் பல்வேறு மொழியினர், வெவ்வேறு இனத்தவர் நிறைந்து வாழும் நிலையிலும், நாம் பெருமையோடு உலக அரங்கில் மிகப் பெரிய மக்களாட்சி எனும் மாட்சிமையோடு தலை நிமிர்ந்து நிற்கிறோம். இப்பெருமையை நாம் ஒவ்வொருவரும் என்றென்றும் கட்டிக் காக்க வேண்டும் என்று உறுதி கொள்ள வேண்டும் என்பதை இவ்வேளையில் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

மக்களாட்சி சிறப்பு கொண்ட இந்திய நாடு, என்றென்றும் இதே புகழோடு திகழ வேண்டுமெனில், நமக்குள் போட்டி பொறாமைகளை வித்திட்டு, வேதனைகளை வளர்ப்பதைத் தவிர்த்து, ஒற்றுமை உணர்வோடு, ஒருமைப்பாட்டைப் பேணிக் காப்பது ஒவ்வொருவரின் இன்றியமையாக் கடமை ஆகும். நமக்குள்ளே மறைவாக உறங்கிக் கொண்டிருக்கும் சாதி, இன, மதவாத பலவீனத்தின் தன்மைகளை உணர்ந்துதான், இந்தியாவின் முதல் சுதந்திர தினத்தை வாழ்த்தி வரவேற்றபோது டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் - ''நாளைக் காலை முதல் நமது தவறுகளுக்காக நாம் வெள்ளைக்காரர்களைக் குறைகூற முடியாது'' என்று கருத்துத் தெரிவித்தார். அவரது இந்த வார்த்தைகளுக்கு ஆழமான அர்த்தங்கள் உண்டு. நம் ஒவ்வொருவரது கடமையினையும், பொறுப்பினையும் உணர்த்தும் வாசகங்களாகவே அவை திகழ்கின்றன.

# நாமிருக்கும் நாடு இந்தியா; நாம் அனைவரும் இந்தியரே!

சாதி, மத, இன, மொழி, வேறுபாடின்றி 'இந்தியா எங்கள் நாடு' என்னும் ஒற்றுமை உணர்வைப் பேணுதல் தற்போது காலத்தின் கட்டாயம் ஆகும். பல்வேறு இன மக்கள் வாழும் மொழிவாரி மாநிலங்கள் சேர்ந்த கூட்டாட்சியின் தொகுப்புதான் நம் குடியாட்சி.

# கச்சத் தீவைத் திரும்பப் பெற வாதாடவும் போராடவும் இந்த அரசு தயாராக உள்ளது!

ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரத்தைத் தான் இந்தியா திரும்பப் பெற்றதேயன்றி, தான் இழந்த செல்வச் செழிப்பைப் பெற இயலவில்லை. ஆயினும், அறிவும், ஆற்றலும் நிரம்பிய மக்களையும், இயற்கை வளம் கொழிக்கும் நாட்டையும் பெற்றுள்ள நாம், பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ளது மிகவும் வேதனைக்குரியது. வெறும் பேச்சுக்களால் வெற்றியை உருவாக்கிட முடியாது. சுதந்திரம் பெற்ற நாட்டில் உரிமை கேட்கிற மக்கள், தங்கள் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்ற முன் வரவேண்டும். நம்மை வாய்ச்சொல் வீரர்களாக்கப் பெறப்பட்டதல்ல சுதந்திரம். பல நூறு ஆண்டுகளாகத் தேங்கிக் கிடந்த சோம்பலை விரட்டி, நம்மை நாமே வளர்த்துக் கொண்டு, வாய்மை மிக்க ஓர் சமுதாயத்தை உருவாக்க, நாம் பெற்ற உந்து சக்தியே சுதந்திரம் ஆகும்.

ஒவ்வொரு மனிதனின் வளர்ச்சியிலும் நாட்டின் ஒருங்கிணைந்த நலன் உறைந்து கிடக்கிறது என்பதை நாம் உணரவேண்டும். அதேபோல் பல்வேறு மாநிலங்களின் வளர்ச்சிதான் பரந்துபட்ட இந்தியாவின் உயர்வுக்கு ஊக்கமளிக்கும் என்பதையும் நாம் உணர வேண்டும். இதனைத் தான்- தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் ஆகியோர் சமுதாயப் புரட்சி பூத்துக் குலுங்கும் கருத்துக்களாகத் தெரிவித்துள்ளனர். ஒன்றுபட்ட நமது இந்தியாவின் ஒருமைப்பாடு காக்க உறுதி பூணும் அதே நேரத்தில், நமது உரிமைக்காகக் குரல் கொடுக்கவும் நாம் தயங்க மாட்டோம் என்பதை இதன் மூலம் தெளிவு படுத்த விரும்புகிறேன்.



இத்தகைய கடமை உணர்வுகளையெல்லாம் கருத்தில் கொண்டுதான், பொறுப்பேற்றுள்ள எங்கள் புதிய அரசு தீமைகளைக் களைந்து மாநிலத்தின் முன்னேற்றத்திற்கும், துரித வளர்ச்சிக்கும் வேண்டிய திட்டங்களைத் தீட்டி, அவைகளைக் காலத்தோடு செயல்படுத்திட அளவு கடந்த ஆர்வம் கொண்டுள்ளது. குறிப்பாக - தொழில் துறையில் தமிழ்நாட்டை இந்திய நாட்டின் முதன்மை மாநிலமாக்குவது என்பதை இலட்சியமாகக் கொண்டு இந்த அரசு தற்போது முனைப்பான பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தொழில் மேம்பாட்டுக்காகத் தொழில் முனைவோருக்கு எவ்வகையிலெல்லாம் உதவ முடியுமோ அத்தனை வகையிலும் எங்கள் அரசு உதவிட முன் வந்துள்ளது. அரசு அளித்து வரும் இந்த ஊக்கம், தொழில் துறையில் நமது மாநிலம் ஆக்கம் பெற அடிகோலும் என்பது திண்ணமாகும்.

சமூகப் பிரச்சினையை அணுகுவதிலும் இவ்வரசு மிகுந்த அக்கறையும், ஆர்வமும் கொண்டுள்ளது. கோடிக்கணக்கான தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்பதை இலட்சியமாகக் கொண்டு, மக்களுக்குத் தேர்தலின்போது கொடுத்திருந்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில், ஆட்சி ஏற்றதும் முதல் நடவடிக்கையாக மலிவு விலை மதுக்கடைகளை மூடியதை நீங்கள் அறிவீர்கள். ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடனேயே நாங்கள் பிறப்பித்த முதல் ஆணை இதுதான்! மேலும், பெண்கள் தங்கள் சொந்தக் காலில் நிற்கிற வகையில், தொழில் துறையில் அவர்கள் துணிந்து பங்கேற்கிற வகையில் எல்லா ஏற்பாடுகளும் செய்து வருகிறோம். நமது மக்கள் தொகையில், ஏறத்தாழ பாதிப்பேராய் இருக்கிற மகளிரைப் பாதுகாப்பாக உயர்த்தி விடுவதுதான் சுதந்திரம் பெற்ற நாகரிகமுள்ள சமூகத்தில் ஒரு அரசின் கடமை என்ற கருத்தில் பெண்கள் முன்னேற்றம், பெண்கள் உயர்வு ஆகியவற்றுக்கு எல்லா முன்னுரிமைகளும் வழங்கப்படும்.

அடுத்து - பொது அமைதி எந்த வகையில் நாட்டில் பாதிக்கப்பட்டாலும், அது ஒருவகையில் நாம் பெற்ற சுதந்திரத்தை ஊனப்படுத்தும் ஒரு தீமையேயாகும். என எங்கள் அரசு உறுதியாக நம்புகிறது. பண்பட்ட நமது மக்களைத் தவிப்

பிற்கும், குழப்பத்திற்கும் ஆளாக்கும் எந்த உள் நாட்டு அல்லது வெளிநாட்டுத் தீய சக்திகளையும் நம் தமிழ்நாட்டில் வளர அனுமதிக்க முடியாது. அமைதிப் பூங்காவாய்த் திகழ்ந்த தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற் பட்டதால் அரசு தீவிர நடவடிக்கைகளை மேற் கொண்டு இலங்கைத் தமிழர்கள் தமிழ்நாட்டில் இருப்பதை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதை அனைவரும் அறிவீர்கள். அவர்கள் தங்களின் முகவரியைக் காவல் நிலையங்களில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. நம் அரசு காட்டுகிற அனுதாபத்தைப் பயன்படுத்திக் கொண்டு, மறைமுகமாக அநீதிகளைக் கட்ட விழ்த்துவிட்டுப் பழியைப் பலவீனமானவர்கள் மீது போட, நாம் எவரையும் அனுமதிக்க இயலாது என்பதால் தான் இலங்கைத் தமிழர் பிரச்சினை யில் அரசு கண்டிப்புடன் நடந்துகொண்டது.

தமிழகத்தின் பொது அமைதிக்குப் பங்கமுண் டாக்கியதோடு, சமீப காலமாக இந்தியப் பாது காப்புக்கும் சவால் விடும் போக்கில் தமிழகத்தில் நடந்து கொண்ட வெளிநாட்டுத் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளைக் கண்டிப்புடன் அடக்கியுள்ள

திரும்ப நாம் பெற மைய அரசுடன் வாதாடவும் தேவை ஏற்படின் போராடவும் இந்த அரசு தயாராக உள்ளது என்பதைக் குறிப்பிட விரும்பு கிறேன். இது எங்கள் தேர்தல் அறிக்கையில் தெரிவித்திருந்த ஓர் வாக்குறுதி ஆகும். இந்திய விடுதலை நாள் விழாவில் நாம் இழந்த இந்த மண்ணின் ஓர் பகுதியைத் திரும்ப மீட்கும் சூளுரை யாக இதனைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அனைத்துத் துறைகளிலும் நமது மாநிலம் ஒருங்கிணைந்த முன்னேற்றம் காணவேண்டுமென் பதற்காகவும், எங்களது இலட்சியங்கள் வெற்றி பெற வேண்டுமென்பதற்காகவும், அதற்கான நிதி உதவியினைக் கோரும் பொருட்டு, நாங்கள் மைய அரசை அணுகியிருக்கிறோம். பல்வேறு நலத் திட்டங்களுக்கும், ஆக்கப் பணிகளுக்கும், மற்றும் சட்டம், ஒழுங்கு பராமரிப்பு போன்ற அவசர நடவடிக்கைகளுக்கும் தற்போது அதிக நிதி உதவி தேவைப்படுகிறது. எனவே, வரலாறு காணாத வெற்றியை அளித்து ஆட்சிப் பொறுப்பில் எங்களை அமர்த்தியுள்ள தமிழகத்து மக்களின் மேம்பாட்டிற்காக, மைய அரசிடம் நமக்கு வேண் டிய நியாயமான நிதி உதவியை நட்புறவோடு

# தொழில் துறையில் தமிழ்நாட்டை இந்தியாவின் முதல் மாநிலமாக்குவோம்!

தமிழகக் காவல் துறையினை, இத்தருணத்தில் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். பொதுமக்களுடனும், அப்பாவி அகதிகளுடனும் இரண்டறக் கலந்து, திட்டமிட்டு நம் மாநில அமைதியைக் கெடுத்துவந்த கூட்டத்தின் நட மாட்டம், இன்று கட்டுப்படுத்தப்பட்டுள்ளதற்குத் தமிழகக் காவல் துறையின் தனித் திறமையும், அவர்களது கைகளைக் கட்டிப்போடாது சுதந்திர மாகச் செயல்பட அனுமதித்த அரசின் அணுகு முறையுமே காரணம் என்பதை நல்லுள்ளம் கொண்டோர் அனைவரும் ஏற்றுக் கொள்வர்.

இலங்கைப் போராளிகளைக் கட்டுப்படுத்த அரசு எடுத்த சில தீவிர நடவடிக்கை காரணமாக, தமிழகக் கடற்கரை மீனவர்கள் சில சிரமங்களுக்கு ஆளானதை அறிந்து அரசு அவர்கள் பாதிப்புக் குள்ளாகாத வகையில் சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது. குறிப்பாக, இராமேஸ்வரம் மீனவர் களின் பாதிப்புக்கு அடிப்படைக் காரணமாக அமைந்துள்ள கச்சத் தீவு பிரச்சினையில் ஓர் தீவிர முடிவை அரசு எடுக்க உள்ளது. நம் தாயகத்திற்குச் சொந்தமான கச்சத் தீவை இலங்கை அரசுக்குத் தாரை வார்த்த காரணத்தால், இன்று நம் மீன வர்கள் தங்கள் வலைகளைக் கூட உலர்த்திக் கொள்ள அத்தீவின் அருகில் நெருங்க முடியாத அவல நிலை உள்ளது. எனவே கச்சத் தீவைத்

கேட்டுப் பெறுவது கூட, இந்திய சுதந்திரம் நமக்கு வழங்கியுள்ள ஆரோக்கியமான ஒரு நிர்வாக நடைமுறை ஆகும்.

பரந்த எல்லைகள் கொண்ட நம் இந்தியா போன்ற ஒரு பெரிய நாட்டில் நாம் விரும்பாம லேயே நமக்குள் தோன்றுகிற பிரச்சினைகள் ஏராளமாய் உள்ளன. மாநிலங்களிடையே இப் படிப்பட்ட பிரச்சினைகள் ஏற்படும்போது நியாய மும், நியாயத்தின் அடிப்படையில் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் தான் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க முடியும். அதுதான் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க உதவும். அடிப்படையான நியாயத்திற்குப் புறம்பாக எம் மாநிலமும் சென்றிடாது கண்காணித்துக் கட்டுப் படுத்தும் பொறுப்பு மைய அரசுக்கு உண்டு.

இந்த அடிப்படையில்தான் காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் நாம் நியாயத்தை எடுத்துக் கூறி வருகின்றோம். காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை இந்த அரசின் முழு முயற்சியையும், கவனத்தையும் தற்போது ஈர்த்துள்ளது.

தமிழ்நாட்டின் ஜீவாதாரப் பிரச்சினையும், மாநிலம் முழுவதும் ஒட்டுமொத்தமாகக் குரல் கொடுத்துச் செயல்பட வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையுமான, காவிரி நதி நீர்ப்

பங்கீட்டுப் பிரச்சினையில் நாம் நியாயம் கேட்டு மைய அரசைத் தலையிடக் கோரி வருகிறோம். நீதி எவர் பக்கம் என்பதை இந்தியத் துணைக்கண்டமே அறிந்துள்ளதால், இப்பிரச்சினையில் நாட்டை ஆளும் தலைமைப் பொறுப்பிலுள்ள மைய அரசு தனது கடமையைச் செய்தாலே போதுமானது. இந்தச் சுதந்திர நன்னாளில் அந்த நியாயத்தின் குரலை அனைவரும் கேட்கிற வகையில் நாம் உரத்த குரலில் மீண்டும் முழங்குவோம். காவிரி நதி நீர்ப் பிரச்சினை தமிழ்நாட்டின் ஒவ்வொரு தனி மனிதனின் பிரச்சினை ஆகும். "There is no scope any more for negotiations or talks to settle this issue. We want only a judicial settlement which must be honoured by one and all".

காவிரிப் பிரச்சினையைத் தீர்க்க இனிப் பேசிப் பயனில்லை. நீதிமன்ற ஆணை ஒன்றே இனி இப்பிரச்சினைக்குத் தீர்வாக அமைய முடியும் என்பதை வற்புறுத்திட விரும்புகிறேன். அத்தகைய நீதித்துறை ஆணை ஒவ்வொருவராலும் மதிக்கப் பட வேண்டும்; ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அது தவிர, இனி பேச்சு வார்த்தை என்ற பேச் சுக்கே இடமில்லை என்பதை அரசின் சார்பில் ஆணித்தரமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

1981-ஆம் ஆண்டு தனது சுதந்திர தின உரையினை வானொலியில் நிகழ்த்தும்போது, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் - "வேறு சில நாடுகளைப் போலல் லாமல் ஜனநாயக நெறியிலேதான் பொருளாதார மாற்றம் வந்தாக வேண்டும் என்பது நமது தெளி வான கொள்கையாக இருந்து வருகிறது. சிலருக்கு நோக்கங்கள் மட்டும் முக்கியமாக இருக்கலாம். நமக்கு, அவற்றை அடைய நாம் கடைப்பிடிக்கும் வழிகளும் முக்கியமானவை" என்று தெளிவுபடக் கூறினார். அதே கருத்தைத்தான் நானும் வலி யுறுத்த விரும்புகிறேன். இந்திய விடுதலைக்காகப் போராடியவர்களை நினைவுகூரும் இந்த நாளில், தமிழ்நாட்டு மக்களின் உரிமைக்காகவும், நியாயத் திற்காகவும் ஜனநாயக முறையில் நாங்கள் கடைசி வரை போராடுவோம், அதை அடையும்வரை ஓயமாட்டோம் என்று உறுதி கூறுகிறேன்.

ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக அயலாரின் ஆதிக்கம் தனி மனிதனையும், நம் செல்வ வளர்ச்சியையும் சிதைத்தாலும், நமது வரலாற்றையும், பண்பாட்டையும், நாகரிகத்தை யும், கலாச்சாரத்தையும் அதனால் காயப்படுத்த முடியவில்லை. எனவேதான்' இவைகளின் தொன்மையை, மேன்மையை, செழுமையைத் தேடி இன்று வரை மேற்கத்திய நாடுகள் நம்மை நாடி வந்து கொண்டிருக்கின்றன. நமது பண் பாட்டின் நிலைக்கலன்களாய், பழமையின் தூது வர்களாய், கலை மற்றும் கலாச்சாரத்தின் காவலர் களாய் நின்று நிலைபெற்று வரும் திருக்கோயில் களை அந்த நோக்கத்தோடுதான் பொதுமக்கள் உதவியோடு செப்பனிட்டுச் சீரமைக்கிற பணி யினை நான் தற்போது துவக்கியுள்ளேன். நமது

> முதலில் தொண்டு, பின்பு தன்னலம் என்ற மனப்பக்குவம் அனைவரிடமும் ஏற்பட வேண்டும். அப்பொழுதுதான் நல்ல சமுதாயம் உருவாகும்.
>
> —டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணன்

வாழ்வில் நல்லவை, கெட்டவைகளை ஆராய்ந்து அறிந்து வழிகாட்டுகிற ஆசிரியர்களாகத் தமிழகத் திருக்கோயில்கள் விளங்கி வருகின்றன. அவை களைப் பாதுகாப்பதும் பராமரிப்பதும் நமது தலையாயப்பணி; பராமரிப்பது நமது பாரம் பரியக் கடமை ஆகும்.

மக்களின் நலன் காக்கவே இந்த அரசு பொறுப் பேற்றுள்ளது. சமுதாயத்தில் ஒதுக்கப்பட்ட - புறக்கணிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப் பட்ட மக்களின் உயர்வுக்கும், மாநிலத்தின் ஒருங் கிணைந்த வளர்ச்சிக்கும் அடிகோலும் எங்கள் அரசு, தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளைக் காப்பதில், பாதுகாப்பு அரணாகத் திகழும் என் பதை, இந்த நேரத்தில் திட்டவட்டமாகத் தெரி வித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தியத் திருநாட்டின் ஒருமைப்பாட்டையும், ஒற்றுமையினையும் பேணிக்காப்போம். இழந்த நம் உரிமைகள் அனைத்தையும் விரைந்து மீட்போம்.

"நாம் இருக்கும் நாடு இந்தியா
நாம் அனைவரும் இந்தியரே" -
என்ற முழக்கம் திக்கெட்டும் பரவச் செய்வோம்.

இருபத்தி ஒறாம் நூற்றாண்டை நோக்கி - தொலைநோக்கப் பார்வையோடு இந்தியாவை வளமுள்ளதாகவும் - வலுவுள்ளதாகவும் உருவாக் கிட அயராது உழைப்போம்! வெல்வோம்! என இச்சுதந்திர நாளில் சூளுரைத்து,

அண்ணா நாமம் வாழ்க!
புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! -
என்று கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

● ● ● ● ● ●

சுதந்திர நாள் சொற்பொழிவு நிறைவு பெற்ற பின், ஊனமுற்ற குழந்தைகளுக்கு இனிப்புப் பண்டங்களையும், உணவுப் பொருட்களையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்கள். சுமார் 3000 ஏழைகளுக்கு உணவுப் பொட்ட லங்கள் வழங்கப்பட்டன.

மாண்புமிகு புரட்சித்தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்கள் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றதும் நடைபெறும் முதல் சுதந்திர நாள் விழா இனிதே நடந்து முடிந்தது.

**நமது செய்தியாளர்**





# மாண்புமிகு முதல்வர் பங்கேற்ற மாபெரும் அரசு நலத்திட்ட விழா!

## இலட்சோப இலட்சம் மக்களிடையே மாண்புமிகு முதல்வரின் எழுச்சிமிகு உரை!

***மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பர்கூர் நிகழ்ச்சியில் ஆற்றிய உரை (21-8-1991)***

இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நல்லாட்சியை மீண்டும் தமிழகத்தில் உருவாக்கிய பின், நான் முதலாவதாகக் கலந்து கொள்ளும் முதல் பொதுக்கூட்ட நிகழ்ச்சியான இச்சீரிய விழா நிகழ்ச்சியின் தலைவர், சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே!

என் வணக்கத்திற்குரிய பெரியோர்களே! என்னை வாழ வைக்கும் தெய்வங்களான தாய்மார்களே! இதய தெய்வம் புரட்சித் தலைவரின் ரத்தத்தின் ரத்தமான என் உயிரினும் மேலான அருமை உடன்பிறப்புக்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களே! தலைமைச் செயலர் அவர்களே! அரசு அலுவலர்களே! அனைவருக்கும் முதற்கண் என் அன்புகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜனநாயக இந்தியாவில் இதுவரை எந்தக் கட்சியும் எம்மாநிலத்திலும் பெறாத ஓர் மகத்தான வெற்றியைப் பெற்று, மக்களாட்சி மாண்பின் எடுத்துக்காட்டான ஒரு நல்லாட்சியை அமைத்தபின், இன்றுதான் முதன்முதலாக இலட்சோப இலட்சமென, சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் எதிரே இருக்கும் வங்கக் கடல் மெல்ல மெல்லக் கடந்து வந்து, பர்கூர் அருகே அலை வீசுகிறதோ என வியக்கும் வண்ணம், திரண்டு வந்து கூடியுள்ள உங்களை எல்லாம் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றமைக்காக, என் பெருமகிழ்ச்சியினையும் நன்றியினையும் உங்கள் அனைவர்க்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிலும் குறிப்பாக, இன்றைய தினம் அமைந்துள்ள நல்லாட்சிக்குத் தலைமை ஏற்கும் வாய்ப்பினை நான் பெற, அடிப்படைக் காரணகர்த்தாக்களான என் மரியாதைக்கும் வணக்

## சென்னையிலிருந்து பர்கூர் வரை

**மா**ண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களின் சொந்தத் தொகுதியான பர்கூரில் உள்ள (தர்மபுரி மாவட்டம்) மாதேபள்ளி எனும் கிராமத்தில் நடைபெறும் அரசுவுயர் விழாவில் கலந்து கொள்ள, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 21.8.91 அன்று காலை 5.30 மணிக்குச் சென்னையிலிருந்து புறப்பட்டார்.

முதல் அமைச்சராகப் பொறுப்பு ஏற்றபின் அவர் தலைநகர் சென்னையை விட்டு வெளியூரில் கலந்து கொள்ளும் முதல் நிகழ்ச்சி இதுவே ஆகும். அவர் சென்னையிலிருந்து பர்கூர் செல்லும் வழி நெடுக அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப் பட்டது. ஆலந்தூர் கத்திப்பாரா சந்திப்பில் முதல்வருக்குக் குதிரைகள், யானைகள் அணிவகுப்புடன் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. நூறு பெண்கள் கைகளில் விளக்குகளை ஏந்தி முதல்வரை அன்புடன் வரவேற்றார்கள். ஏராளமான கார்கள் பின்தொடர, போரூர், பூந்தமல்லி, ஸ்ரீபெரும்புதூர், சுங்குவார் சத்திரம் வழியாக முதல்வர் அவர்கள் காஞ்சிபுரத்தை அடைந்தார். அங்கே அவரை செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஷீலா பிரியா அவர்கள் வரவேற்றார். சென்னையிலிருந்து பர்கூர் வரையில் உள்ள பாதை முழுவதும் அலங்கார வளைவுகளும், தோரணங்களும் அமைக்கப்பட்டு திருவிழாக் கோலம் பூண்டிருந்தது.

பர்கூர் மாதேப்பள்ளியில் கூடியிருந்த பத்து இலட்சம் மக்களின் பலத்த ஆரவாரத்திற்கிடையே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் காலை 11.30 மணிக்கு நன்கு அலங்கரிக்கப்பட்ட விழா மேடைக்கு வந்தார். பர்கூர் இதுவரை கண்டிராத பிரம்மாண்டமான இவ்வினிய அரசுவுயர் விழாவிற்கு மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு.சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமையேற்றுச் சொற்பொழிவாற்றினார்.

அதையடுத்து, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் தொழில் வளாகம், குடிநீர், குடியிருப்பு, பாலங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள், புது மருத்துவமனை, பேருந்து நிலையம் மற்றும் சில கட்டடங்கள் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டி புதிய பேருந்து வழித்தடங்கள், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டப் பணிகள் ஆகியவற்றைத் தொடங்கி வைத்து சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

விழாவில், தமிழ்நாடு கனிம நிறுவன நிர்வாக இயக்குநர் திரு.அ.ந.தியானேசுவரன்,இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அவரைத் தொடர்ந்து தொழிற்துறைச் செயலர் திரு.எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., தலைமைச் செயலர் திரு.டி.வி.வெங்கட்ராமன், இ.ஆ.ப., டெல்லியில் உள்ள மாண்புமிகு தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு.மு.தம்பிதுரை, மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு. பி.எம்.செல்வகணபதி, மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆனந்தன், மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் திரு. டி.ஜெயக்குமார், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி.இந்திரகுமாரி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.அழகு திருநாவுக்கரசு, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எஸ்.கண்ணப்பன், மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. இ.மதுசூதனன், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன், மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. சு.முத்துசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

அதைத் தொடர்ந்து பெண்களுக்குத் தையல் இயந்திரங்கள், சலவைப் பெட்டிகள் ஆகியவற்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். கிணற்றில் தவறி விழுந்தவர்களைக் காப்பாற்றிய கூத்தாளைப்பட்டி சம்பத்குமார், கொத்தூர் வேடியப்பன் ஆகியோருக்கு அரசு சார்பில் தலா ரூ.4 ஆயிரமும், தமது சொந்தப் பணத்தில் இருந்து ரூ.5 ஆயிரமும், குடியரசுத் தலைவரின் பதக்கங்களையும் வழங்கினார்.

இம் மாபெரும் விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு தங்கக் கிரீடம் உள்பட பல நினைவுப் பரிசுகள் வழங்கப் பட்டன.

**— தொகுப்பு: என். இளங்கோ**

---

கத்திற்கும் உரிய பெருமை மிக்க பர்கூர் வாக்காளப் பெருமக்கள் அனைவரையும் சந்திப்பதிலும், அவர்கள் அனைவர்க்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றியைக் காணிக்கையாக்குவதிலும் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

நடந்து முடிந்த சட்டப்பேரவைப் பொதுத் தேர்தலில் நான் பர்கூர், காங்கேயம் ஆகிய இரு தொகுதிகளிலும் பல்லாயிரகணக்கான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறும் வாய்ப்பினைப் பெற்றேன். இருந்தும் காங்கேயம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு, பர்கூர் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் பதவியை மட்டும் நான் தக்கவைத்துக் கொண்டிருப்பதில் இருந்து, மிகப் பின்தங்கிய நிலையில் உள்ள இத்தொகுதியின்பால் நான் கொண்டிருக்கும் பிடிப்பினை அனைவரும் உணர்ந்து கொள்ள முடியும்.

பொதுவாகத் தர்மபுரி மாவட்டமே மிகப் பின்தங்கிய வறட்சி மிகுந்த மாவட்டமாகும். அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் இம்மாவட்டத்திலேயே மிகப் பின்தங்கிய தொகுதி பர்கூர் தொகுதியாகும். தர்மபுரி மாவட்டத்தில், நாடு சுதந்திரம் அடைந்த கடந்த 44 ஆண்டுகளாக இங்கே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் தமிழக அமைச்சரவையில் இடம் பெறவே இல்லை என்ற குறைபாடு இருந்து வந்துள்ளது. அந்தக் குறையைப் போக்கும் வகையிலும், அமைச்சராகத் தானே இதுவரை எவரும் இந்த மாவட்டத்தில் இல்லாத குறை இருந்துள்ளது - அக்குறையினை வட்டியும் முதலுமாகச் சேர்த்துப் போக்குகிற வகையிலும், தற்போது, முதலமைச்சராகவே நான் உங்களுக்குப் பணியாற்ற வந்துள்ளேன் என்பதில் எனக்குள்ள அதே அகமகிழ்ச்சி, உங்கள் அனைவர்க்கும் இருந்திடும் என நம்புகிறேன். அனைவர்க்கும் மகிழ்ச்சி தானே?...

இன்றைக்கு நான் பர்கூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்து கொண்டு காங்கேயம் தொகுதியை விட்டுக் கொடுத்துள்ளேன் என்றாலும், என்னை இந்த அளவுக்குப் பெருமைப்படுத்தியுள்ளதில் காங்கேயத்திற்கும் சமபங்கு

உண்டு என்பதை இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக்கொள்வது எனது நீங்காக் கடமையாகும்.

நான் ஏற்கெனவே தெரிவித்ததைப் போலத் தர்மபுரி மாவட்டத்தின் பின்தங்கிய நிலைமையை எண்ணிப் பார்த்தும், இந்த மாவட்டத்தில் இதுவரை எந்த ஒரு அமைச்சரும் இல்லாதிருக்கும் நிலைமையைக் கருதியும்தான் இதனைத் தேர்ந்தெடுத்தேன். காங்கேயம் தொகுதி அமைந்துள்ள பெரியார் மாவட்டத்தில் ஏற்கெனவே பலர் அமைச்சர்களாக இருந்துள்ளனர். தற்போது கூட இரண்டு அமைச்சர்கள் - மாண்புமிகு முத்துசாமி அவர்களும், மாண்புமிகு செங்கோட்டையன் அவர்களும், அம்மாவட்டத்தைச் சார்ந்தவர்களாக உள்ளனர். மேலும், தற்போது காங்கேயம் தொகுதியில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள அண்ணன் ஆர்.எம். வீரப்பன் அவர்களையும் சேர்த்தால், மூன்று அமைச்சர்கள் அம்மாவட்டத்திற்கென உள்ளனர்.

அதன் காரணமாகத்தான் காங்கேயம் தொகுதியை விட்டுள்ளேனே தவிர, பர்கூரோடு காங்கேயமும் எனது தொகுதிதான். காங்கேயம் மட்டுமல்லாது என்னை முதன் முதலாகச் சட்டமன்றப் பேரவைக்கு அனுப்பிய மதுரை மாவட்டம்-போடி நாயக்கனூர் தொகுதிகூட இன்றும் எனது தொகுதிதான். இவை மட்டுமல்லாது, தமிழகத்தில் உள்ள அனைத்துத் தொகுதிகளிலும் மிகப் பெரிய இமாலய வெற்றியை வாக்காளப் பெருமக்கள் எங்கள் மீது பெரும் நம்பிக்கை வைத்து எங்கள் அரசுக்கு வழங்கியுள்ள நிலையில், அனைத்துத் தொகுதிகளையுமே எனது சொந்தத் தொகுதிகளாகக் கருதி நான் பணியாற்றுவதுதான், இன்றைய காலகட்டத்தில் என்மீது அளவுகடந்த நம்பிக்கை வைத்துள்ள தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும், அனைத்துத் தொகுதி மக்களுக்கும், நான் செலுத்தும் நன்றிக் காணிக்கையாகும் என்பதை உணர்ந்து செயல்படுவேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பர்கூர் தொகுதியை நான் எனது தொகுதியாகத் தேர்வு செய்த நேரத்திலேயே இந்த என் மனநிலையை வெளிப்படுத்தினேன். மிகமிகப் பின்தங்கிய மக்களைக் கொண்டதாகவும், இயற்கையிலேயே சுக்காங்கல் மிகுந்திருக்கும் தரைப் பகுதியைக் கொண்டதாகவும் உள்ள இத்தொகுதியின் பிரதிநிதியாகி, இதன் வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் பாடுபடவேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காகவே, இத்தொகுதியைத் தேர்ந்தெடுத்தேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தல் நேரத்திலேயே இத்தொகுதியின் ஒவ்வொரு கிராமத்திற்கும் நேரில் சென்று வாக்குச் சேகரிக்க எண்ணியிருந்தேன். அதற்கேற்றவாறு எனது சுற்றுப் பயணத்திட்டமும் வகுக்கப்பட்டு, பர்கூரில் நடைபெற்ற இதேபோன்றதொரு மாபெரும் பொதுக்கூட்டத்தில் மே 14-ந் தேதி கலந்து கொண்டுவிட்டு, சில கிராமங்கள் வழியாகக் கடந்த மே மாதம் 21-ந் தேதி சென்று கொண்டிருந்தபோதுதான், மனிதருள் போற்றுதற்குரிய சிறப்புமிகு பண்பாளரான திரு. ராஜீவ் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்ட துயரச் செய்தி எனக்குத் தெரிவிக்கப்பட்டு, உடனடியாக நிகழ்ச்சிகளை ரத்து செய்துவிட்டு, அவருக்கு அஞ்சலி செலுத்திட டெல்லி செல்ல வேண்டியதாயிற்று. அதன் காரணமாகவே பர்கூர் தொகுதியின் பல கிராமங்களுக்கும் என்னால் நேரில் வரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது. தேர்தல் தள்ளிவைக்கப்பட்ட சூழ்நிலையில், நான் வீட்டைவிட்டே வெளியேற முடியாத அளவுக்கு எனது உயிருக்குக் குறிவைத்து அலைந்த கூட்டத்தின் நடமாட்டம் மிகுந்திருந்ததால், நான் எங்கும் செல்லவே கூடாது என அறிவுறுத்தப்பட்டு, பர்கூர் தொகுதிக்கு மட்டுமல்லாது எத்தொகுதிக்கும் திரும்பச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இருந்தும், நான் வர இயலாத சூழ்நிலைக்கு ஆட்பட்டதைக் கருத்தில் கொண்டு, பர்கூர் தொகுதியிலும், காங்கேயம் தொகுதியிலும், தமிழகத்தின் அனைத்துத் தொகுதிகளிலும் எங்கள் அணிக்கு ''குருக்ஷேத்திரப் போரின் முடிவு தர்மத்திற்கே வெற்றி'' என அமைந்ததைப் போல, மாபெரும் வெற்றியைத் தேடித் தந்தீர்கள். அத்தகைய உங்களின் மேலான நல்லாதரவிற்கு எனது மனமுவந்த நன்றியினை மீண்டும் மீண்டும் மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தல் நேரத்தில் இருந்த பாதுகாப்பற்ற நிலை காரணமாக வர இயலாவிட்டாலும், தேர்தல் முடிந்தவுடன், நிலைமைகளைச் சீர்படுத்தி, சட்டம்-ஒழுங்கு பராமரிப்பில் தமிழகத்தில் ஏற்பட்ட சரிவைச் சரிபடுத்திக் கொண்டு, உங்களை





எல்லாம் நேரில் சந்தித்து நன்றி கூறுவேன் என, ஒவ்வொரு வீட்டிற்கும் எனது நேரடியான வேண்டுகோள் கடிதத்தினைக் கொடுத்திருந்தேன். சொன்னது சொல்லியபடி மீண்டும் உங்களை நேரில் சந்தித்து நன்றி கூற வந்துள்ளேன்.

நான் வெறுங்கையோடு வரவில்லை. பல கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு நலப்பணிகளைத் தொடங்கி, அவற்றைச் செயல்படுத்தும் திட்டங்களோடு வந்துள்ளேன்.

இப்போது உங்கள் மூலம் கேட்கிறேன்; தேர்தல் நேரத்தில் என்னைப் பற்றி என்னென்ன விமர்சனங்களை எல்லாம் சில ''அரசியல் மேதாவிகள்'' செய்தார்கள்! தேர்தலுக்காக மட்டுமே தலை காட்டுவேன் என்றும், தேர்தல் முடிந்தால் ஓடி ஒளிந்து கொள்வேன் என்றும், ஜெயித்தால் கோட்டைக்குக் கூட வரமாட்டேன் என்றும், உயிருக்குப் பயந்து ஒளிந்து கொள்வேன் என்றும், என்னென்ன கூறமுடியுமோ அத்தனையும் கூறிப்பார்த்தார்களே! அத்தனை ஏச்சையும் பேச்சையும் மீறித்தானே என்னை வெற்றி பெறச் செய்து ஆட்சி அமைக்கச் செய்துள்ளீர்கள்?... இன்றைக்கு நான் கேட்கிறேன், ''நான், இதோ இன்றும் என் உயிருக்கு ஊறு விளைவிக்க ஒரு கூட்டம் அலைந்து கொண்டுள்ளது'' என்ற எச்சரிக்கை இடையிலும் உங்களை எல்லாம் சந்திக்க ஓடோடி வந்துள்ளேன்! ஆனால், நான் ஓடி ஒளிந்து கொள்வேன் என வசை பாடியவர்கள் எங்கே?... நீங்கள் தான் சொல்ல வேண்டும் - அவர்கள் எங்கே?...

சட்டமன்றத்திற்குக் கூட ''வந்தால் முதலமைச்சராகத்தான் வருவேன்; எதிர்க்கட்சி வரிசையில் வந்து அமர மாட்டேன்'' எனத் தனக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கே துரோகம் செய்துவிட்டு, பதவியை ராஜினாமா செய்துவிட்டு ஓடி ஒளிந்துள்ளது யார்? நானா? அல்லது என்னைப் பற்றி இல்லாததும் பொல்லாததுமான விமர்சனங்களைச் செய்த அவர்களா?, என்பதை நாட்டு மக்கள்தான் நல்ல முடிவெடுத்துத் தீர்ப்பு வழங்க வேண்டும்.

வினை விதைத்தவர்கள் இன்று வினையை அறுவடை செய்து கொண்டுள்ளனர். நாம் தினை விதைத்தோம், எனவே அதை நாட்டு மக்களுக்கான நல்ல திட்டங்களாக அறுவடை செய்து படைத்துக் கொண்டிருக்கிறோம்.

இச்சிறப்புக்குரிய நிகழ்ச்சியைக் கூட, தொழில்துறையில் பின்தங்கியுள்ள தமிழகத்தை, இந்தியாவிலேயே முதன் மாநிலமாக்கிடும் எங்கள் இலக்கின் முதற்படிக்கான தொடக்க விழா எனச் சொன்னால் மிகையாகாது. பெரிய அளவிலான ஒரு தொழிற் கூடத்தைக்கூடக் கண்டிராத எனது பர்கூர் தொகுதியில், மிகப் பெரிய அளவில் உருவாக உள்ள ''கருங்கல் மெருகுத் தொழிற்சாலையும், மெருகிட்ட கருங்கல் பலகைகள் உற்பத்தித் தொழிற்சாலையும்'' இணைந்த தொழில் வளாகத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவாகும். இதற்கான மொத்த மதிப்பீடு 15 கோடி ரூபாய் என்பதை மெத்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுமட்டுமல்லாது, பர்கூர் தொகுதியும் ஒட்டுமொத்த தர்மபுரி மாவட்டமும் பயன்பெறும் வகையில், அரசின் பல்வேறு நலத்திட்டங்களும் இங்கே தொடங்கி வைக்கப் பட்டுள்ளன. இதுவரையிலும் கவனிப் பாரற்றுக் கிடந்த பர்கூர் தொகுதியில், பல்வேறு சாலைகளின் மேம்பாட்டுக்காக மட்டும் 2 கோடியே 53 இலட்சம் செலவில் சாலைகள் மராமத்துப் பணியும், பாலங்கள் கட்டும் வேலையும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் நேரத்தில், பர்கூர் தொகுதியிலிருந்து திருப்பதி செல்லும் பக்தர்கள் நலனுக்காக, நேரடியான சாலை வசதி செய்து தரப்படும் என்ற வாக்குறுதியினை வழங்கி இருந்தேன். சொன்னபடி அவ்வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், கிருஷ்ணகிரியில் இருந்து ஓர் நெடுஞ்சாலை பர்கூர் தொகுதி வழியாக மாரண்டஹள்ளி - குப்பம் தடத்தில் நேரடியாகத் திருப்பதி செல்ல, 66 இலட்ச ரூபாய் செலவில் சாலை மராமத்துப் பணி இன்றைக்குத் தொடங்கி வைக்கப்படுகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியினைக் குறிப்பிட்டுக்கூற விரும்புகிறேன். முக்கியமான இடங்களில் பாலங்கள் இல்லாததால், இத்தொகுதியின் போக்குவரத்துக்குப் பெரும் பாதகமாக இருந்துவரும் சூழ்நிலையை மாற்றி, 5 பெரிய பாலங்களைக் கட்டுவதற்கு மட்டும், ரூ.75 இலட்சம், ரூ.50 இலட்சம், ரூ.30 இலட்சம், ரூ.20 இலட்சம், ரூ.12 இலட்சம் என்ற வகையில் ஏறத்தாழ ஒரு கோடியே 87 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தகைய பெரிய பாலங்கள் குன்னத்தூர், பர்கூர், மாட்ரபள்ளி, பாம்பாறு, சிண்டகம்பள்ளி ஆகிய இடங்களில் அமைய உள்ளன.

''தேர்தல் நேரத்தில் மட்டும்தான் வருவேன்; மற்றபடி திரும்பிப் பார்க்கமாட்டேன்'' எனத் தேர்தல் நேரத்தில் இத்தொகுதியில் வந்து பேசாமல், மற்றபடி சென்ற இடமெல்லாம் என்னைப் பற்றி விமர்சித்தார்களே சில ''மேதாவிகள்'' அவர்களுக்காக இவற்றை எல்லாம் தெரிவிக்கவில்லை; என்னை நம்பி ஏற்றுக் கொண்டீர்களே - உங்கள் நம்பிக்கை வீண் போகவில்லை என்பதை விளக்கும் வகையில், சொன்னதைச் சொல்லியபடி செய்து முடித்துள்ளோம் என்பதை விளக்கிக் கூறவே இவற்றைக் குறிப்பிடுகின்றேன்.

இவை மட்டுமல்லாது, இத்தொகுதியின் மருத்துவ வசதியைப்

**தமிழகத்தில் உள்ள அனைத்துத் தொகுதிகளிலும் மிகப்பெரிய இமாலய வெற்றியை வாக்காளப் பெருமக்கள் எங்கள் மீது பெரும் நம்பிக்கை வைத்து, எங்கள் அரசுக்கு வழங்கியுள்ள நிலையில், அனைத்துத் தொகுதிகளையுமே எனது சொந்தத் தொகுதிகளாகக் கருதி நான் பணியாற்றுவதுதான், இன்றைய கால கட்டத்தில் என்மீது அளவுகடந்த நம்பிக்கை வைத்துள்ள தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும், அனைத்துத் தொகுதி மக்களுக்கும் நான் செலுத்தும் நன்றிக் காணிக்கையாகும்.**



பெருக்கும் வகையில், ஏற்கெனவே தொகுதியில் இருந்துவரும் மருத்துவமனைகளோடு, பெருங்கோப்பனப் பள்ளியில் இன்று முதல் புதிதாக ஆரம்பச் சுகாதார நிலையம் செயல்பட உள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்வதோடு, புதிதாக இன்று தொடங்கப்படும் மருத்துவமனைக்கு இன்றே கட்டடம் கட்ட அடிக்கல் நாட்டப்படுகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். பர்கூர் மருத்துவமனை தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளதால், அடிக்கடி ஏற்படும் சாலை விபத்துக்களால் பாதிக்கப்படுவோரைப் பாதுகாக்க, புதிதாக இரு ஆம்புலன்ஸ் வண்டிகள் இம்மருத்துவமனைக்கு வழங்கப்படுகிறது.

பர்கூர் தொகுதிக்காக மட்டுமல்லாமல் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள நொச்சிக்குப்பம், ஆலப்பட்டி ஆகிய ஊர்களில் உள்ள சுகாதார நிலையங்களுக்கும், அரூர், ஊத்தங்கரை மருத்துவமனைகளில் உள்ள மகப்பேறு வார்டுகளுக்கும், தனித்தனியே கட்டடம் கட்ட அடிக்கல் நாட்டப்படுகின்றன. முத்துக்கணபதி, புத்தா நத்தம் ஆகிய ஊர்களில் உள்ள மருத்துவமனைகளுக்கும், கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு பணிகள் தொடங்க உள்ளன. புலிக்கரையில் மாணவர் தங்கும் விடுதி ரூ.7.97 இலட்சம் செலவில் கட்டப்பட உள்ளது.

பர்கூர் தொகுதியில் உள்ள ஏறத்தாழ 300 பெரிய, நடுத்தரமான மற்றும் குக்கிராமங்கள் போதிய குடிநீர் வசதியற்று, செய்யப்பட்ட குடிநீர் வாரிய வேலைகளும் அரையும் குறையுமாக உள்ளது என்ற நிலை என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கி வரும் எங்கள் அரசு, உடனடியாக அக்குறைபாடுகள் நீங்கிக் குடிநீர்த் தட்டுப்பாடற்ற நிலைமை உருவாக்க, 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கி உள்ளது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இவற்றில் ஆதிதிராவிடர்களுக்காகவே உள்ள 66 குடியிருப்புகளும் அடங்கும், இத்திட்டங்கள் அனைத்தும் வரும் ஓராண்டுக்குள் செய்து முடிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்தில் எவ்விதக் குடிநீர் ஆதாரமும் இன்றி, இவ்வளவு காலமும் இன்னலுற்றுவரும் தேன்கனிக்கோட்டை பேரூராட்சியின் துயரத்தைத் துடைக்கும் வகையில் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, பணிகள் 1992 டிசம்பருக்குள் முடிக்கப்படவேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

உள்ளாட்சித் துறையின் மூலம் ஆதிதிராவிடர் குடியிருப்புகள் 1791-க்கும் பள்ளிக் கட்டடங்கள் 19-க்கும், ஊராட்சி மன்ற அலுவலகங்கள் 76-க்கும், சத்துணவுக் கூடங்கள் 23-க்கும், தற்போது அடிக்கல் நாட்டப்படுகிறது. இவை அனைத்திற்கும் ரூபாய் 3 கோடியே 94 இலட்சம் மதிப்பீடாகும் என்பதைத் தர்மபுரி மாவட்ட மக்களும், குறிப்பாக பர்கூர் தொகுதி மக்களும் பெரிதும் வரவேற்பார்கள் என நம்புகிறேன்.

நூற்றுக்கணக்கான பெற்றோர்களின் நீண்ட நாளைய வேண்டுகோளை நிறைவு செய்கிற வகையிலும், கல்வி வளர்ச்சியில் நாட்டம் கொண்டுள்ள மாணவ, மாணவியர்களுக்கு மேலும் ஊக்கம் தருவதற்காகவும், தர்மபுரி மாவட்டத்திலுள்ள மாத்தூர் மற்றும் சிங்காரப்பேட்டை ஆகிய இரண்டு அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்காக, இப்போது தனியாக இரண்டு உயர்நிலைப் பள்ளிகள் தொடங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அத்திக்கானூர் என்ற ஊரில் இயங்கி வந்த உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளியாகவும் மாற்றப்பட்டு உள்ளது. மேலும் வள்ளிப்பட்டி, கந்தனஹள்ளி முதலான 5 இடங்களில் உள்ள தொடக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளித் தகுதிக்கு உயர்த்தப்பட்டுள்ளன. ஏனெனில் கல்விதான் எத்தனையோ ஏழைக்

குடும்பங்களில் ஒளியேற்றி, அவர்களுக்கு வாழ வழிகாட்டி உள்ளது. அந்த அடிப்படையில்தான் இன்று கல்விக்கு முன்னுரிமை கொடுத்து வருகிறது எங்கள் அரசு.

இவைமட்டுமல்லாது, தர்மபுரி மாவட்டம் முழுவதும் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ.38.50 இலட்சம் செலவில் கட்டப்பட்ட 150 தொகுப்பு வீடுகள், 15 ஊராட்சி மன்ற அலுவலகங்கள், 5 பள்ளிக் கட்டடங்கள் ஆகியவை இங்கே திறந்து வைக்கப்படுகின்றன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ 1000 பேருக்கு ரூ.24.35 இலட்சம் கடனுதவி இன்று வழங்கப்படுகிறது.

மள்ளம்பாடி கிராமத்திலும், குருவிநாயனப்பள்ளி கிராமத்திலும், மண் சாலையைக் கல் சாலையாக மாற்றவும், கழிவுநீர்க் குட்டை அமைக்கவும் ரூ.14 இலட்சம் ஒதுக்கப்பட்டு பணிகள் தொடங்கப் படுகின்றன.

ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ், பர்கூரில் சமுதாயக்கூடம் அமைக்க ரூ.20 இலட்சம் ஒதுக்கப்பட்டு இன்று அடிக்கல் நாட்டப்படுகிறது. பர்கூர் பேருந்து நிலையத்தைச் சீராக்கவும், விரிவுபடுத்தவும் ஒதுக்கப்பட்டுள்ள 10 இலட்ச ரூபாய் திட்டத்தை ஏனைய திட்டங்களோடு இணைத்து, பர்கூர் பேரூராட்சி ஒருங்கிணைந்த எல்லா நலன்களையும் பெறத் திட்டமிடப்பட்டு, ஒரு கோடி ரூபாய் அளவுக்கான செயல் திட்டம் இன்று தொடங்கப்படுகிறது என்னும் மன நிறைவு அளிக்கத்தக்க அறிவிப்பை வெளியிடுவதில் மெத்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவை மட்டுமல்லாமல், தொகுதியின் அனைத்துப் பகுதி மக்களும் பயன்பெறும் வகையில், ஏற்கெனவே விடப்பட்டுள்ள பேருந்துகளோடு இன்று முதல் 7 புதிய பேருந்துகள் விடப்படுகின்றன. இவைதவிர, கிருஷ்ணகிரியிலிருந்து மேட்டூர் - பவானி வழியாக ஈரோடு சென்று வரும் அனைத்துப் பேருந்துகளும், இனிமேல் பர்கூரில் இருந்து புறப்பட ஆணையிடப்பட்டுள்ளது. இவை தவிர, தர்மபுரி மாவட்டம் முழுவதும் உள்ள ஊர்களில், சந்தை நாட்களில் மட்டும் இயங்குவதற்காக நான்கு சந்தைப் பேருந்துகள் விடப் பட உள்ளன. இவற்றின் மூலம் சந்தைகளுக்குப் பொருள்களைக் கொண்டு செல்வோரும், வாங்கிச் செல்வோரும் பயன் அடைவார்கள்.

மாவட்டத் தலைநகரான தர்மபுரியில் எல்லா வசதியுமிக்கதாக, நகரப் பேருந்து நிலையம் ஒன்று தியாகி தீர்த்தகிரியார் மைதானத்தில், 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் திட்டத்திற்கு, இன்று அடிக்கல் நாட்டப் படுகிறது.

கிருஷ்ணகிரியில் பேருந்து நிலையத்திற்கெனவும், அங்கே அங்காடிகள் கட்டவும், ரூ.88 இலட்சம் ஒதுக்கப்பட்டு அதற்கான அடிக்கல் நாட்டு விழாவும் இங்கே நடைபெறுவது, கிருஷ்ணகிரி நகர மக்களுக்கு மட்டுமல்லாது, ஒட்டு மொத்தமாகத் தர்மபுரி மாவட்ட மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி அளிக்கும் செய்திகளாகும்.

ஏழை எளியோர் மற்றும் சாதாரண மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான எங்கள் அரசின் இயக்கம், அவர்களது நியாயமான வாழ்க்கைக்கு உத்தரவாதம் தர எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராய் இருக்கிறது.

எந்த வசதியும் தொடமுடியாத தொலைதூரத்தில் உள்ள கிராமங்களில் தேவையான வசதிகளைப் பெருக்குவதும், அங்குள்ள கிராம மக்களுக்கு வாழ்வு வளங்களை உருவாக்கி வழங்குவதும், எங்களது அரசின் தலையாய கடமை ஆகும். நகரத்து மக்களின் வாழ்வும், வளமும், கிராமத்து மக்களுக்கும் கிடைக்க வழிவகைகள் செய்து தர வேண்டும் என்ற எண்ணத்தை மனதில் இருத்தித்தான், ஒரு நகரத்திற்கு முன்னுரிமையோடு வழங்கப் படுகிற அனைத்து வசதிகளையும், கிராமப் பகுதிகளிலும் கிடைக்கிற வகையில், 'மாதிரி கிராமம்' ஒன்று ரூ.3 கோடி மதிப்பீட்டுச் செலவில் பர்கூரில் அமைக்கப்பட உள்ளது. இதில் சாலைகள், விற்பனைக் கூடங்கள், தொடக்கப்பள்ளி, சமுதாய நலக் கூடம், விளையாட்டு மைதானம், தாய்சேய் நல மையம், நூலகம், வழிபாட்டு மையம், மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் ஆகியவைகளைக் கொண்ட 300 தொகுப்பு வீடுகள் கட்டப்படும். இவைகள் எல்லாம் விஞ்ஞான வசதிகளைக் கிராமங்களுக்கு எடுத்துச் செல்லவேண்டியது, காலத்தின் கட்டாயம் என்பதை உணர்த்தத்தான்.

இதுவரை பர்கூர் தொகுதி மக்களுக்கும் தர்மபுரி மாவட்ட மக்களுக்கும் இன்று தொடங்கிவைக்கப் பட்டுள்ள திட்டங்களை மட்டுமே சொல்லி உள்ளேன். இன்றைய விழா நிகழ்ச்சியிலேயே நான் தேர்தல் நேரத்தில் கூறியிருந்த இன்னொரு வாக்குறுதியான 'மாம்பழக்கூழ் தயாரிப்புத் தொழிற்சாலை'-க்கும் அடிக்கல் நாட்டவே திட்டமிட்டிருந் தோம். ஆனால், அதற்கான அடிப் படை வேலைகள் சில பூர்த்தியாக வேண்டியுள்ளதால், இன்று அது தொடங்கப்படவில்லை. விரைவில் இதே போன்ற இன்னொரு விழா இங்கே நடைபெற உள்ளது; அப்போது அத்தொழிற்சாலைக்கான பணி தொடங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று நடைபெறும் இவ்விழா நிகழ்ச்சியின் மூலம் தர்மபுரி மாவட்டமும், பர்கூர் தொகுதியும் பயன் பெறும் வகையில் தொடங்கப் பட்டுள்ள திட்டங்கள் எல்லாவற்றிற்குமான மொத்த மதிப்பீடு ரூ.33 கோடியே 97 இலட்சம் என்பதை மெத்த மகிழ்ச்சியோடு அறிவிக்க விரும்புகிறேன்.

இவை எல்லாம் புதிதாக அமைந்துள்ள உங்கள் அரசு, வறட்சியான

## சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு ஆஸ்திரேலிய தூதரகம் புத்தகங்கள் நன்கொடை

சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆஸ்திரேலிய பாடத்திட்டத்தினை ஊக்குவிக்கும் பொருட்டு, ரூபாய் ஒரு இலட்சம் மதிப்பில், 71 ஆஸ்திரேலிய மொழிப் புத்தகங்கள் ஆஸ்திரேலிய தூதரகத்தால் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்திற்கு வழங்கியுள்ள சில திட்டங்களாகும். இதேபோன்ற பல திட்டங்கள் தமிழகத்தின் அனைத்துத் தொகுதிகளுக்கும் வழங்கப்படும் என்பதை முதலமைச்சர் என்னும் நிலையில் இருந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

சமுதாயத்தின் பல்வேறு பிரிவினருக்கும் அவர்களது இன்னலை முடிந்தவரை காலத்தோடு தீர்த்து வைக்கிற வகையில், நாங்கள் காரியம் ஆற்றி வருவதை நீங்கள் அறிவீர்கள்.

தமிழகத்திலுள்ள ஏறத்தாழ 30 இலட்சம் கைத்தறி நெசவாளர்கள் துயர் துடைக்கிற வகையில், நூல் விலையினைக் குறைக்க வேண்டும் எனவும், நெசவாளர்களுக்குக் குறைந்த விலையில் சிட்ட நூல் வழங்க வேண்டும் எனவும், நான் சில நாட்களுக்கு முன்பு மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்திருந்தேன் என்பதை, இங்கு நான் நினைவு படுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

கோரிக்கை விடுத்ததோடு மட்டும் நான் நின்றுவிடவில்லை. 'நூல்' என்றால் அதில் நிறைய சிக்கல் இருக்கும் என்பது எனக்குப் புரியும்; என் அளவில் அந்த சிக்கலைத்தீர்க்கிற வழிகளும் எனக்குத் தெரியும்.

எனவே, ஜூலை மாதத்தில், கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு என்ன விலையில் நூலினை கைத்தறி நூல் இயக்குநர் வழங்கினாரோ, அதே குறைந்த விலையில் 2,000 பேல்களை ஆகஸ்டு மாதத்திற்குத் தனிப்பட்ட நெசவாளர்கள் பயன்பெறுகின்ற வகையில் வழங்க வேண்டுமென்று ஆணையிட்டுள்ளேன்.

இது தினந்தோறும் பல்வேறு பிரச்சினைகளால் பரிதவிக்கும் சாதாரண மக்களின் பாதுகாப்பிற்கு, இந்த அரசு ஓடோடி வந்து உதவும் என்பதற்கான சாட்சியமே அன்றி வேறல்ல.

எங்கள் பயணம் தொடர்கிறது; பணிகள் துரிதப்படுத்தப்படுகின்றன. எதிர்ப்பட்ட மிரட்டல்களையும் உருட்டல்களையும் தவிடுபொடியாக்கித் தகர்த்து எறிந்துதான் கழக ஆட்சி மக்களாட்சியாக மலர்ந்திருக்கிறது! எனவே நாங்கள் -

- தமிழகம், இந்தியத் துணைக் கண்டத்தின் முதன் மாநிலமாகத் திகழவும்;




- சமுதாயத்தின் நலிந்த மற்றும் பின்தங்கிய தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் நல்வாழ்வு பெறவும்; உரிய பல நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம்.

தேர்தல் காலத்தில் நான் நாட்டு மக்களுக்குத் தெரிவித்திருந்த வாக்குறுதிகளைக் கடந்த இரண்டு மாத கால அளவிலான எங்கள் ஆட்சியில் ஒன்றன்பின் ஒன்றாக நிறைவேற்றி வருகின்றோம்.

அவ்வகையில், நான் தேர்தல் நேரத்தில் பிரதானமாக ஒவ்வொரு ஊரிலும் அறுதியிட்டுக் கூறிவந்த ஓர் வாக்குறுதி - ''நாங்கள் ஆட்சிக்கு வந்தால் முதல் வேலையாக, கடந்த இரண்டாண்டுக் காலத் தி.மு.க. ஆட்சியில் புகுத்தப்பட்ட தீமையான மலிவு விலை மதுக்கடைகளை ஒழிப்போம்'' என்பதாகும்.

அவ்வாக்குறுதியை நிறைவேற்றுகிற வகையில் முதலமைச்சராகக் கோட்டையில் சென்று அமர்ந்தவுடன், நான் போட்ட முதல் கையெழுத்தே ''மலிவு விலை மதுக்கடைகளை மூட வேண்டும்'' எனப் போடப்பட்ட உத்தரவாகும். இதன் மூலம் ஏழைத் தாய்மார்களின் கண்ணீரை ஓரளவேனும் துடைத்தோம் என்ற மன நிம்மதியைப் பெற்றுள்ளோம்.

மலிவு விலை மதுக்கடைகளை மூடிய பின்னரும்கூட இன்னும் தாய்மார்களின் துயரத்தை முழுமையாகத் துடைக்க முடியவில்லையே என்ற ஏக்கம் என்னுள் இருந்து கொண்டு தான் உள்ளது.

காரணம், மலிவு விலை மதுக்கடைகளை மூடிய பின், ஆங்காங்கே கள்ளச் சாராயம் பெருகி வருவது பற்றிய தகவல் என் கவனத்திற்கு வந்து கொண்டுள்ளது. இந்தக் கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியவில்லையே என்ற ஏக்கத்தில்தான், நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களே கூட, மதுவிலக்கில் தனது விடாப்பிடியான கொள்கையைத் தளர்த்திக் கொண்டார். ஆனால் - இன்றைய தினம் அமைந்துள்ள உங்களது புதிய அரசு, மலிவு விலை மதுக்கடைகளை ஒழித்ததைப் போல, கள்ளச் சாராயத்தையும் அடியோடு ஒழிக்க உறுதி பூண்டுள்ளது.

கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் மற்றும் விற்போர் மட்டுமல்லாது, அதற்குக் காரணமானவர்களும் யார் யார் என்பதைக் கண்டுபிடித்து, அவர்கள் யாராக இருந்தாலும், எக்கட்சியை அல்லது சமுதாயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கள்ளச் சாராயத்தை ஒழிப்பதில் அரசின் நிர்வாக அமைப்பும் பரிபூரணமாக ஒத்துழைத்தால் தான், முழுமையாக இதனை ஒழிக்க முடியும். எனவே அரசின் சார்பில் ஓர் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அதனை இன்று அறிவிக்கின்றேன். கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்குரிய பொறுப்பு உயர்மட்ட அதிகாரிகளோடு நின்றுவிடாமல், ஒவ்வொரு கிராம நிர்வாக அலுவலர் (V.A.O.) மற்றும் சம்பந்தப்பட்ட காவல் நிலைய சப்-இன்ஸ்பெக்டரைச் சார்ந்ததாகும்.

எங்கேனும் கள்ளச் சாராயம் காய்ச்சுவதோ அல்லது விற்பதோ கண்டுபிடிக்கப்பட்டால், முதல் தடவையாக - சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சப்-இன்ஸ்பெக்டர் எச்சரிக்கப்படுவார்கள்.

இரண்டாவது முறையும் அவர்கள் பகுதியில் கள்ளச் சாராயம் கண்டுபிடிக்கப்பட்டாலோ, பிடிபட்டாலோ, சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக

அலுவலர் மற்றும் சப்-இன்ஸ்பெக்டர்கள், வேலையை விட்டே சஸ்பெண்ட் செய்யப்படுவார்கள் என்ற திட்டவட்டமான ஓர் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அதாவது, தவறு முதல் முறை என்றால் கண்டிக்கப்படுவார்கள்; மறுபடியும் நடைபெற்றால் தண்டிக்கப்படுவார்கள். சப்-இன்ஸ்பெக்டர்கள் மட்டுமல்லாது அவர்களின் நேரடி மேற்பார்வை அதிகாரிகளான இன்ஸ்பெக்டர்கள், மற்றும் டி.எஸ்.பி.க்களுக்கும் கூட, இத்திட்டத்தில் உரிய பொறுப்பு நிர்ணயிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தகைய நடவடிக்கைகள் மூலம் கள்ளச் சாராயமும் விரைவில் ஒழிக்கப்படும் என்பதை, நமது அருமைத் தாய்மார்களுக்கு இந்த நல்ல வேளையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுவிலக்குக் கொள்கையில் மட்டுமல்லாது, சட்டம், ஒழுங்கைப் பராமரிப்பதிலும் கடந்த இரண்டு மாத காலத்தில் தமிழகத்தில் கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளோம். ''அமைதிப் பூங்கா'' வாகத் திகழ்ந்த நமது தமிழ் மண்ணை ''அமளிக் காடாக'' மாற்றிடத் திட்டம் தீட்டிய தீயவர்கள், இன்று நமது காவல் துறையின் உரிய நடவடிக்கைகள் காரணமாக, மெல்ல மெல்லத் தலைமறைவாகி வருவதை அறிவீர்கள்.

நமது காவல்துறையின் இடுக்கிப்படி எவ்வளவு கடுமைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை, அந்தத் தீயசக்திகள் தமிழகத்தில் தாக்குப் பிடிக்க முடியாது, அண்டை மாநிலமான கர்நாடகத்தில் சென்று ஒளிந்து கொண்டிருப்பதில் இருந்து நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

இன்னும் காவல் துறையினை நவீனப்படுத்திடவும், அவர்களுக்குத் தேவையான பல நவீன ஆயுதங்கள் மற்றும் சாதனங்களைப் பெறவும், மத்திய அரசின் உதவியை நாடியுள்ளோம். அத்தகைய உதவிகளையும் விரைவில் பெற்று, ''அமைதிக்குத் துளியும் பங்கமில்லாத தமிழகமாக'' நம் தாயகத்தை மாற்றுவோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவை மட்டுமல்லாது, தமிழகம் முழுவதும் உள்ள கிராமங்கள் அனைத்தும் நல்ல சாலை வசதியையும், சுகாதாரம், குடிநீர், தெரு



**★ கல்வியும் அறிவும் பெறுவது, மனிதன் மற்றவர்களுக்குத் தொல்லை கொடுக்காமல் மனிதத்தன்மையோடு வாழவே!**

விளக்குகள் போன்ற அடிப்படைத் தேவைகளையும் பெற்றிடும் வகையில், தேர்தல் வாக்குறுதியில் சொன்னபடி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் வழங்கப்பட்டு திட்டங்கள் செயல்பட உள்ளன.

தமிழகத் திருக்கோயில்கள் பல நலிவுற்ற நிலையில் இருப்பதை உணர்ந்து, அவை அனைத்தையும் சீர்படுத்தி உடனடி மராமத்துப் பணிகள் மேற்கொள்வோம் என அறிவித்திருந்தோம். கோயில்கள் நம் கலாச்சாரத்தின் சின்னங்கள் என்பதை வலியுறுத்தும் வகையில் இத்திட்டத்தில் பொது மக்களையும் நேரடியாக ஈடுபடுத்தும் வகையில், இன்று செயல்படத் தொடங்கியுள்ளோம். பல்லாயிரக்கணக்கான புராதனம் மிக்க திருக்கோயில்களைத் தமிழகம் எங்கும் பராமரிக்க வேண்டியுள்ளது. இதுவரையில் பொது மக்கள் மூலம் சில இலட்சங்களே கிடைத்துள்ளது. எனவே, தெய்வ பக்தியுள்ள நற்சிந்தனையாளர்கள் அனைவரும் அவரவர் சக்திக்கேற்ப, ஒரு ரூபாய் அளிக்க முன்வந்தாலும்கூட, அவ்வாறு சிறுகச் சிறுகச் சேரும் நிதிகளையும் ஒன்றாகச் சேர்த்து, நாம் நினைத்தபடி அனைத்துக் கோயில்களையும் உரிய முறையில் சீர்படுத்தி பராமரித்து, நம் கலாச்சாரத் தொன்மையைப் பாதுகாப்போம் என அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு இரண்டு மாத காலத்தில் வேறு எந்த அரசும் நிகழ்த்திடாத சாதனைகளை நிகழ்த்திக் காட்டியுள்ளோம். விரைவில் உங்களது அரசின் புதிய பட்ஜெட், தமிழகச் சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. பட்ஜெட் வெளிவருகிற போது நாங்கள் சொன்ன வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படுகிறது என்பதை நீங்கள் அறியலாம். விவசாயிகள், நெசவாளர்கள், மீனவர்கள், ஆடவர், பெண்டிர் அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் பட்ஜெட்டாக அது அமைந்திருக்கும் என்பதை மட்டும் இப்போது உங்கள் மத்தியில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மொத்தத்தில், இந்தியத் துணைக் கண்டத்தில்,

திறமைக்கும் - நேர்மைக்கும் -
வளர்ச்சிக்கும் - உயர்வுக்கும் -
லஞ்ச ஊழலற்ற தன்மைக்கும் -

எடுத்துக்காட்டான அரசு தமிழக அரசு ஒன்றே, எனும் பெயர் எடுக்கும் வகையில் எங்கள் பணி அமையும்.

தமிழகம் தலைநிமிர்ந்து தன் தனித்தன்மையோடும், தனிச் சிறப்போடும் திகழ உங்கள் பிரதிநிதியாக என்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளேன்.

இன்று வரையிலும் என் உயிருக்கு உலை வைக்கும் முயற்சி சிலரால் மேற்கொள்ளப்பட்டுள்ள சூழ்நிலையிலும், வழங்கிய வாக்குறுதிப்படி உங்களுக்குத் தொண்டாற்ற விரைந்து வந்துள்ளேன். தொடர்ந்து உங்களுக்காகப் பணியாற்றுவதை என் வாழ்வின் மகிழ்ச்சியான கடமையாகக் கருதி ஓயாது உழைத்திடுவேன்.

இதய தெய்வம் புரட்சித் தலைவர் புகழும் பெருமையும் என்றென்றும் தமிழகத்தின் நிலைத்திடும் வகையில், என் பணி, பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். வழியில் என்றென்றும் தொடரும் என்பதைத் தெரிவித்து, அதற்கு உங்களது மேலான நல்லாதரவும், ஒத்துழைப்பும் இருந்திட வேண்டும் என வேண்டி,

அனைவருக்கும் எனது நன்றியைக் காணிக்கையாக்கி,

அண்ணா நாமம் வாழ்க!

புரட்சித் தலைவர் நாமம் வாழ்க!

எனக்கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

# நல்லாசிரியர்களை நாடு மறவாது

செப்டம்பர் திங்கள் 5-ஆம் ஆசிரியப் பெருந் தகைகள் யாவரும் நினைவில் வைத்துப் போற்றும் பொன்னாளாகும். இந்தியத் திருநாடு முழுவதும் இந்நாள் கொண்டாடப்பட்டாலும், தமிழகத்தைப் பொறுத்தமட்டில் தனிச்சிறப்புடனும், பெருமையுடனும் கொண்டாடப்படும் நாளாகும். காரணம் தமிழகத்தில் கல்வி பயின்று, தமிழகத்திலேயே ஆசிரியராகவும் பணிபுரிந்த முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாள் தான் ஆசிரியர் தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணன் அவர்கள் ஆசிரியராகப் பணியாற்றிய தோடல்லாமல், துணை வேந்தர், அரசதூதர், குடியரசுத் துணைத் தலைவர் மற்றும் இந்திய நாட்டிலேயே மிக உயர்ந்த பதவியாகக் கருதப்படும் குடியரசுத் தலைவர் பதவியும் பெற்று சிறப்புடன் பணியாற்றினார். தத்துவமேதையாக விளங்கிய போதிலும், உயர்பதவிகள் பலவகித்த போதிலும் மக்களால் பெரிதும் புகழ்ந்து போற்றிப் பாராட்டப்பட்ட பெருமைக்குரிய தலைவராகப் பணியாற்றிய போதிலும், அவர் விரும்பிப் போற்றிய பணி ஆசிரியப் பணியேயாகும்.

டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் ஆசிரியர்களுக்கெல்லாம் ஒரு முன்மாதிரியாக விளங்கியவர் என்றால் மிகையாகாது. அறிவுத்திறன் மிக்கவராகவும், கடினமானவற்றையும் எளிமையாக விளக்கும் ஆற்றல் மிக்கவராகவும், மாணவர்களின் உள்ளத்தையே ஈர்க்கும் காந்த சக்தியாகவும் விளங்கினார். ஆசிரியப் பெருமக்கள் அவரது போதனைகளையும், வாழ்ந்துகாட்டிய விதத்தையும் மனதில் கொண்டு பணியாற்றினால், வருங்காலச் சந்ததியினரை சிறந்த முறையில் உருவாக்கலாம்.

''ஆசிரியர் இன்று ஏங்கினால், நாளை நாடு ஏங்கும்'' என்றார் பேரறிஞர் அண்ணா. தமிழக அரசு ஆசிரியர்களுக்குப் பணிப்பாதுகாப்பும், ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி உரிய ஊதியமும் வழங்கியுள்ளது. ஆசிரியர்களின் குறைகளைத் தீர்ப்பதிலும் அரசு கவனம் செலுத்துகிறது. மேலும், பள்ளி ஆசிரியர்களுக்கான மாநில விருதுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் பின்வரும்




தருமபுரி மாவட்டக் கூட்டுறவு ஆவின் பால் உற்பத்தியாளர்கள்—ஒன்றியம் DPD
கிருட்டிணகிரி-635 002.

''ஆரோக்கியமான வாழ்விற்கு

## ஆவின் பால்

பால் உபபொருட்களை வாங்கி உபயோகியுங்கள்''



தருமபுரி மாவட்டத்தில் மென்மேலும் தொழில் வளம் பெருகி நலிவுற்ற மக்கள் மேம்பட எங்களது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

இங்ஙனம்

**கிராமப்புறத் தொழில்வளம் பெருக்கப் பாடுபடும்
தருமபுரி மாவட்டக் கூட்டுறவுப்
பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், கிருட்டிணகிரி-2.**

| | | |
|---|---|---|
| டாக்டர் ஆர்.சாலமோன், பி.வி.எஸ்சி., நிர்வாக இயக்குநர் | மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் | ந.முருகன், இ.ஆ.ப. மாவட்ட ஆட்சியர் ஒன்றியத் தலைவர் |

IPRO 492/91 DPI Dt.8.8.91

விவரப்படி 228 ஆசிரியர்களுக்கு ஆண்டுதோறும் விருதுகள் வழங்கப்படுகின்றன.

தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள்-112, உயர் நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்கள்-112, ஆங்கிலோ இந்தியப் பள்ளி ஆசிரியர்கள்-2, மெட்ரிகுலேஷன் பள்ளி ஆசிரியர்கள்-2, கூடுதல்-228.

இவ்விருதுகள் ஒவ்வொன்றும் ரூ.1,000 பணமுடிப்பு, வெள்ளிப்பதக்கம், தகுதிச்சான்றிதழ் ஆகியவற்றைக் கொண்டது. இந்திய அரசும் ஆண்டுதோறும், தேசிய விருதுகளை வழங்கி ஆசிரியர்களைச் சிறப்பிக்கிறது. ஆசிரியர்களும் தங்களது கடமைகளைச் செம்மையாகச் செய்ய வேண்டும் என அரசு எதிர்பார்க்கிறது.

''கல்வி நிலையங்களில் பயின்று திரும்பும் போது ஒரு மாணவன் அனைத்துப் பண்புகளும் கொண்ட மானிடனாக வெளியே வரவேண்டு மென்பதுதான், கல்வியின் குறிக்கோளாக இருக்க வேண்டும்'' என்றார் அறிவியல் மேதை ஐன்ஸ்டீன்.

''ஆசிரியர்களுக்கு நான் சொல்லக் கூடியது ஒன்றுதான், சுதந்திரத் தத்துவத்தைக் கற்றுக் கொடுங்கள் என்பதுதான். பாண்டித்யத்தைக் காட்டி கற்பிப்பது பயனில்லை. ஆசிரியர்களது உண்மையான ஒழுக்கத்தாலே, மாணவர்கள் தாங்களாகவே உணர்ந்து கொள்ள வேண்டும். அதுவே சிறந்த முறையில் கல்வி கற்பிப்பதாகும்'' என்றார் அண்ணல் காந்தியடிகள்.

மேலும், ''நமது ஆசிரியர்கள் மிகவும் உயர்ந்த தார்மீக ஒழுக்கம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். மிகவும் ஏழையான இந்தியன்கூட மிகச் சிறந்த கல்வி பெறுவதற்கான நிலைமையைத் தோற்று விக்க வேண்டும்'' என்றும் அண்ணல் காந்தியடிகள் கூறியுள்ளார்.

நமது தேசத் தந்தையும், அறிஞர் பெருமக்களும் காட்டிய வழியை ஆசிரியப் பெருந்தகைகள் பின்பற்றி நடக்க வேண்டியது அவசியம். ஆசிரியப் பெருமக்கள், கல்வியறிவோடு ஒழுக்கம், தூய சிந்தனை, நற்பண்புகள், கட்டுப்பாடு, உழைப்பில் ஆர்வம், மூத்தோரை மதிக்கும் பண்பு, சேவை மனப்பான்மை ஆகிய தன்மைகளும் மாணவர்கள் உள்ளத்தில் விதைத்துப் பயிராக்கப்பாடுபட வேண்டும்

ஆசிரியப் பணியைப் பிறபணிகளைப் போன்று கருதிவிடாமல் ''பேச்சிலே பொழுதைப் போக் காமல் செயலில் இறங்க வேண்டிய காலம் இது. தேச நலனுக்காக இந்தப் பணியில் உங்களாலான தியாகத்தைச் செய்யும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்'' என்ற அண்ணல் காந்தியடிகளின் வேண்டுகோளை நிறைவேற்றுவதுதான், ஆசிரியப் பெருமக்கள் நம்நாட்டிற்குச் செய்யும் நன்றிக் கடனாகும்.

அனைத்திற்கும் மேலாக ''நல்லாசிரியர்களை நாடு என்றும் மறவாது நல்லாசிரியர்கள் நாட் டினை என்றும் மறவாதவர்கள்'' எனும் டாக்டர். எம்.ஜி.ஆர். அவர்களின் வாக்கிற்கிணங்க, அந்த நிலை தோன்றிட ஆசிரியப் பெருமக்கள் பாடுபட வேண்டியது தலையாய கடமையாகும்.



**இந்தியாவுக்கான இங்கிலாந்து நாட்டுத் தூதர் திரு.டேவிட் குட்ஆல் அவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களைச் சென்னையில் சந்தித்தார் (23.8.91).**

# தென்னாட்டுத் திலகர் வ.உ.சி.



**'தென்னாட்டுத் திலகர்' என்று போற்றிப் புகழப்படும் 'கப்பலோட்டிய தமிழன்' வ.உ.சிதம்பரனாரின் வீர வரலாற்றை விளக்கும் இக் கட்டுரை, அன்னாரின் பிறந்த நாளையொட்டி (செப்டம்பர்-5) வெளியிடப்படுகிறது.**

இந்திய சுதந்திரப் போரின் தளபதிகளுள் ஒருவரான வ.உ. சிதம்பரனார் 1872-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ஆம் தேதி ஒட்டப்பிடாரம் என்ற ஊரில் பிறந்தார். தமிழ்நாட்டில், திருநெல்வேலி மாவட்டத்தில் இந்தக் கிராமம் உள்ளது. இந்தப் பகுதியில் வசித்தவர்கள் தங்கள் வீரத்திற்கும் அறிவுக்கும் பெயர் பெற்றிருந்தனர். ஆதி சுதந்திர வீரர் கட்டபொம்மனும், மாக்கவி பாரதியாரும் இந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தாம்.

சிதம்பரனாரின் தந்தை உலகநாதன் அந்நாட்களில் நல்ல வருவாயுள்ள வக்கீலாக இருந்ததுமன்றித் தம்முடைய அறிவினாலும் தாராள மனப்பான்மையாலும் நன்னடத்தையாலும் மக்களுடைய நன்மதிப்பைப் பெற்றிருந்தார். தந்தையின் பெருமை பிள்ளையின் மனதைக் கவர்வது இயற்கையல்லவா? தந்தை தம்முடைய அன்புப் பிள்ளையின் படிப்புக்கும் வளர்ச்சிக்கும் நல்ல ஏற்பாடு செய்தார்.

சிதம்பரனார் ஆறாவது வயதில் தூத்துக்குடியிலுள்ள ஆங்கிலப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். பிறகு திருச்சியில் கல்லூரிப் படிப்புப் பெற்றார். சிதம்பரனார் இளம் வயதிலிருந்தே மேதையாக விளங்கினார். படிப்பிலும் விளையாட்டிலும் எப்பொழுதும் முதல்வராகத் திகழ்ந்தார். தம்முடைய இனிய சுபாவம், தொண்டு மனப்பான்மை, கூர்மையான புத்தி ஆகியவற்றின் மூலம் எல்லா ஆசிரியர்களின் அன்பையும் அவர் பெற்றிருந்தார்.

சிதம்பரனார் 1895-இல் சட்டத் தேர்வில் தேறினார். பின்னர் வக்கீல் தொழிலைத் தொடங்கினார். ஏற்கெனவே தந்தை நடத்திவந்த தொழில்தான் அது. ஆரம்பத்திலிருந்தே சிதம்பரனாருக்கு இத்துறையில் நல்ல வெற்றி கிட்டிற்று; அவர் பெரும் புகழும் பணமும் சம்பாதித்தார். தொழில் வாயிலாக அவருக்கு மக்களுடன் தொடர்பு ஏற்பட்டதால், அவர்களுடைய சுகதுக்கங்களை அவர் நன்கு தெரிந்து கொண்டார். மக்களின் ஏழ்மையையும் அடிமைத்தனத்தையும் பார்த்து அவருக்கு மிகுந்த வருத்தம் ஏற்பட்டது. ஏழை மக்களிடம் பணம் வாங்காமலேயே அவர்களுடைய வழக்குகளில் அவர் வாதாடத் தொடங்கினார். இதனால் அவருடைய பெயர் குன்றின்மேல் விளக்காய் ஒளி வீசியது.

இருபதாம் நூற்றாண்டு ஆரம்பமாயிற்று, அரசியலில் சூடு ஏறுத் தொடங்கியது. 1905-ஆம் ஆண்டில் அரசியல் கிளர்ச்சி எழுந்தது. சிதம்பரனாரும் தேசிய இயக்கத்தில் குதித்தார். இந்திய நாட்டின் விழிப்பை அடக்கிவிடும் நோக்கத்துடன் வைசிராய் லார்டு கர்ஸன் 1905-ஆம் ஆண்டில் வங்கத்தை இரு மாகாணங்களாகத் துண்டாக்கினார். இதனால் வங்கத்தில் கிளர்ச்சி ஏற்பட்டது. இக் கொந்தளிப்பு இந்தியா முழுவதிலும் பரவிற்று. லாலா லாஜ்பத்ராய், பாலகங்காதர திலகர், விபின சந்திர பால் ஆகியோரிடம் நாட்டின் தலைமை இருந்தது. சிதம்பரனார் தீவிரவாதியாக விளங்கினார். தென்நாடு முழுவதும், குறிப்பாகத் தமிழ்நாட்டில், அவர் சுதந்திர நெருப்பை மூட்டிவிட்டார். அதிலிருந்து அவர் ஆங்கிலேயர்களின் கண்களை உறுத்தலானார். 1907-ஆம் ஆண்டு நடந்த சூரத் காங்கிரஸில் அவர் கலந்து கொண்டார். அவர் இயல்பாகவே திலகரைப் பின்பற்றினார். சிறிது காலத்திற்குப் பின் மக்கள் அவரைத் 'தென்னாட்டுத் திலகர்' என்று அழைக்கலாயினர்.

சிதம்பரனார் தென்னாட்டில் சுதேசி இயக்கத்தின் தந்தையானார். வெளிநாட்டுப் பொருள்களைப் பகிஷ்கரிக்குமாறு மக்களைத் தூண்டினார். மக்களிடையே ஒற்றுமை வளர்ந்து எழுச்சி ஏற்படச் செய்தார். சாதாரணமாகவே மக்களுக்கு அவரிடத்தில் மிகுந்த அபிமானம் இருந்தது. ஐம்பதினாயிரம் ஆங்கிலேயர்களை நாம் ஒரே நாளில் ஓட்டிவிட முடியுமென்று அவர் முழக்கமிட்டார். நமக்குள் ஒற்றுமை ஏற்பட்டுவிட்டால் ஆங்கிலேயர்கள் இங்கு நிலைக்க முடியாதென்று கூறினார்.

சிதம்பரனாருடைய சாதனைகளுள் மிகப் பெரியது சுதேசிக் கப்பல் கம்பெனியை நிறுவியது தான். அந்நாளில் கப்பல்கள், சிறிய-பெரிய துறைமுகங்கள் எல்லாம் ஆங்கிலக் கப்பல் கம்பெனியின் ஆதிக்கத்திலேயே இருந்தன. அவர்கள் மக்களைத் தங்கள் இச்சைப்படி



## வ. உ. சிதம்பரனாரின் மகன் மறைவு

**கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனாரின் மகன் திரு. வ.உ.சி. சுப்பிரமணியம் அவர்கள் 17.8.91 அன்று காலமானார். அவருக்கு வயது 66.**

**திரு.வ.உ.சி.சுப்பிரமணியம் அவர்கள் சிறந்த எழுத்தாளர், பேச்சாளர், விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றவர்.**

**'சுதேசமித்திரன்' 'தினமணி' ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றியவர். சென்னையிலுள்ள அமெரிக்கத் தகவல் நிலையத்தில் தமிழ்ப் பிரிவில் முதன்மை ஆசிரியராகப் பணிபுரிந்தவர்.**

**அன்னாரின் மறைவுக்குத் 'தமிழரசு' தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.**

கொள்ளையடித்தனர். இந்திய ஊழியர்களுக்குச் சொற்ப கூலியே கொடுத்து வந்தனர். எல்லா வியாபாரமும் அவர்கள் கையிலிருந்தது. சிதம்பரனார் இவைகளை ஒடுக்க விரும்பினார். அந்நியக் கம்பெனிக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் கம்பெனி ஒன்றை ஆரம்பிக்க அவர் தீர்மானித்தார். இந்த வேலை அவர் நினைத்தபடி அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. ஒரு பக்கம் ஆங்கிலேய அரசாங்கத்தை எதிர்க்க வேண்டியிருந்தது. மற்றோர் பக்கம் மூலதனம் திரட்ட வேண்டியிருந்தது. ஆனால், அவர் சிறிதும் மனந்தளரவில்லை. கப்பல் கம்பெனிக்கு அவர் பணம் திரட்ட ஆரம்பித்தார். மக்கள் அவர் சார்பில் இருந்தனர். அதனால் விரைவிலேயே தேசியக் கப்பல் கம்பெனியொன்று நிறுவப்பட்டது.

இம்முயற்சியைக் கைவிட்டால் சிதம்பரத்திற்கு இலட்சக்கணக்கில் பணம் கொடுப்பதாக ஆங்கிலேயர்கள் பேராசை காட்டினர். ஆனால், அவர் அசைந்து கொடுக்கவில்லை. வெள்ளையர்கள் தங்கள் கப்பல்களில் கட்டணத்தைக் குறைத்தனர். இலவசமாகக் கூட ஆட்களை ஏற்றிச் செல்ல முன்வந்தனர். ஆனாலும் அவர்களுக்கு வெற்றி கிட்டவில்லை. முடிவாக, அரசினர் சிதம்பரனாரை ராஜதுரோகி எனக் குற்றஞ்சாட்டிக் கைது செய்தனர். நியாயம் வழங்குவதுபோல் நாடகமாடிக் காண்பித்தனர். அந்நிய ஆட்சியில் இந்தியருக்கு நியாயம் எங்கே கிடைக்கும்? அவருக்கு ஆறரை ஆண்டுகள் சிறைவாசம் கிட்டியது. நியாயத்தில் விருப்பமுள்ளவரான லார்டு மார்லே என்பவர் இதைக் கண்டித்து லார்டு மின்டோவுக்குக் கடிதம் எழுதினார். சிறையில் செக்கு இழுப்பது, கல்லுடைப்பது போன்ற கடின வேலைகளைச் சிதம்பரனார் செய்ய வேண்டியிருந்தது.

சிறைவாசத்தை முடித்துக் கொண்டு சிதம்பரனார் வெளி வந்ததும் மக்கள் அவரை மனதார வரவேற்றனர். அவர் உடல் நலம் குன்றியிருந்தார். குடும்பத்தின் பொருளாதார நிலையும் மோசமாக இருந்தது. கப்பல் கம்பெனி முறிந்துவிட்டதால் அதன் பங்குதாரர்கள் தங்கள் பணத்தைத் திருப்பிக் கொடுக்கும்படிக் கேட்டனர். ஆனால், இவையெல்லாம் அவர் மனத்தைக் கலங்கவைக்கவில்லை. பொருளைத் திருப்பிக் கேட்ட அனைவருக்கும் திருப்பித் தருவதாக வாக்களித்தார்; திரும்பவும் வக்கீல் தொழிலை ஆரம்பித்தார்.

சிதம்பரனார் தமிழ் மொழியில் சிறந்த அறிஞராக இருந்தார். இளம் வயதிலிருந்தே அவருக்கு நூல் எழுதும் ஆர்வம் இருந்தது. சுதேசிக் கிளர்ச்சியின் ஆரம்ப காலத்தில் மக்களிடையே தேசபக்தியைப் பரப்புவதற்காக ''விவேகபானு'' என்னும் ஒரு மாதப் பத்திரிகையை ஆரம்பித்தார். சிறையில் இருந்தபோது மூன்று தமிழ் நூல்களை இயற்றினார். அவர் திருவள்ளுவரிடம் பக்தியுள்ளவர். ஆகையினால் தம்முடைய நூல்களில் வள்ளுவரின் வாழ்க்கைத் தத்துவங்களை அவர் எடுத்து விளக்கியிருக்கிறார்.

அவருடைய படைப்புகளில் தேசபக்தியும், வேதாந்தமும் முக்கிய இடம் பெற்றிருந்தன. அவரிடம் உற்சாகம் இருந்தது. ஆரம்பத்தில் அவருடைய எழுத்துக்களில் தேசபக்தி ததும்பியது. பிற்காலத்தில் அவர் எழுதியவைகளில் ஆன்மிக விஷயங்கள் நிறைந்திருந்தன. அவர் அரவிந்தரின் நண்பர். வாழ்க்கை சம்பந்தமாக அவர்களிடையே மிகுந்த கருத்தொற்றுமை காணப்பட்டது. சிதம்பரனாரின் புத்தகங்கள் இப்போது கூடப் பள்ளிகளில் படிக்கப் படுகின்றன.

முதுமையில்கூட அவருடைய துணிவும் செயல்திறனும் குன்றவில்லை. திலகருக்குப் பிறகு காந்தியடிகள் காங்கிரசின் தனிப்பெரும் தலைவரானார். காந்தியடிகளின் அகிம்சை முறையில் சிதம்பரனாருக்கு நம்பிக்கை இருக்கவில்லை. அதற்காக அவர் அந்த முறையை எதிர்க்கவுமில்லை. தமது சொந்த வழியில் நாட்டு முன்னேற்றத்திற்காக அவர் வாழ்நாள் முடிவுவரை பாடுபட்டார்.

சிதம்பரனார் ஏழ்மையை வெறுத்தார்; அதனால் ஏழைகளிடத்தில் மிக்க அனுதாபம் கொண்டிருந்தார். ஏழைகளுக்காக, 'பீஸ்' வாங்காமலேயே வழக்குகளில் அவர் வாதாடினார். தாம் அணிந்திருந்த உடைகளைக்கூட ஏழை எளியவர்களுக்கு எடுத்துக்கொடுக்கும் இயல்பு வாய்ந்தவர் அவர்.

1936-ஆம் ஆண்டில் சிதம்பரனார் காலமானார். அப்போது அவருக்கு வயது அறுபத்துநான்கு. நாடு முழுவதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டில், உள்ள மக்கள் அனைவரும் தங்கள் அன்புத் தலைவரின் மரணத்தினால் மிகவும் மனம் வருந்தினர்.

தமிழ்நாட்டில் அவருடைய நினைவுச் சின்னம் நிறுவப்பட்டிருக்கிறது. பாரதியார் பல கவிதைகளில், தம்முடைய அன்புத் தோழரும், வீரத் தளபதியுமான வ.உ.சிக்குப் புகழ்மாலைகள் சூட்டியுள்ளார். அவையெல்லாம் நமது காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கின்றன. தமிழ் மக்கள் அவைகளைப் படித்துத் தங்கள் அன்பிற்குரிய தலைவரைப் போற்றுவதுடன், அவர் வாழ்க்கை வரலாற்றிலிருந்து துணிவையும், உற்சாகத்தையும், பலத்தையும் பெறுகின்றனர்.

சிதம்பரனார் நம் நாட்டின் தவப்புதல்வர். அவர் வாழ்நாள் முழுவதும் நாட்டுக்காகப் பணி புரிந்தார். அவர் உயர்ந்த பண்பு நிறைந்தவர், மக்களின் பெருந்தலைவர், திறன்மிக்க படைத் தலைவர், நாவலர், ஆழ்ந்த வேதாந்தி, தெளிந்த கவி, உயரிய இலக்கிய கர்த்தா. அவரை நாடு என்றும் போற்றும் என்பதில் ஐயமில்லை!

**—'பாரதப் பெரியார்கள்' நூலிலிருந்து.**

# நாணயத்தின் கதை





**ஆ**தியில் மனிதர்கள் தங்களிடம் உள்ள பொருட்களைக் கொடுத்து, தங்களுக்கு வேண்டும் பொருட்களைப் பண்டமாற்று முறையில் வாங்கினார்கள். பின்னர் மக்கள் தாங்கள் தூரமான இடத்தில் கிடைக்கும் பொருட்களை வாங்க, தங்களது பொருட்களைக் கொண்டு செல்லும் இடர்ப்பாட்டைத் தவிர்க்க, அபூர்வப் பொருட்களைப் பண்டங்கள் வாங்கப் பயன்படுத்தினர்.

பூமியிலிருந்து உலோகத்தைப் பிரித்தெடுக்கும் தொழில்நுட்பத்தை மனிதன் அறிந்ததும் தங்கம், வெள்ளி, செம்பு, ஈயம், இரும்பு, பித்தளை, வெண்கலம் போன்ற உலோகங்கள் மற்றும் உலோகக் கலவைகளை அடித்தும் அச்சில் வார்த்தும் நாணயங்களை உருவாக்கினர். முதன் முதலில் நாணயம் வெள்ளியில்தான் உருவாயின.

முதலில் உருவான நாணயத்தின் பெயர் 'அச்சு குத்திய காசுகள்' என்பதே. முதன்முதலில் கி.மு.680-இல் வாழ்ந்த வணிகர் ஒருவர் தம் முத்திரையைப் பதித்து நாணயங்களை வெளியிட்டார். இன்று போல் அன்றெல்லாம் வங்கிகள் கிடையாது. அன்று நாணயங்கள் பூமிக்கடியில் புதைக்கப்பட்டன. மட்பாண்டத்திலும், செப்புப் பாத்திரத்திலும் வைத்துப் பாதுகாக்கப்பட்டன. மண் சுவர்களிலும் மறைத்து வைத்தார்கள்.

அகஸ்டஸ், வெரூசஸ், டைபிரியஸ் போன்ற ரோமானியப் பேரரசர்கள் தங்கம், வெள்ளி போன்ற உலோகங்களில் தங்களது உருவங்களைப் பதித்து நாணயங்களை உலாவ விட்டார்கள். அதனைத் தொடர்ந்து பல நாடுகளிலும் குறிப்பாக இந்திய அரசர்கள் தங்களது முத்திரை - உருவம் பொறித்த நாணயங்களை உருவாக்கி புழக்கத்தில் விட்டார்கள்.

தோலினாலும் நாணயங்கள் உருவாக்கப்பட்டன. குப்தர்கள், கங்கர்கள், சோழர்கள் போன்ற அரச மரபினர் நாணயங்களைத் தங்கத்தால் உருவாக்கி வெளியிட்டார்கள்.

பல்லவர்கள் காலத்தில் கற்களால் கோயில்களைக் கட்டினர். பின் செங்கல், சுதை கொண்டு கோயில்களையும் கட்டினர். சோழர்கள் காலத்தில் கற்சிற்பங்களைச் செய்து அவற்றைக் கோயில்களில் வைத்து வழிபட ஆரம்பித்தனர். சிலைகளைக் கோயில்களில் வைக்கையில் அவற்றின்கீழ் தங்க நாணயங்களைப் போட்டு வைத்தனர்.

**வே. ஜெயராஜ்**
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம், வேலூர்.

இந்திய அரசு 1878-இல் இந்தியப் புதையல் சட்டத்தைக் கொண்டு வந்தது. அதன்படி, பூமிக்குள்ளிருந்து நாணயங்களை யார் கண்டெடுத்தாலும் அவை அரசுக்குச் சொந்தமானவை என அறிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு மாவட்டந்தோறும் அருங்காட்சியகங்களையும் ஆங்காங்கே (தொல்பொருள்) அகழ்வைப்பகங்களையும் நிறுவி வருகிறது.

ஆய்வில் ஈடுபட்ட தொல்பொருளார் முற்காலங்களில் மக்கள் வாழ்ந்து அழிந்த பகுதிகளை இனங்கண்டு, பூமியைத் தோண்டி நாணயங்களை வெளியே கொண்டு வந்தார்கள். அவற்றைத் துல்லியமாக ஆய்வு செய்தனர். அவற்றைப் படம் பிடித்துப் பத்திரிகைகளிலும் விளம்பரப்படுத்தினர்.

தமிழ்நாடு அரசு அருங்காட்சியகத் துறையின் கீழ் புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சி, வேலூர், ஈரோடு, உதகமண்டலம், கோவை, கடலூர், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் அருங்காட்சியகங்களை நிறுவியுள்ளது.

வட ஆர்க்காடு-அம்பேத்கர் மற்றும் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டங்களிலுள்ள நாணயங்களை அநேகர் கண்டுகளிக்க வசதியாக, வேலூர் பேருந்து நிலையத்திற்கு அருகில் இலட்சுமணசாமி டவுன் ஹாலில் அரசு அருங்காட்சியகம் உள்ளது.

# மகளிர் கல்வி வளர்ச்சி



டி. நாச்சிமுத்து
இயக்குநர்
பள்ளிக் கல்வி, தமிழ்நாடு அரசு

அரும்பெரும் தலைவர்கள் யாவரும், ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் முன்னேற வேண்டும் என்று வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். இப்பெரியோர்களின் எண்ணங்களை நிறைவேற்றுவதையே இலட்சியமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது தமிழக அரசு.

கல்லாமை என்பது இல்லாமையினும் கொடிது எங்கே கல்வியின்மையும், ஏழ்மையும் பெண்களிடையே காணப்படுகிறதோ அங்கெல்லாம் பிரச்சினைகள் அதிகம் உருவாகக் காணலாம். கல்வி பெற்ற, நகர்ப்புற, வறுமைக்கு உட்படாத மக்களைப் போன்று கிராமப்புறத்தில் வாழும் பெண்களும், கல்வி அறிவு பெற்றால்தான் நமது நாடு பல பிரச்சினைகளிலிருந்து மீள முடியும். எனவே பெண்கள், கல்வியில் முன்னேற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் தமிழக அரசு கீழ்க்கண்டவாறு பல திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றி வருகிறது.

ஒன்றுமுதல் எட்டாம் வகுப்புவரை பயிலும் ஏழை மாணவிகளுக்கு இலவசப் பாடப்புத்தகங்கள், சீருடை மற்றும் காலணிகள் வழங்கப்படுகின்றன.

வறுமை அகலாத குடும்பங்களைச் சார்ந்த பெண்களுக்கு எட்டாம் வகுப்போ அதற்கு மேலோ படித்தவர்களாக இருப்பின், அவர்களின் திருமணச் செலவுக்கென மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமணத் திட்டத்தின் கீழ் ரூ.5,000 வழங்குகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனப் பெண்களில் ஐந்தாம் வகுப்பு முடித்தவர்களுக்கு இச் சலுகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தினால் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் இதுவரை பயனடைந்துள்ளர். மேலும் ஏழை மற்றும் நடுத்தர வகுப்பைச் சார்ந்த மாணவிகள் கல்லூரிகளில் சேர்ந்து பயிலுவதை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டு வருமானம் ரூ.12,000-க்கு மேல் இல்லாத பெற்றோரின் பெண் குழந்தைகளுக்கு இளங்கலை பட்டப் படிப்பு முடிய இலவசக் கல்வி அளிக்கப் படுகிறது.

**புதியதோர் திட்டம்**

கொடைத்தன்மை வாய்ந்தோர் 1-8 வகுப்புகளில் பயிலும் சிறுமியரைத் தத்து எடுத்து, அச் சிறுமியரின் பெற்றோருக்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ.250 வழங்குவதற்கான "வளர்ப்புப் பெற்றோர் திட்டம்" என்ற புதுமையான திட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. பள்ளிகளில் சேர்பவர்கள் தொடர்ந்து பயிலாமல் இடையில் நின்றுவிடும் நிலை சிறுமியரிடையே அதிகமாக உள்ளது. இதனைச் சீர் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவ/மாணவிகளின் கல்வி வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு அவர்களுக்கு ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் பாடங்கள் ஆகியவற்றில் பள்ளி நேரத்திற்குப் பின்னர் நாள் தோறும் ஆசிரியர்களின் நேரடிப் பொறுப்பில் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் செயல் படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட 625 உயர்நிலைப் பள்ளிகளில், 8, 9, 10-ஆம் வகுப்புகளில் இச் சமுதாயத்தைச் சார்ந்த 62,799 மாணவர்களுக்கும் 375 மேல்நிலைப் பள்ளிகளில் 24,057 மாணவர்களுக்கும் இத்திட்டம் பயனளித்து வருகிறது.

இவ்வாறாகத் தமிழக அரசு வழங்கியுள்ள கல்விச் சலுகைகள் காரணமாகப் பள்ளிகளில் சேரும் பெண்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டே வருகிறது. இது மட்டுமல்ல; இடையில் படிப்பை நிறுத்திவிடும் பெண்களின் எண்ணிக்கையும் குறைந்து வருகிறது. இதன் காரணமாகப் பெண்களுக்கெனப் புதிதாக

ஆண்டு தோறும் புதிய உயர்நிலைப் பள்ளிகளும், மேல்நிலைப் பள்ளிகளும் தொடங்கப்படுகின்றன. இதனால் படித்த பெண்களின் எண்ணிக்கையும் ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்துகொண்டே வருகிறது.

அத்தியாவசியத் தேவைகளை மட்டுமே கூட பூர்த்தி செய்துகொள்ள இன்றைக்குக் குடும்பத்தில் ஒருவரது வருமானத்தால் மட்டும் சாத்தியப்படுவதில்லை. எனவே, குடும்பச் சுமையைப் பகிர்ந்து கொள்ளப் பெண்களும் அவரவர் கல்வித் தகுதிக்குத் தக்கவாறு ஏதேனும் ஒரு வேலையைச் செய்து அதனால் வரும் வருமானத்தைக் கொண்டு, குடும்பத்தின் முன்னேற்றத்திற்கு உதவ வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

படித்த பெண்களுக்கு உரிய வேலைவாய்ப்புகள் தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அரசுப் பணிகளில், பொதுத்துறை நிறுவனங்களில், உள்ளாட்சிகளில் வேலைவாய்ப்பில் 30 சதவிகித இடம் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

தாய்க்குலம் உயர, கல்வித் துறையில் பெண்களுக்கு உரிய முக்கியத்துவம் தரும் வகையில், முதல் ஐந்து வகுப்புகளுக்குப் பாடம் கற்பிக்கப் பெண்களையே ஆசிரியர்களாக நியமனம் செய்யத் தமிழக அரசு ஆணை வழங்கியுள்ளது. பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள இச்சிறப்புச் சலுகையால், அவர்களுக்கு வேலைவாய்ப்புகள் அதிகமாகியுள்ளன. பெண்களைக் கல்வியில் நாட்டம் கொள்ளும்படி செய்துள்ளது. தென் மாநிலங்களில் பெண் ஆசிரியர்கள் நியமனத்தில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

பள்ளிக் கல்வித் துறையில் 1979-80-ஆம் ஆண்டு முதல் 1990-91-ஆம் ஆண்டு முடிய பெண்கள், ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்ட வகையில் அடைந்துள்ள வளர்ச்சி விவரத்தைக் கீழே உள்ள அட்டவணை மூலம் தெரிந்து கொள்ளலாம்:

1979-80-இல், நியமிக்கப்பட்ட 2,58,462 ஆசிரியர்களில் பெண்கள் மட்டும் 1,02,571 பேர்; அதாவது 39.7 சதவிகிதம்.

1980-81-இல், மொத்த ஆசிரியர்கள் 2,68,574-இல் பெண்கள் 1,06,619; 39.7 சதவிகிதம்.

1981-82-இல், 2,71,287 பேர்களில், பெண்கள் 1,09,178; 40.2 சதவிகிதம்.

1982-83-இல், 2,76,370 பேர்களில் 1,11,489 பேர் பெண்கள் ; 40.3 சதவிகிதம்.

1983-84-இல், 2,81,022 பேர்களில், 1,14,654 பேர் பெண்கள் ; 40.8 சதவிகிதம்.

1984-85-இல், 2,84,414 பேர்களில் 1,16,166 பேர் பெண்கள் ; 40.8 சதவிகிதம்.

1985-86-இல், 2,87,869 பேர்களில் 1,17,882 பேர் பெண்கள் ; 40.9 சதவிகிதம்.

1986-87-இல், 2,90,728 பேர்களில் பெண்கள் 1,19,598 பேர்; 41.1 சதவிகிதம்.

1987-88-இல், 2,93,155 பேர்களில், பெண்கள் 1,21,357 பேர்; 41.4 சதவிகிதம்.

1988-89-இல், 2,94,339 பேர்களில் 1,21,823 பேர் பெண்கள் ; 41.4 சதவிகிதம்.

1989-90-இல், நியமனம் பெற்ற 2,97,918 ஆசிரியர்களில் 1,24,493 பேர் பெண்கள்; 41.8 சதவிகிதம்.

1990-91-இல் 3,00,857 பேர்களில் 1,27,841 பேர் பெண்கள் ; அதாவது 42.5 சதவிகிதம் பேர்.

ஆண்டுக்கு ஆண்டு, ஆசிரியர் பணியேற்கும் பெண்கள் தொகை வளர்ந்துகொண்டே வந்திருக்கிறதல்லவா?

பள்ளிக் கல்வித் துறையில் ஆசிரியப் பணி அல்லாத பிற பணிகளிலும் பெண்கள் பணியாற்றுகின்றனர். அலுவலர்கள், கண்காணிப்பாளர்கள், உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர், பதிவறை எழுத்தர், அலு



வலக உதவியாளர் போன்ற பணிகளில் பெண்கள் பணிபுரிகின்றனர்.

தமிழக அரசின் கீழ் செயல்பட்டு வரும் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணிபுரிகின்றனர். அவற்றில் பள்ளிக் கல்வித் துறையில்தான் மற்ற துறைகளைக் காட்டிலும் கூடுதலான எண்ணிக்கையில் பெண்கள் பணியாற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அரசுத் துறைகளில் பணியாற்றும் பணியாளர்கள் 1/3 பங்கு பெண்கள் உள்ளனர். பெண் பணியாளர்களில் பாதிப்பேர் பள்ளிக் கல்வித் துறையில்தான் பணியாற்றுகிறார்கள். மேலும் 30 சதவிகித வேலை வாய்ப்பைப் பெண்கள் பெறுவதற்கான கல்வியைப் பெண்களுக்கு அளிப்பதிலும், படித்த பெண்களில் பெரும்பாலானவர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதிலும் பள்ளிக் கல்வித்துறையின் பணி மகத்தானது என்பதில் ஐயமில்லை.

# மதுவை மறப்பீர்!



**என். மோகன்ராஜ்**

இந்த நாட்டில் பிறந்த ஒவ்வொருவரும் நிச்சயமாக உடன் பிறந்தவர்களேயென்றால் யாரும் ஐயப்பட வேண்டியதில்லை. நமக்குள் பல மதம் இருக்கலாம். பல பிரிவுகள் இருக்கலாம். பல சாதிகள் இருக்கலாம். ஏன் பல மொழிகள்கூட இருக்கலாம். அவையெல்லாம் நமது ஒற்றுமையைக் கெடுப்பதற்கோ அல்லது பகைமையை வளர்ப்பதற்கோ என்று நாம் வைத்துக் கொள்ளக்கூடாது. நமது பெருமையை வளர்ப்பதற்கும், நமது பண்பை வளர்ப்பதற்கும் நமது கலாச்சாரத்தை வளர்ப்பதற்கும்தான் அதெல்லாம் பயன்பட வேண்டுமேயன்றி, நமக்குள் பிரிவினையை உண்டாக்கப் பயன்படுத்தக் கூடாது. அப்படிப் பயன்படுத்தும் காலத்தில் நமது முக்கியக் கடமைகள் யாவும் தவறிவிடும். கடமைகள் தவறிவிட்டால் அங்கு மகிழ்ச்சி நிலவ வாய்ப்பில்லை. அமைதி நிலவ வாய்ப்பில்லை என்பதை நாம் உணர வேண்டும்.

இப்போதைக்கு நாம் உடனடியாகச் செயல்படுத்த வேண்டிய நமது தலையாய கடமை அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதே! அது தான் ''மதுவிலக்கு''!

எது எப்படியிருந்தாலும் இன்றைய சூழ்நிலையில், இன்றைய வாழ்க்கையில், இன்றைய பொருளாதாரத்தில், இன்றைய வளர்ச்சியில், மதுவிலக்கு என்பதை அனைவரும் நிச்சயமாக, கட்டாயமாக மறுக்காமல் ஏற்றுக்கொள்வதுடன், அதைச் செயல்படுத்தவும் வேண்டும்.

நமது நாடு முன்னேற வேண்டும் என்ற இலட்சியத்தின் கீழ் நாமெல்லாம் மதுவிலக்கைச் செயல்படுத்த முன்வரவேண்டும். நமக்கு ஏன் மதுவிலக்குத் தேவை என்ற கேள்விகள், ஒரு புறம் எழலாம்.

ஒருவன் மது குடித்துவிட்டால் அந்த மது மற்ற உணவுப் பொருள்களைப் போல் எளிதில் ஜீரணமாவதில்லை. ஜீரணப்பைக்குச் சென்ற மது, அங்கு உள்ள மற்ற ஜீரண நீர்களுடனும் ஜீரணிக்கப்பட்ட உணவுடனும் கலந்து சிறு குடலுக்கு வருகிறது. பிறகு ஒரு வழியாக இரத்தத்தில் கலந்து விடுகிறது. இப்படி இரத்தத்துடன் கலந்த மது என்ன செய்கிறது என்றால் காமாலை, கண் நோய்கள், பசியின்மை, குடல் புண், நரம்புத் தளர்ச்சி மற்றும் மூளைக்கோளாறுகள் மற்றும் பல நோய்களை அன்பளிப்பாகக் கொடுத்து விடுகிறது! ஆனால், மது அருந்தியவன், இதை எதிர்பார்ப்பதில்லை, ஆனால் அந்த அன்பளிப்புப் பெற்றவன், விரைவிலேயே ஒரு நோயாளியாகிவிடுகிறான். பாடுபட முடியாத ஒரு முடவனாகிறான். பார்த்தவர் நகைக்கும் ஒரு கேலிப் பொருளாகிறான். இவ்வளவும் யாரால் என்றால் நிச்சயமாக அவனால் தான். அவன் குடித்த மதுவால் தான். இந்த நிலைமை மது குடித்த நாளிலேயே வந்துவிடுவதில்லை. நாட்பட நாட்படத்தான் வருகின்றது. நாகப் பாம்பின் நஞ்சு நிமிடத்தில் ஒருவனைக் கொன்று முடித்து விடுகிறது. ஆனால், மதுவென்னும் நஞ்சோ ஒருவனை மாத்திரம் கொல்வதில்லை. அவன் குடும்பத்தையே அழித்து விடுகிறது. இதற்கெல்லாம் காரணமான மது தேவை தானா?

ஒரு தனி மனிதனின் வருவாயே நாட்டின் வருவாய் ஆகும். ஒரு தனி மனிதனின் உயர்வே நாட்டின் முன்னேற்றம் ஆகும். இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்!

ஆகவே, மகிழ்ச்சி நாட்டுக்கும் வீட்டுக்கும் தேவையென்று உணரும் போது நாம் மதுவிலக்கை வரவேற்க வேண்டும். அப்படி வரவேற்கத் தவறும் தறுவாயில் நமது வீடும் நமது நாடும் மிகக் கேவலமான நிலைக்கு வர வாய்ப்பிருக்கிறது. மதுவை மட்டும் குறிப்பிடவில்லை; ஹெராயின், பெத்தடின், மார்பைன், காம்போஸ் கஞ்சா, அபின் போன்ற மற்ற போதை மருந்துகள் எதுவாக இருந்தாலும் அவற்றை உபயோகப் படுத்துபவர் அனைவரும் நாட்டு நலனைக் காக்க போதை மருந்துகளையும் நீக்கவேண்டும் என்ற கொள்கை இலட்சியத்திற்கு வர வேண்டும். மேலும் நேற்றைய நாள் வரையில்கூட மதுவிற்கு அடிமையாகி இருக்கலாம். இனியும் அந்தத் தொடர் தொல்லை வேண்டாமே!

வீட்டைக் காப்பதன் மூலம் நாட்டைக் காப்போம் என்ற கடமை உணர்வுடன் அருகில் உள்ள சிறந்த மருத்துவரை அணுகி, நேற்றைய நாள் வரை நடந்ததை எடுத்துக்கூறி, தக்கவாறு பரிசோதனைகள் செய்து கொண்டு, பின்னர் மருத்துவர் அளிக்கும் நலம் தரும் மருந்துகளை நாளும் உண்டு, வரும் நாளிலும் தக்க அளவு பயிற்சிகள் - யோகா முதலானவற்றின் வாயிலாகவும் மேற்கொண்டு மதுப்பழக்கத்திலிருந்து விடுபட்டு புதிய மனிதனாக மாறலாம். வாழலாம், வாழ்ந்து காட்டலாம். இது பெரிய பிரச்சினை அல்ல!



**ஒரு மனிதனின் எண்ணமும், நோக்கமும் மட்டுமே நல்லதாக இருந்தால் மட்டும் போதாது. செயலும், பண்பாட்டுடன் இருக்க வேண்டும். இதை ஒவ்வொருவரும் உணர்ந்தால் நாட்டில் நல்லவை நடக்கும்.**

# வளரும் வேளாண்மை

**இலைவழியாக இரும்புச்சத்து அளித்தல்**

நுண்ணூட்டங்கள் பற்றாக்குறைகளில் பயிரில் இரும்புச்சத்து பற்றாக்குறையை (Iron Deficiency Symptoms) மிக எளிதில் கண்டுபிடிக்கலாம். அந்த அளவுக்குத் தெளிவாக இரும்புச்சத்து பற்றாக்குறை அறிகுறி பயிரில் காணப்படும்.

இரும்புச்சத்து பற்றாக்குறை அறிகுறி ஒரு சில பயிர்களில் மிக எளிதில் காணப்படுகிறது. அதாவது கரும்பு, மஞ்சள், சோளம், மக்காச் சோளம் மற்றும் மல்லிகை, முல்லை, கனகாம்பரம் முதலிய பயிர்களில் அதிகமான அளவிலும், அடிக்கடியும் காணப்படுகிறது. மேற்கூறிய பயிர்கள் மண்ணில் இரும்புச் சத்துப் பற்றாக்குறையை எதிர்த்து விரைவாக வளர்வதில்லை.

**பற்றாக்குறை அறிகுறிகள்**

ஆரம்பத்தில் செடியின் மேலிருந்து 3-வது அல்லது 4-வது இலைகளில் வெளிறிய மஞ்சள் நிறம் காணப்படும். பற்றாக்குறை அதிகமானால் இலை நரம்புகளுக்கு இடையே உள்ள பாகங்கள் நல்ல மஞ்சள் நிறமாக மாறிவிடும். அந்த நிலையிலும் இலை நரம்புகள் பசுமையாகவே காணப்படும். இந்த அறிகுறியை அடிப்படையாக் கொண்டு பயிரில் இரும்புச்சத்து பற்றாக்குறையை "இலை நரம்புகளுக்கு இடையே வெளுத்துத் தோன்றுதல்" என்ற பெயரோடு அழைக்கப்படுகிறது.

கரும்பில் இரும்புச்சத்து பற்றாக்குறையைத் தவிர்க்க அன்னபேதி எனப்படும் இரும்புச்சல்பேட்டை இலைவழியாகத் தெளித்துக் குறையைத் தவிர்க்கலாம்.

ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10 கிராம் இரும்புச் சல்பேட்டையும் 20 கிராம் யூரியாவையும் சேர்த்து கலக்கி கரும்பு நட்ட 90,105,120-வது நாளில் நன்கு தெளிக்கலாம். காலை அல்லது மாலை நேரங்களில் பயிர் நனையும்படி தெளித்தால் நல்ல பலன் பெறலாம்.

மண் பரிசோதனை செய்து, இரும்புச்சத்து பற்றாக்குறை இருந்தால் ஒரு எக்டேருக்கு 25 கிலோ அன்னபேதி 15 கிலோ மணலுடன் கலந்து, நடவுக்கு முன்பு சீராகத் தூவி விடலாம்.

மண்ணில் இரும்புச்சத்து இடுவதால் நல்ல பலன்பெற வாய்ப்பில்லை. மண்ணுக்கும் இரும்புச் சல்பேட்டுக்கும் இடையே பலவித இரசாயன மாற்றங்கள் நடைபெற்று, இரும்புச்சத்து விரைவில் பயிருக்குக் கிடைக்கும் தன்மை குறைந்துவிடுகிறது. இந்தச் சூழ்நிலை சுண்ணாம்புக்கல் அதிகமாக உள்ள மண்ணில் மிக அதிக விரைவில் இரசாயன மாற்றம் ஏற்படுகிறது.

ஆதலால், கரும்புப் பயிருக்கு இரும்புச்சத்தை இலைவழிமூலமும் தெளித்து நல்ல பலன்பெறக் கேட்டுக் கொள்கிறோம் என்று வேளாண் தகவல் பணி மையம் அறிவிக்கின்றது.

**—தகவல்: தமிழ்நாடு ஜி.டி.நாயுடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்.**

## மாநகராட்சியின் சொத்துக்களைப் பராமரிக்கப் பறக்கும் படைகள்!

**மா**நகராட்சியின் சொத்துக்களைச் சமூக விரோதிகளிடமிருந்து பாதுகாக்கத் தனிப் பறக்கும் படைகள் 1.9.1991 முதல் அமைக்கப்பட உள்ளன. இவை பகலிலும் இரவிலும் ரோந்து சுற்றி பொதுச் சொத்துக்களுக்குப் பாதுகாப்பளிக்கும்.

பொதுமக்களின் புகார்களை 24 மணி நேரமும் பெற 584670 என்ற தொலைபேசி மாநகராட்சியில் செயல்படும். புகார்கள் மீது 24 மணி நேரத்துக்குள் நடவடிக்கை எடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பஸ் வழித்தடங்களைச் சீர்செய்து அமைக்கப் பொறியாளர்கள் அடங்கிய குழு அமைக்கப் பட்டுள்ளது. இதனால் இச்சாலைகள் விரைந்து பழுதுபார்க்கப்படுவதோடு அவற்றின் தரமும் உயரும். தற்போது சொத்துவரிக்கு ஒவ்வொரு அரை ஆண்டிற்கும் நோட்டீசு அனுப்புவது நிறுத்தப்பட்டு இந்த ஆண்டு முதல் 3 இலட்சம் பேர்களுக்கு வரிப் புத்தகம் வழங்கப்படும். இதன் மூலம் 5 ஆண்டுகளுக்குத் தடங்கலின்றிச் சொத்தின் உரிமையாளர் தம் வரியைச் செலுத்த வழி பிறக்கும்.

சென்னையை அழகுபடுத்த முதற்கட்டமாக 43 பூங்காக்கள் ரூ.75 இலட்சம் செலவில் சீர்திருத்தப்படும்.

சாலைகளில் மின்வாரியம், தொலைபேசி, குடிநீர் வடிகால் வாரியத்தினர் இணைப்புகளுக்காகவும், பழுது பார்க்கவும் சாலைகளை வெட்டுவதைக் குறைக்கவும் தேவையான இடங்களில் சாலைபோடும் முன்பே இவற்றைச் செய்திடவும் ஒருங்கிணைப்புக்குழு செயல்படும்.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்

# காடு வளர்ப்பு

சுவீடன் பன்னாட்டு நிதி உதவியுடன், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில். உள்ள வனக்கோட்டத்தின் மூலம் தரிசு நிலங்களில் மரக்கன்றுகள் நடும் பணி செய்யப்பட்டு வருகிறது. 1991-92-ஆம் ஆண்டு கீழ்க்கண்ட தலைப்பின் கீழ் அப்பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

**சமுதாயத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ், தரிசு நிலங்களில் மரக்கன்றுகள் நடுவதற்கு 1991-92-ஆம் ஆண்டிற்கு 700 எக்டேர் பரப்பு குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் செடிகள் நடுவதற்கு முன்னோடியாக 13,17,425 நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும் 8,87,000 எண்ணிக்கை குழிகள் தோண்டப்பட்டுள்ளன. வடகிழக்குப் பருவமழை பெய்தபின் செடிகள் நடும் பணி மேற்கொள்ளப்படும்.

**சமுதாயத் தரிசு நிலப் பரிசோதனைத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ், மலைக்குன்றுப் பகுதியை மேம்படுத்தும் வகையில் 50 எக்டேர் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், மலைக்குன்றுப் பகுதிகளில் செடிகள் நடும் பணி, மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. இப்பகுதிகளில் செடிகள் நடுவதற்கு ஆயத்தமாக 7,500 குழிகள் தோண்டும் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது. மண் வளப் பாதுகாப்புப் பணியான தடுப்பணை அமைக்கும் பணியும், நடைபெற்று வருகிறது.

**இடைப்படு காடுகள் திட்டம்**

ஒதுக்குக் காடுகளின் (Reserved Forests) எல்லையோரப் பகுதியில் அமைந்துள்ள கிராம மக்கள் தரத்தை உயர்த்தவும், அந்தக் கிராம மக்களின் எரிபொருள், கால்நடைத் தீவனம் மற்றும் இதரத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 150 எக்டேர் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தென்காசி சரகம் மாயமான் குறிச்சி மற்றும் கோட்டமலை சாவல் காட்டுப் பரம்புப் பாதுகாப்புக் காடுகளின் எல்லையோரப் பகுதிகளில் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. தற்சமயம் இத்திட்டத்தின் கீழ், முன்னோடியாகச் செடிகள் நடுவதற்கு 1,48,852 நாற்றுகள் உற்பத்தி செய்தும், 1,23,956 குழிகள் தோண்டும் பணி செய்தும் முடிக்கப்பட்டுள்ளது. மேலும் மண் அரிப்பைத் தடுக்கவும், நீர் வளம் பெருகவும் 13 தடுப்பணைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**பன்முகப்படுத்தப்பட்ட மக்கள் நாற்றங்கால்**

மத்திய அரசு நிதி உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 7,00,000 கன்றுகள் உற்பத்தி செய்யக் குறியீடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், நாற்றங்கால் உற்பத்தி செய்ய விவசாயிகளுக்குத் தேவையான பாலிதீன் பைகள் மற்றும் விதைகள், துறை மூலம் விநியோகம் செய்யப்படுகிறது.

நாற்றங்கால் உற்பத்தி செய்யக் குறியீடு விவசாயிகளுக்கு நிர்ணயம் செய்யப்பட்டு, நாற்றங்கால் உற்பத்தி செய்யும் செலவும் வழங்கப்படுகிறது. அந்த விவசாயிகளால் கன்றுகள் உற்பத்தி செய்து முடித்த பின்னர் துறை உபயோகத்திற்குத் திருப்பிப் பெற்றுக் கொள்வதற்கு கன்று ஒன்றுக்கு ஊக்கத் தொகையாக ரூ.0.70 காசு வீதம் வழங்கப்படும்.

1991-92-ஆம் ஆண்டு, இத்திட்டத்தின் கீழ் ஏற்கெனவே உற்பத்தி செய்து வந்த உழவர்கள் பயன் அடைய உள்ளார்கள். இத்திட்டத்தின் மூலம், சுமார் 70 விவசாயிகள் பயன் பெறுவார்கள்.

1991-92-ஆம் ஆண்டிற்கு மேலே குறிப்பிட்ட திட்டப் பணிகளைச் செயல்படுத்த ரூ.58 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில், இது நாள் வரை ரூ.5.44 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



இராமநாதபுரம் மாவட்டம்:

# கதர் கிராமத் தொழில்கள்

இராமநாதபுரம் மாவட்டத்தில் கதர் கிராமத் தொழில் வாரியத்தில் இதுவரை 18 நூற்புக் கூடங்கள் மூலமாக 600 பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. ஆண்டொன்றுக்கு ரூ.1 இலட்சம் வருமானம் பெறுகின்றனர்.

சாயல்குடி, கமுதி கதர் உற்பத்தி அலகுகளில் 75 நெசவாளர் குடும்பங்கள் கதர் நெசவு செய்து ஆண்டு ஒன்றுக்கு ரூ.1.20 இலட்சம் வருமானம் பெறுகின்றன.

கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்கள் ஆண்டு ஒன்றுக்கு ரூ.50 இலட்சத்திற்கு காதி கிராப்ட்கள் மூலம் விற்பனையாகின்றன.

காலணி அலகு மற்றும் நாகரிக சிப்பிக்கலைப்பொருட்கள் மூலமாக 100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. நாள் ஒன்றுக்கு ரூ.15-க்குக் குறையாமல் வருமானம் பெறுகின்றனர்.

150 கதர் கிராமத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக 7,500 நபர்கள் நேரடி வேலை வாய்ப்பும், 35,000 நபர்கள் பகுதி நேர வேலைவாய்ப்பும் பெறுகின்றனர். ஆண்டு ஒன்றுக்கு ரூ.15 இலட்சம் வருமானம் பெறுகின்றனர்.

இம்மாவட்டக் கதர் கிராமத் தொழில் வளர்ச்சிக்கென 16 தொழிற்கூடங்கள் சுமார் ரூ.40 இலட்சம் செலவில் உத்திரகோசமங்கை, பாம்பன், ஆர்.எஸ்.மங்கலம், தாதனேந்தல், திருப்புல்லாணி, பாண்டிக்கண்மாய், பரமக்குடி, காத்தனேந்தல், கீழமுடிமன்னார்க் கோட்டை, மேலச்சிறுபோது, பூசேரி, பழங்குளம், ஓடக்கால், பெருங்களூர் ஆகிய கிராமங்களில் கட்டப்பட்டு வருகின்றன.

**1991-92-ஆம் ஆண்டிற்காகக் கீழ்க்கண்ட செயல்முறைத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது:**

o நூற்பு மூலம் 500 கிராமப் புறப் பெண்களுக்கு ரூ.26 இலட்சம் வருவாய் வாய்ப்பு ஏற்படுத்தல்.

o கதர் உற்பத்தியின் மூலம் 50 நெசவாளர் குடும்பங்களுக்கு ரூ.14 இலட்சம் வருவாய் வாய்ப்பு ஏற்படுத்தல்.

o கிராமத் தொழில் அலகுகள் மூலம் 100 நபர்களுக்கு ரூ.10 இலட்சம் வருவாய் வாய்ப்பு அளித்தல்.

o தற்போது இயங்கும் 120 கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 20 இலட்சம் ரூபாய் வருவாய் வாய்ப்பு ஏற்படுத்தல். ரூ.50 இலட்சம் செலவில் புதிதாகத் தோல் உற்பத்தி, காகித உற்பத்தி மற்றும் இதரத் தொழில்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கி மேலும் ஆயிரம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தல்.

o புதிதாக மூன்று காதி கிராப்ட் ஆரம்பித்து, கதர் கிராமத்தொழில் பொருள் விற்பனையை ஊக்குவித்தல்.

o தனி நபர் கடன் மூலம் 300 கிராமத் தொழிலாளர்களுக்குக் கடன் மற்றும் மானியமாக ரூ.12 இலட்சம் வழங்கல்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி, அபிராமம், கமுதி-1, முதுகுளத்தூர், கமுதி-2, பேரையூர்-1, பேரையூர்-2, மேட்டுப்பட்டி, உத்திரகோசமங்கை, பி.புத்தூர், ஆர்.எஸ். மங்கலம், கே.எம்.கோட்டை, பெருங்களூர், நரிப்பையூர், மைக்கேல் பட்டினம், ஓரிக்கோட்டை, பாண்டிக் கண்மாய் ஆகிய இடங்களில் கிராமிய நூற்பு அலகுகள் செயல்பட்டு வருகின்றன.



# நூல் நயம்

### கல்வி

**(அண்ணல் காந்தியடிகளின் கட்டுரைத் தொகுப்பு)**

**வெளியீடு:**

காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை-625 020.

விலை:ரூ.32 பக்கம்:510

கண்ணாகப் போற்றி மதிக்கப்படுவது கல்வியாகும்; கல்வி ஒன்றே மனிதனை மனிதனாக்கும் அடிப்படையாகும்.

அண்ணல் காந்தியடிகள் கல்வியின் அவசியம் குறித்து, எழுதியும் பேசியும் வந்திருக்கின்றார். அவற்றையெல்லாம் அழகுறத் தொகுத்துக் கூறுகிறது இந்நூல்.

கல்வியின் நோக்கங்கள், இலக்கியக் கல்வி, தொழிற்கல்வி, சமயக் கல்வி, முதியோர் கல்வி - இவ்வாறு பல்வேறு நிலைகளை விளக்கிடும் அண்ணலின் கருத்துக்கள் நம் எண்ணத்தில் இருத்திக் கொள்ளத் தக்கவையாகும்.

பெற்றோர்களின் பொறுப்பு என்ன? ஆசிரியர்-மாணவர் கடமை என்ன? என்பன போன்ற வினாக்களுக்கான விளக்கமும் தெளிவுபடக் கூறியுள்ளார் காந்தியடிகள். எக்காலத்துக்கும் பொருத்த மான கருத்துரைகள் நிறைந்த பயனுள்ள நூல்.

—பி.வி.கிரி

### ஜே.கே.யின் வாழ்க்கை

**ஆசிரியர்: மானோஸ்**

**வெளியீடு:**

பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை-600 004.

பக்கம்:199 விலை:ரூ.20/-

பொதுவாக இந்தியத் தத்துவாசிரியர்களை இந்திய நாடு அடையாளம் கண்டு கொள்வதில்லை. வெளிநாடுகள் தான் அடையாளம் காட்டுகின்றன. டாக்டர் எஸ். ராதா கிருஷ்ணன் அவர்களைக் குறித்து அமெரிக்க நாடு அறிந்து கொண்ட பின்னர்தான் இந்தியத் திருநாடு புரிந்து கொண்டது. அது போலவே மதனபள்ளியைச் சேர்ந்த ஜே.கே. எனச் சுருக்கமாக வழங்கப் பெற்ற ஜே.கிருஷ்ணமூர்த்தி அவர்களையும் வெளிநாட்டினர் இனம் கண்ட பின்னரே இந்தியா புரிந்து கொண்டுள்ளது.

அன்னிபெசன்ட் அம்மையாரால் தத்தெடுக்கப்பெற்று, வளர்க்கப் பெற்ற பெருமைக்குரிய ஜே.கே. அவர்களின் வரலாறும் அவரது தத்துவங்களும் இந் நூலில் இனிய, எளிய நடையில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. பதினைந் தாவது வயதிலேயே ஆங்கில மொழியில் தத்துவ நூல் ஒன்றை எழுதியிருக்கிறார் ஜே.கே. என்னும் செய்தி நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

நாம் புத்தகங்களில் மட்டுமே சந்தித் திருக்கின்ற கலீப் கிப்ரான், ஜார்ஜ் பெர்னாட்ஷா போன்ற இலக்கிய வாணர்கள் ஜே.கே.யைச் சந்தித்திருக் கிறார்கள் என்பதையும் அவருக்குப் புகழ் மாலைகள் சூட்டியிருக்கிறார்கள் என்பதையும் இந்நூலின் வாயிலாக நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

—தமிழ்ப்பித்தன்

### ஒரு தேசத்துப் பறவைகள்

**ஆசிரியர்: சிற்பி சோமு**

**வெளியீடு:**

சரவணா பிரசுரம்
2497, தெற்கு ராஜ வீதி,
புதுக்கோட்டை-1.

விலை:ரூ.10/- பக்கம்:96

இந்நூலில் ஒன்பது சிறுகதைகள் உள்ளன. சிறுவர்களுக்குப் பயன்படும் வகையில் எளிய முறையில் படைத்திருக் கிறார் ஆசிரியர்.

அனைத்துக் கதைகளிலும் வாழ்க்கை நெறிமுறைகளுக்கு உயரிய பண்புகளை நேர்மை, நீதி, கடமையுணர்வு ஆகியன கருத்துச் செறிவுடன் சொல்லப்பட்டுள்ளன.

உள்ளமும், உடலும் நல்ல ஆரோக் கியத்துடனும், உறுதியுடனும் இருந்தால் தான் சிந்தனைத் தெளிவுடன் சீரிய செயல்களில் ஈடுபட முடியும். அதற்கு இதுபோன்ற கதைகள் இளஞ்சிறார் களுக்கு மிகவும் உதவும் என்பதில் ஐய மில்லை.

—ஜே.சந்திரன்

### அறிவுரைக் கதைகள்

**ஆசிரியர்: கடவூர் மணிமாறன்**

**வெளியிட்டோர்:**

விடியல் வெளியீட்டகம்
109, மேலைத் தெரு
கிருட்டிணராயபுரம்
திருச்சி மாவட்டம்-639 102.

பக்கம்:68 விலை:ரூ.10

சிறுவர்களுக்கான அறிவுரைச் சிறு கதைத் தொகுப்பு, பலகதைகள் நாம் கேள்விப்பட்ட புகழ்பெற்ற கதைகள் தான். அவற்றை குழந்தைகளுக்கு ஏற்ற வாறு சுருக்கி, எளிமையாக எழுதி உள்ளார் ஆசிரியர்.

முதல் இரண்டு கதைகளின் முடிவில் இறுதி வரியாகச் சொல்லப்பட்டுள்ள பழமொழிகளைப்போல் ஒவ்வொரு கதையின் கருவையும் பிரதிபலிக்கும் பழமொழிகளையும் அக்கதைகளின் முடிவில் வெளியிடப்பட்டிருந்தால் மிகச் சிறப்பாக இருந்திருக்கும்.

### போக்கிரி பாலு

**ஆசிரியர்: என்.எஸ்.நாதன்**

**வெளியீடு:**

**கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்**
**த.பெ.எண்.501**
**பூங்கா நகர்**
**சென்னை-600 003**

**விலை:ரூ.12.00 பக்கம்:53**

**தன் மகன் நல்லவனாக வாழ வேண்டும் என்ற எல்லாத் தாய்மார்களைப் போலவேதான் பாலுவின் தாயும் கனவு காண்கிறாள். ஆனால், பாலுவோ போக்கிரி பாலுவாக வளர்கிறான். இறுதியில், தம் தவற்றையெல்லாம் உணர்ந்து மனம் திருந்துகிறான். குழந்தைகளுக் கேற்ற நல்ல கதை.**

**— குமாரசாமி**

### பழத் தோட்டமும் பழத்தொழில்களும்

**ஆசிரியர்: அ. ராம்கோபால்**

**வெளியீடு:** நியூ செஞ்சுரி புக்ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல்
எஸ்டேட், சென்னை-600 098.

விலை:ரூ.24 **பக்கம்:166**

**உடல் நலனைப் பாதுகாக்கும் உணவு வகைகளில் பழங்களுக்கும் முக்கியத்துவம் உண்டு.**

**பழ வகைகளைப் பயிர் செய்வது, அவற்றைப் பாதுகாப்பது உள்ளிட்ட பல வழி முறைகளைத் தெளிவாக விளக்கு கிறது இந்நூல்.**

**பழங்களின் குணங்கள், பழங்கள் கெடாமலிருக்க வழி ஆகிய குறிப்பு களுடன், பழச்சாறுகள், பழ ஜாம், ஊறுகாய், பழ வற்றல்கள் ஆகியவை செய்யும் முறை பற்றியும் கூறுகிறது இந் நூல். இல்லத்தரசிகள் மட்டுமல்ல, சுயமாகத் தொழில் தொடங்கும் இளைஞர்கள் கூட இந்நூலில் கூறப்பட்டுள்ள வழி முறைகளைப் பின்பற்றலாம். படித்துத் தெரிந்து கொள்ளலாம்.**

**—பி.வி.ஜி.**



# நிலம் நீர் பயிர்!

- ஆர். எம். சக்திவேலு
செயற் பொறியாளர்
வேளாண்மைப் பொறியியல் துறை

**ந**மது நாடு பண்டைக் காலம் தொட்டே விவசாயத்தை முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ளது. அதே சமயம் பெருகிவரும் மக்கட் தொகைக்கு ஈடாக விளைச்சலைப் பெருக்க வேண்டிய கட்டாயத்திற்கு விவசாயப் பெருங்குடி மக்களும், அதைச் சார்ந்த துறைகளும் செயல் படவேண்டும். இந்நிலையில், விவசாயிகள் ப்யிர் வகைகளையும், அதன் நீர்த் தேவைகள் பற்றியும், நிலம் நீர் பயிர்களின் தொடர்புகள் பற்றியும் அறிந்திருத்தல் மிக அவசியம். அத்தொடர்புகளை அறிதலின் முக்கிய நோக்கமே குறைந்த செலவில் அதிக மகசூல் பெறுவதுதான். இது எப்படி? நவீன யுக்திகளைப் பயன்படுத்தி விவசாயத்திற்குப் பயன்படாத நிலங்களைச் சீர்படுத்தி விளைநிலங்களாக்கியும், நிலங்களின் தன்மை, சூழ்நிலைகளுக்குத் தக்க பயிர்களைப் பயிரிட்டும், குறைந்த பரப்பில் சிக்கனப் பாசன முறைகளைக் கையாண்டு அதிக மகசூல் பெறமுடியும். இந்த நவீன யுத்திகளை எப்போது கடைப்பிடிக்க முடியும்? நிலம் - நீர் - பயிர் அவற்றிற்கிடையே உள்ள தொடர்புகளை (ஏன் உறவு என்று கூடச் சொல்லலாம்) அறியும்போதுதான்.

ஒவ்வொரு பயிரும் அதன் வேர்ப் பிடிப்புக்குத் தக்க மண்ணும், உணர்ச்சிப் பருவத்திற்கேற்ற நீர் அளவும் இருக்கும்போதுதான், மண்ணின் 16 வகை இயற்கைத் தாதுப் பொருட்களும் நாம் இடும் உரங்களும் பயிரின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிகிறது.

உலகின் பெரும்பகுதி கடலால் சூழப்பட்டிருந்தாலும் விவசாயத்தின் நீர் வளம் மழை நீர்தான். நமது நாட்டைப் பொறுத்தவரையில் குறிப்பாகத் தமிழ்நாட்டில், ஜூன் முதல் செப்டம்பர் மாதம் வரை தென் மேற்குப் பருவ மழையும், அக்டோபர் முதல் டிசம்பர் வரை வடகிழக்குப் பருவமழையும் விவசாயத்திற்குப் பயன்படுகிறது. இப்பருவமழைக் காலங்களில் வெள்ளமும், பிற காலங்களில் வறட்சியும் விவசாயத்தைக் குறிப்பிடத்தக்க வகையில் பாதிக்கிறது. மழைக்காலங்களில் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தும் திட்டங்களைச் செயலாற்றுவதன் மூலம் நிலத்தடி நீரை மேம்படுத்தி, வறட்சிக் காலங்களிலும் விவசாயம் செய்ய இயலும். ஓடைகளின் நடுவே தடுப்பணைகள் அமைத்தும், சிற்றோடைகள் வளராதபடி மரச் செடிகள் நடுவதன் மூலமும், புஞ்செய் நிலங்களில் சரிவுக்குக் குறுக்காகச் சமஉயர வரப்புகள் அமைத்தும், ஆழ உழவு செய்தும், பின்னர் அதிக நீர்வரவு உள்ள சரிவான நீர்ப்பிடிப்புப் பகுதிகளில், ஊற்றுநீர்த் தேக்கங்கள் அமைப்பதன் மூலமும் வெள்ளத்தைத் தடுத்து, நிலப்பரப்பின் மண்ணின் தன்மைக் கேற்ப நீரைச் சேமிக்க இயலும். சாதாரணமாக விளை நிலங்களில் களிமண், செம்மண், மற்றும் மணல் கலந்த வண்டல் பரப்புக்களே உள்ளது. இவற்றில் களிமண்ணில் நீர் ஊடுருவ அதிக நேரமும், செம் மண்ணில் சற்று குறைந்த நேரமும், மணல் கலந்த வண்டல் படிவங்களில் குறைந்த நேரமும் ஆகும். அதே சமயம் ஆழமான வேர்கள் கொண்ட பயிர்கள் மணல் கலந்த வண்டல் பகுதிகளில் எளிதாகவும், களிமண்ணில் கடினமாகவும் ஊடுருவிச் செல்லுதல் இயற்கை.

இது ஏன் என்றால், களிமண் மிகமிகச் சிறு தூசித் துகள்களால் இணைந்தது. இத்தூசித்துகள்கள் இடையில் உள்ள காற்றிடை வெளி அதிக நீளமாக இருந்தாலும் மிக மிகச் சிறிய இடைவெளிகளால் ஆனவை. ஆகவே, நீர் உட்செல்ல அதிக நேரம் பிடிக்கிறது. ஆனால், மணல் கலந்த வண்டல் பரப்பில் காற்றிடைவெளி செல்லத்தக்க வகையில் பெரியதாக இருப்பதால் நீர் உட்செல்லுதல் இலகுவாகிறது. ஆகவே, ஆணி வேரில்லாத சல்லி வேர்கள் கொண்ட பயிர்கள் (உதாரணமாக நெல், மிளகாய்) களிமண் நிலங்களிலும், சிறிது நீளமுள்ள ஆணிவேரும் சல்லி

வேர்களும் உள்ள பயிர்கள், செம் மண் பரப்பிலும் நீளமான ஆணி வேர்கள் கொண்ட பயிர்கள் (உதாரணமாக வேர்க்கடலை போன்ற பயிர்கள்) மணல் கலந்த வண்டல் நிலங்களிலும், பயிரிடுதல் நல்ல மகசூல் பெற வாய்ப்பளிக்கும்.

பயிருக்குத்தக்க பாசனம் செய்தலை விவசாயிகள் கடைப்பிடிப்பதன் மூலம் நீர் விரயம் ஆவதையும், களைகள் வளர்வதையும் தடுத்து அதிகப் பரப்பளவு பாசனம் செய்ய இயலும். பொதுவாகத் தோட்டக் கால் நிலங்களில் பாத்தி முறைப் பாசனமும், இதரப் பயிர்களுக்கு வாய்க்கால் பாசனமும், நடைமுறையில் உள்ளது. இதனால் நீர் ஆவியாவதன் மூலம் விரையமாவதுடன், களைகள் வளரவும் ஏதுவாகிறது. எனவே, பயிர்களின் வேர்ப்பிடிப்புக்குத் தக்கதாகவும், பயிர்களின் இடைவெளிக்குத் தக்கதாகவும் புதிய பாசன முறைகளான சொட்டுநீர்ப் பாசனம், தெளிப்பு நீர்ப்பாசனம், பைவால் எனப்படும் இரட்டைக் குழாய்ப்பாசனம் ஆகிய முறைகளின் மூலம் 40 முதல் 70 சதம் வரை நீரை மிச்சப்படுத்தி பண விரயத்தைத் தடுக்க முடியும். உதாரணமாக- தென்னை, வாழை, எலுமிச்சை, கொய்யா, மா, போன்ற அதிக இடைவெளியுள்ள மரவகைப் பயிர்களுக்குச் சொட்டுநீர்ப் பாசன முறை மிகச் சிறந்ததாகும். வேர்க்கடலை, கீரை, இதர குறுகிய இடைவெளிப் பயிர்களுக்குத் தெளிப்பு நீர்ப் பாசனம் ஏற்றதாகும். கரும்பு போன்ற பயிருக்குப் பயிர் குறுகிய இடைவெளியும் வரிசைக்கு வரிசை அதிக இடைவெளியுள்ள பயிர்களுக்குப்பைவால் பாசன முறையும் சாலச் சிறந்ததாகும். இந்த நவீன முறைகளால் விவசாயத்தை முன்னதாகவே சரியாகத் திட்டமிட்டு மகசூல் பெறமுடியும். ஏனெனில் பயிர்களின் நீர்த் தேவை, மண்ணின் ஈர்ப்புத் தன்மை வேர்களின் விஸ்தீரணம், பயிர்களின் எண்ணிக்கை அறிந்து சரியான அளவு திட்டவட்டமாக நீர்ப்பாய்ச்சலாம்.

எனவே, ஒரு முழுமையான சாகுபடி இப்பாசன முறைகள் மூலம் திட்டமாகச் செய்ய முடியும்.

**மண்ணுக்கேற்ற பயிர்:** ஒரு பயிரின் வளர்ச்சியில், நிலமும், நீரும் பயிரின் வேர்களும் ஒருங்கிணைந்து, செயல்படுதல் இன்றியமையாததாகிறது. பயிர்களின் நீர்த் தேவை பயிருக்குப் பயிர் வேறுபடுகிறது. உதாரணமாக, கரும்புக்கு 150 செ.மீட்டரும், நெல்லுக்கு 120 செ.மீட்டரும், நிலக்கடலைக்கு 60 செ.மீட்டரும், பருத்திக்கு 75 செ. மீட்டரும் நீர் வேண்டும். இதனை முறையே 40,55,10,15 தடவைகளாகப் பகுத்து பாசனம் அளித்தலும், மற்ற நிரந்தர மரவகைப் பயிர்களான தென்னைக்கு நாளொன்றுக்கு 25 முதல் 30 லிட்டரும், வாழைக்கு 10 லிட்டரும் தேவைப்படுகிறது. இந்த நீர்த்தேவை, நிலத்தின் ஈரப்பிடிப்புத் தன்மையைப் பொருத்தும், (Humidity) மற்றும் ஆவியாதல் (Evaporation) காரணமாக இடத்துக்கு இடம் மாறுபடும். எனவே, ஒரு பயிரின் நீர்த்தேவை- சிக்கனப்படுத்துவதற்கு முக்கியமாக நிலத்திற்கு ஏற்ற பயிர்களைப் பயிரிடுவதால் நல்ல மகசூலுக்கு உத்தரவாதமளிக்கும். உதாரணமாக, நெற்பயிருக்கு வண்டல் கலந்த களிமண் நிலமே உகந்தது. ஏனென்றால் இம்மண்ணில் களிமண் துகள்களின் அளவு 60 சதவிகிதம் மேலிருப்பதால், ஈரப்பிடிப்புத்தன்மை அதிகம். ஆனால் நீர் உட்செல்லும் அளவு குறைவு. அதனால் நெல்லுக்கு மட்டும் 5 செ.மீ. வரை நீர்த் தேக்கம் அவசியமாகிறது. மலைப்பிரதேசங்களில் சரிவாக நிலம் இருப்பதால் நீர்த்தேக்கம் தேவைப்படாத தேயிலை மற்றும் காப்பி போன்ற பயிர்கள் நன்கு வளர்கிறது.



இப்போது ஒரு பயிரின் வளர்ச்சியில் நீரின் பங்கு என்ன - நீர் மண்ணுடன் சேரும்பொழுது மண்ணின் இயற்கைத் தாதுப் பொருட்களோடும் உரங்களுடனும் ஒன்றோடு ஒன்று கலந்து வேர் மூலம் உறிஞ்சப்பட்டு தாவரத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்றடைந்து நீர் மட்டும் இலைகள், தண்டுகள் மூலம் ஆவியாகிறது. இதனை விஞ்ஞான ரீதியாகவும் விளக்க முடியும். ஒரு வித ஊடுருவப்படிவத்தின் ஒரு புறம் அடர்த்தி அதிகமான கரைசலும், மறுபுறம் அடர்த்தி குறைவான கரைசலும் இருக்கும்போது, அடர்த்தி குறைவான கரைசலில் இருக்கும் திரவம் மட்டும் (Solvent) அடர்த்தி அதிகமான கரைசலை நோக்கி (சம அடர்த்தி திரவமாக்கும் நோக்கத்துடன்) செல்கிறது.

இதுபோலப் பயிரின் நீர் அளவு வேர்ப்பகுதி நிலத்தின் நீர் அளவை விடக் குறைவாக இருக்கும்போது நிலத்தின் சத்துள்ள நீர் வேர் என்ற மித ஊடுருவும் படிவத்தின் மூலம் பயிரை அடைந்து வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. இதனைச் சவ்வூடு பரவல் முறை என அழைக்கிறோம். (Osmossis) அதே சமயம் நல்ல நாற்றங்களிலிருந்து பயிரை உப்பு நீர் உள்ள நிலத்தில் நடும்போது நிலத்திலுள்ள நீரின் அடர்த்தி பயிரின் திரவத்தைவிட அதிகமாக இருப்பதால் பயிரிலுள்ள திரவம் சவ்வூடுபரவல் (Osmossis) முறையால் வேர் மூலம் நிலத்திற்கும் செல்வதால் பயிர் மடிய ஏதுவாகிறது.

அதே சமயம் தேவைக்கு அதிகமாக நிலத்தில் நீர் நிற்கும்படி நீர்ப் பாய்ச்சினாலும், வளர்ந்த பயிரில் திடீர் வெள்ளத்தால் நீர் தேங்கினாலும், அதிகமாக வளர்ச்சி திரவம் வேர் மூலம் இழுக்கப்படுகிறது. இதனால் பயிரின் கட்டமைப்பு அளவுக்கதிகமாக விரிவடைந்து, மிதமிஞ்சிய வளர்ச்சி அடைகிறது. ஆனால், வளர்ச்சிக்கேற்ற வலுவைப் பயிரின் தண்டுப் பகுதி அடையாததால் பயிர் வலுவிழந்து மடியவும் ஏதுவாகிறது.

எனவே, நிலத்தின் நீர்ப்பிடிப்புத் தன்மைக்கும், வேர்களின் அமைப்

புக்கும் ஏற்றவாறு, சரியான அளவு நீர்ப்பாய்ச்சுதல் பயிர்கள் சீராக வளரவும் நல்ல மகசூல் கிடைக்கவும் வழி வகுக்கிறது.

நிலங்களின் தன்மை, அமைப்பு மற்றும் சூழ்நிலைக்கு ஏற்றவகையில், பாசன வகைகள் கையாளப்படுகின் றன. ஏரிக்குளங்களைச் சார்ந்த நிலங்களில் ஏரிப்பாசனமும், ஆற்றுப் படுகைகளில் ஆற்றுப்பாசனமும், பிற நிலங்களில் கிணற்றுப் பாசன மும் செய்யப்படுகிறது. இவற்றில் கிணற்றுப் பாசனம்தான் மொத்த பாசன அளவில் 40 சதவிகிதம் விவசாயத்திற்குப் பயன்படுகிறது. குழாய்க் கிணற்றுப் பாசனமும் கிணற்றுப் பாசனத்துடன் சேர்ந்தது தான். இப்பாசனத்திற்கு மட்டும் மோட்டார் மற்றும் ஆயில் இன்ஜி னுடன் கூடிய பம்ப் தேவை என்பது, நாம் அறிந்ததுதான், என்றாலும் பிற பாசன வகைகளைவிட கிணற்றுப் பாசனத்தில், கிணற்றின் அல்லது குழாய்க் கிணற்றின் நீர் மட்டம், ஊற்றின் அளவு ஒவ்வொரு பருவத் திலும், நன்கு அறியமுடிவதால் பயிர்ச் சாகுபடியைத் ஒரு திட்டமிட்ட படிச் செய்யமுடியும். பயிர் விதைக்கும் போதே கிணற்றுப் பாசனத்தின் மூலம் மகசூல் நிச்சயம் எனத் திட்ட மான விவசாயம் செய்யலாம்.

எனவே, கிணற்றுப் பாசனத்தின் உயிர்நாடி நிலத்தடி நீர்தான். ஆக நிலத்தடி நீர் மட்டம் நிலைப்படுத்தி மேம்படுத்தும்போது கிணற்றுப் பாசனமும் சிறப்பாகச் செய்ய முடியும். நிலத்தடி நீர்வளத்தை மேம்படுத்துவற்கு ஏரி குளங்களைத் தூர் எடுப்பதும், புதிதாக ஊற்றுநீர்த் தேக்கங்கள் அமைப்பதும், சரிவுக்குக் குறுக்காகச் சமஉயர வரப்புகள் அமைப்பதும், ஓடைகளில் தடுப் பணைகள் கட்டுவதும் நிரந்தரமான பணிகள் ஆகும். இவை நிலத்தடி நீர் வளத்தைப் பெருக்குவதுடன் மண் அரிப்பைத் தடுத்து மண்வளம் பாதுகாப்பதுடன், பருவ மழைக் காலங்களில் வெள்ளமும் தடுக்கப் படுகிறது.

ஆக, பயிரின் நல் வளர்ச்சிக்கும் மகசூலுக்கும் பயிரின் வேர்களின் அமைப்பும் மண்படிவம், நீரின் அளவு பயிரின் இடைவெளி சார்ந்தே இருக்கும். நிலம் நீர் பயிர் இவற்றின் உறவுகளை மேம்படுத்த வேளாண் மைப் பொறியியல் துறையின் பணிகள். நிலம் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேடுபள்ள நிலங் களைப் புல்டோசர் மூலம் நிரவு பாசனம் செய்ய ஏதுவாக விளை நிலங்களாக்கியும், வேர்கள் ஆழமாகச் செல்லவும் மழைநீர் பூமியில் இறங்க வும் இயந்திர உழுவை மூலம் நிலம் மேம்படுகிறது.

சிறுபாசனத் திட்டத்தின் கீழ் நிலத்தடி நீரை வெளியெடுத்து பாசனம் செய்ய விசைத்துளைக் கருவிகள் மூலம் குழாய்க் கிணறு அமைக்கும் பணியும் பாறைக் கிணறு களைப் பாறை தகர்க்கும் கருவி மூலம் ஆழப்படுத்தும் பணியும் செய்யப்படுகின்றன. மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் சரிவுக் குக் குறுக்காகச் சமஉயர வரப்புகள் அமைத்தும் ஆழ உழவு செய்து மண் அரிப்பைத் தடுத்தும், நிலத்தின் மழைநீர் இறங்க சாகுபடிக்கு ஏது வாக்கும் பணிகள் மேற்கொள்ளப் படுகிறது. மேலும் மண்வளப் பாது காப்புத் திட்டத்தின் தடுப்பு அணைகள் அமைத்து வெள்ளத்தைக் கட்டுப் படுத்தியும், மலைப்பிரதேசங்களில் சரிவுக்குத் தக்கவாறு படிமட்ட வரப் புகளும் மரங்கள் வளர்த்தலும், சம உயரக் கற்சுவர்கள் அமைத்து நிலச்சரிவையும் பயிர்களையும் பாதுகாக்கும் பணிகள் மேற்கொள் ளப்படுகிறது.



★ இன்றைய குழந்தைகளே நாளைய இந்தியாவை அமைப்பவர்கள் என்பதை எப்போதும் நான் உணர்கிறேன். குழந்தைகளை வளர்க்கும் முறையைப் பொறுத்தே, ஒரு நாட்டின் எதிர்காலம் அமையும்.

## கடலில் குப்பையைச் சேமிக்க ஜப்பானில் புதிய அணுகுமுறை

ஜப்பான் நாட்டின் நிலப்பரப்பு மிகச் சிறிதளவே ஆனதாலும், இந்த நாடு நான்கு சிறிய தீவுகளையே கொண்டிருப்பதாலும் இங்கு நாள் தோறும் சேகரிக்கப்படும் குப்பைகளைச் சேமித்து வைக்க தற்சமயம் இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

புதிதாக எரித் தொட்டிகளை (Incinerators) நிறுவ போதிய இடமில்லாமையைக் கண்டு ஜப்பான் நகராட்சிகள் திணறுகின்றன. இனிமேல் இந்த நாட்டில் சேகரிக்கப்படும் குப்பைகளைச் சேமித்து வைக்க தண்ணீரின் மேல் அதற்கான வசதிகளை அமைக்கலாமென ஜப்பான் நாட்டின் சில கட்டுமான நிறுவனங்கள் ஆலோசனை வழங்கியுள்ளன.

ஜப்பான் நாட்டின் விலையுயர்ந்த குறுகிய நிலபரப்பை இத்தகைய செயல்களுக்குப் பயன் படுத்துவதைவிட, கடலில் இதற்குப் போதிய இட வசதிகள் இருப்பதாக இந்நிறுவனங்கள் கருது கின்றன. இத்திட்டத்தின்படி-

ஒரே நாளில் சுமார் 600 டன் குப்பைகளை எரிக்கக்கூடிய பெரிய அளவிலான எரித் தொட்டிகள் (Incinerators) அமைக்கப்படும். வழக்கமான முறையைக் காட்டிலும் மூன்றே ஆண்டுகளில் இந்த எரித்தொட்டிகளை அமைக்க முடியுமெனக் கருதப்படுகிறது. வழக்கமான முறையில் இதற்கு நான்கு ஆண்டுகள் ஆகிறதாம்.

—ஆதாரம் 'இந்து'

# குழந்தைத் தொழிலாளர் பிரச்சினைகள்



**வருமானத்திற்காகப்** பணிக்குச் செல்லும் ஐந்து வயது முதல் பதினான்கு வயது வரையிலான குழந்தைகளை நாம் குழந்தைத் தொழிலாளர்கள் (Child labour) என்கிறோம்.

**மிகவும்** அன்பு செலுத்திப் பராமரிக்கப்பட்டு, உடலும் மனமும் வளர்ச்சிபெற, பயிற்சி அளிக்கப்பட வேண்டிய வயதே குழந்தைப் பருவமாகும். ஆனால் பொருளாதார முன்னேற்றம் அடையாத, இந்தியா போன்ற பல நாடுகளில் குழந்தைகள் குழந்தைப் பருவத்தையும் அரவணைப்பையும் பெற இயலாத கொடுமையைத் தான் நாம் காண முடிகிறது. இந்தியாவில் இக்கொடுமை கிராமப்புறங்களில், படிப்பறிவில்லாத விவசாயத் தொழிலாளர்களிடையேயும், கால்நடைப் பராமரிப்புப் பணிகளிலும், பொதுவாக - ஏழைகளிடையேயும் பெரும்பாலும் காணப்படுகிறது.

1-14 வயது வரையில் எனக் குழந்தைத் தொழிலாளர்கள் 1981-இல் ஒரு கோடியே 36 இலட்சம் பேர் உள்ளனர். இதில் ஒரு கோடியே 26 இலட்சம் பேர் கிராமப்பறங்களில் பணிபுரிகின்றனர். இவர்கள் பெரும்பாலும் உணவு விடுதிகளிலும், வியாபார நிறுவனங்களிலும், கடைகளிலும், சிறுதொழில் பட்டறைகளிலும், பீடித் தொழிற்சாலைகளிலும், பஞ்சு மற்றும் பட்டு நூற்பாலைகளிலும், பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளிலும், ஊதுபத்தித் தயாரிப்பு நிறுவனங்களிலும் அதிகமாகக் காணப்படுகின்றனர்.

சிறுவர், சிறுமியர் பல்வேறு பணிகளில் ஈடுபடுத்தப்படக் காரணம் என்ன? அந்தக் கொடுமை நீக்க என்ன செய்யவேண்டும் என்றெல்லாம் தெளிவுபடுத்தப்படுகிறது இந்தக் கட்டுரையில்:

குழந்தைத் தொழிலாளர்களில் 80 சதவிகிதம் பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பு மற்றும் மலைஜாதியினராக உள்ளனர். 1971-இல் ஒரு கோடியே 7 இலட்சமாக இருந்த குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கை 1981-இல் ஒரு கோடியே 36 இலட்சமாகவும் 1984-இல் ஒரு கோடியே 75 இலட்சமாகவும் வளர்ந்துள்ளது. இந்த நூற்றாண்டு இறுதியில் இந்த எண்ணிக்கை கிராமப்புறங்களில் 50 சதவிகிதமும், நகர்ப்புறங்களில் 100 சதவிகிதமும் அதிகமாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

வறுமையில் வாடும் இலட்சக் கணக்கான ஏழைகள், தங்களது வருமானத்தைப் பெருக்க தங்களது குழந்தைகளின் உழைப்பை எதிர்பார்ப்பதால், இப்பிரச்சினை தீர்க்க முடியாமல் உள்ளது.

### இந்தியாவில் குழந்தைத் தொழிலாளர்கள் பெருகக் காரணங்கள்:

#### ஏழ்மை

குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை பெருகுவதற்குப் பெரிதும் காரணமாக இருப்பது ஏழ்மையே. சம்பாதிக்கும் திறனை, பெற்றோர்கள் இழக்கும் போதும், பெற்றோர்களின் வருமானம் குடும்பச் செலவிற்குப் போதாதபோதும், அந்த வருமானத்தை ஈடுகட்ட குழந்தைகள் வேலைக்கு அனுப்பப்படுகிறார்கள். எல்லாப் பகுதிகளிலும் பிரிவுகளிலும் ஏழ்மை சீராக அமைந்துவிடவில்லை. நகரங்களைவிட, கிராமங்களில் ஏழ்மையின் கொடுமை அதிகமுள்ளது; நகரங்களைவிடக் கிராமங்களில் வருமானம் குறைவாகவும், நிச்சயமற்றதாகவும் உள்ளது. வருமானத்தை நம்பி வாழ்கின்ற சொந்தங்களும், வருமானம் மற்றும் சொத்துக்களில் உள்ள அடிப்படை, வித்தியாசங்களைப் பிரதிபலிக்கும் சுரண்டல்களும், நகரங்களைவிட கிராமத்தில் அதிகமாக இருக்கிறது. கிராமங்களில் சிறு விவசாயிகளிடையேயும் நிலமற்ற தொழிலாளர்களிடையேயும், ஏழ்மை அதிகமாகக் குடி கொண்டுள்ளது. நகர்ப்புறங்களில், நிச்சயமற்ற தொழில் புரிவோர்களிடையே ஏழ்மை பரவிக் கிடக்கிறது. 'இந்தச் சமூகப் பொருளாதாரப் பிரிவுகளிடையேதான் அதிகமாகக் குழந்தைத் தொழிலாளர்கள் காணப்படுகின்றனர். கூடுதலான உழைக்கும் சக்திக்கும், வருமானத்திற்கும், வயதான காலத்தில் பாதுகாப்புக்கும் குழந்தைத் தொழிலாளர்கள் ஆதாரமாக உள்ளனர். எனவே, இப்பிரிவினர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதிலேதான் குழந்தைத் தொழிலாளர்களைக் கட்டுப்படுத்துவதும், அறவே நீக்கப்படுவதும் அடங்கியுள்ளது. (Extract from Child Labour - by International Labour Organisation, Geneva - 1983)

#### அடிப்படைக் கல்வி இல்லாமை

ஏழ்மையுடன் அடிப்படைக் கல்வி வசதிகள் இல்லாமையும் குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்குக் காரணமாக உள்ளது. முன்னேற்றமடைந்த நாடுகள் கல்விக்காக ஏராளமாகச் செலவு செய்யவும், குழந்தைகளைக் கல்விக் கூடங்களுக்குத் தொடர்ந்து பல ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கவும் தயாராக உள்ளன. ஆனால், இந்தியா போன்ற வளரும் நாடுகளில், அடிப்படைக் கல்வி வசதிகள் இருக்கும் இடங்களில்கூட பெற்றோர்கள், உடனடி வருமானத்தைக் கணக்கில் கொண்டு, குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப மறுக்கின்றனர். ஒரு குறிப்பிட்ட வயது வரை கல்வியைக் கட்டாயமாக்குவதில் கீழ்க்கண்ட காரணங்கள் தடையாக உள்ளன. கல்வி இலவசமாகக் கிடைத்தாலும், ஒரு கட்டடத் தொழிலாளி தன் குழந்தையைப் பள்ளிக்கு அனுப்ப இயலாது. அவனுக்குப் படிக்காத குழந்தை ஒரு சொத்து; அவனைப் படிக்க வைக்க வேண்டுமென்ற ஆசை இருவகை நட்டத்தை ஏற்படுத்துகின்றது.

குழந்தை பள்ளிக்குச் செல்லாததால் ஏற்படும் வருமான இழப்பு.

கல்வியினால் ஏற்படும் செலவு ("Child Labour India" - by Jinesh Chandra kulshreshtha)

#### குழந்தைத் தொழிலாளர்கள் - மலிவான தொழிலாளர்கள்:

குழந்தைத் தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்துவதால் குறைந்த முதலீட்டில் அதிக இலாபம் ஈட்ட முடியும். அறுவடைக் காலங்களில் தேவைக்கு ஏற்ப, ' வேலைக்குப் பெரியவர்கள் கிடைக்காதபோது குழந்தைத் தொழிலாளர்களின் தேவை அதிகமாகிறது. குழந்தைத் தொழிலாளர்களைப் பணியில் அமர்த்துவதால், செலவு குறைந்து - அதிகம் இலாபம் கிடைப்பதால் பல தொழிற்சாலைகள் அவர்களையே நாடுகின்றன. உதாரணமாக, சிவகாசியிலுள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகள், விம்கோ போன்ற பன்னாட்டு நிறுவனங்களுடன் போட்டி போடுகிறதென்றால் அதற்குக் காரணம் குழந்தைத் தொழிலாளர்களே. இந்த நிறுவனங்கள் வயது வந்த தொழிலாளர்களைப் பெரும்பாலும் பணிக்கு அமர்த்துவதே இல்லை. அதேபோல் பல்புகள், டியூபுகள், வளையல்கள் போன்றவைகளைத் தயாரிக்கும் உள்நாட்டு - பன்னாட்டு நிறுவனங்கள் குழந்தைத் தொழிலாளர்களை அதிகமாகப் பணியில் அமர்த்தி, அதன் காரணமாகவே இருபத்தைத்து சதவிகிதம் அதிக இலாபத்தை ஈட்டுகின்றன.

#### தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபாடு இல்லாமை:-

இந்தியாவின் குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகமாவதற்கு மற்றொரு காரணம். இவர்களது அடங்கிப்போகும் பணிவான தன்மையே. குழந்தைகள் வேலைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலையை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டு, முதலாளிகள் தங்கள் வசதிக்கு அவர்களைச் சுரண்டுகிறார்கள். அவர்களது குறைவான சம்பளம், சுரண்டலுக்கு வழிவகுக்



கிறது. மணிக்கணக்கில் வேலை செய்தாலும், தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடாமல், வயது வந்த தொழிலாளர்களைவிட அடங்கி ஒடுங்கி வேலை செய்கிறார்கள்.

**இத்தீமையைத் தடுக்கும் முறைகள்**

**ஏழ்மை ஒழிப்பு:**

ஏழ்மையை ஒழிக்க அனைத்துக் கோணங்களிலும் போராட வேண்டும். சீரான வட்டார வளர்ச்சித் திட்டங்களிலும் கிராமப்புற வேலை வாய்ப்புகளை அதிகரிப்பதன் மூலம் ஏழைகளுக்கு நிலம், கடன், நல்ல விதைகள் மற்றும் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றுடன் குடிநீர் மற்றும் நல்வாழ்வுத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்தப்பட வேண்டும். இப்போதுள்ள - கிராமப்புற மகளிர் குழந்தைகள் வேலைவாய்ப்புத் திட்டம் (DWCRA), கிராமப்புற இளைஞர்கள் சுய வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம் (Trysem), ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP), தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் (NREP), ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் (RLEGP) போன்ற வறுமை ஒழிப்புத் திட்டங்களைத் தீவிரமாக அமலாக்குவதன் மூலம் கிராமப்புற ஏழ்மையையும், குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையையும் குறைக்கலாம்.

**வளர்ச்சி**

நம் அரசியல் நிர்ணயச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போலப் பதினான்கு வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வி வழங்கப்பட வேண்டும்.

நமது வறுமை ஒழிப்புத் திட்டங்களெல்லாம் கல்வியும் பயிற்சியும் இரண்டறக் கலந்துவிட்ட அங்கமாக விளங்க வேண்டும். அப்படி வழங்கப்படுகின்ற கல்வியும் பயிற்சியும் அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க ஏதுவாக விளங்க வேண்டும். குழந்தைத் தொழிலாளர்கள் அதிகமாக உள்ள இடங்களில் அவர்கள் தங்களுடைய தம்பி தங்கைகளைப் பராமரிக்கும் பணியிலிருந்து விடுபட்டுப் பள்ளிக்குச் செல்வதற்கு ஏதுவாகக் கைக் குழந்தைகளைப் பராமரிக்கச் சமூகக் கூடங்கள் அமைத்திடல் வேண்டும்.

**விழிப்புணர்வு முகாம்களை நடத்துதல்**

கல்வியைப் பற்றியும், குழந்தைத் தொழிலாளர்களைப் பற்றியும், அதன் தீமைகள் பற்றியும் மக்களிடையே விழிப்புணர்ச்சி முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும்.

**பெண்களின் முன்னேற்றம்**

பெண்களின் நிலை முன்னேறினால் குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதில் மிகுந்த முன்னேற்றம் காணலாம். பெண்கள் வேலைக்குச் சென்றால், அவர்களுக்குப் பதிலாகக் குழந்தைகளை அந்த இடத்தில் பணிக்கு அமர்த்தும் நிலை குறையும். இந்த முறையினால் மற்றொரு பயனும் உண்டு. குறிப்பிட்ட ஒரு சில பணிகளுக்கு மட்டுமே பெண்கள் செல்லும் பழக்கம் நாளடைவில் மாறி அநேகப் பணிகளுக்குப் பெண்கள் செல்லும் நிலைமை ஏற்படும்.

**தொழிற்சங்கங்களின் பங்கு**

குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதில் தொழிற்சங்கங்கள் பெரிய பங்கினை வகிக்க முடியும். அனைத்துத் தொழிற்சங்கங்களின் தலைவர்களை கலந்தாலோசித்துக் குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையைப் பெருமளவில் குறைக்கலாம்.

**குடும்பக் கட்டுப்பாடு**

சிறிய குடும்பம் அமைத்துக் கொள்வதன் முக்கியத்துவத்தையும், குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தையும், தொடர்ந்து வலியுறுத்தி வரவேண்டும். குடும்பம் சிறிதாக இருந்தால், தேவைகள் குறைவாக இருக்கும். அதனால் அதிகப்பணத் தேவைக்காகக் குழந்தைகளைப் பணிக்கு அனுப்பும் வழக்கம் நாளடைவில் மறைய வாய்ப்புகள் பெருகும்.

**மக்கள் தொடர்புப் பணிகள்**

1979-ஆம் ஆண்டு உலகக் குழந்தைகள் ஆண்டாகக் கொண்டாடப்பட்டது. அப்பொழுது குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்க அல்லது முழுவதுமாக அகற்றிட, பாராட்டத்தக்க பல நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.



**ஜனநாயகவாதி சிறிதளவுகூட சுயநலம் இல்லாதவனாக இருக்க வேண்டும். அவனுடைய கருத்தும், கனவும், ஜனநாயகத்தைப் பற்றியதாகவே இருக்க வேண்டும்.**

**—பேரறிஞர் அண்ணா**

அந்த ஆண்டு முடிந்தவுடன் அந்த நடவடிக்கைகள் அனைத்தும் தூங்கிவிட வேண்டும் என்று எந்த நியதியும் இல்லை! தொடர்ந்து மக்களிடையே பிரசாரத்தை நடத்தி, குழந்தைத் தொழிலாளர்களின் பிரச்சினையை, இடைவிடாது கவனித்துச் சரி செய்ய வேண்டும்.

**சட்டங்களை அமல்படுத்துதல்**

குழந்தைத் தொழிலாளர்களின் பிரச்சினைகளைப் போக்க நிறைய சட்டங்கள் இருப்பினும், இப்போதைய உடனடித் தேவை, அந்தச் சட்டங்களை முழுமையாகவும் தீவிரமாகவும் அமல்படுத்துவதே ஆகும். ஆபத்தான பணிகளில் குழந்தைகளை ஈடுபடுத்துவதைச் சட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்துவதன் மூலம் தடுக்கமுடியும். தொழிலாளர் நல ஆய்வின் மூலம் இதை உறுதியுடன் செயலாற்றிட வேண்டும். பணிக்குக் கட்டாயமாகச் செல்ல வேண்டிய சூழ்நிலையில் உள்ள குழந்தைகள் மட்டும் பணிக்குச் சென்று கொண்டே, கல்வி பயிலலாம்.

குழந்தைத் தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவும், குழந்தைத் தொழிலாளர்களே இல்லையெனும் நிலை ஏற்படவும் நாம் இன்னும் பல முனைகளிலும் முயலலாம். ஆனால் ஒன்று: இவைகளையெல்லாம் அரசு மட்டுமே சாதித்துவிடமுடியாது. தொழில் அதிபர்கள், தொழிற்சங்கங்கள் மட்டுமல்லாது உலகம் முழுவதும் உள்ள மக்கள் அனைவரும் இந்தத் தீமையை எதிர்த்துத் தீவிரமாகத் தொடர்ந்து போராடினால் வெற்றி உறுதி.

**ஆதாரம்:-**

"Child labour" - by International Labour Organisation, Geneva-83 and 'Child Labour in India' - by Jinesh Chandra Kulshreshtha)

**தொகுப்பு:- என். இளங்கோ.**

# ஒவ்வாமை



'**நோ**ய்களிலேயே மிகவும் மரியாதையோடு குறிப்பிடும் நோய் எது?' என்று கேள்வி கேட்டு - 'அலர்ஜி' என்று அதற்குப் பதிலும் சொல்லப்பட்டிருந்தது வார ஏடு ஒன்றில்!

படிப்பதற்கு வேடிக்கையாக இருந்தாலும், 'அலர்ஜி' என்பது மேனியெல்லாம் தடிப்பும், அரிப்பும் உண்டாக்கி மிகுந்த தொல்லையை ஏற்படுத்தக் கூடியதாகும்.

'அலர்ஜி' (Allergy) என்றால், 'ஒவ்வாமை' என்று தமிழில் பொருள் கொள்ளப்படுகிறது. ஒவ்வாமை என்றால் ஒத்துக் கொள்ளாமை. மருந்துகளோ, நாம் உட்கொள்ளும் உணவுப் பொருள்களோ நம்முடைய உடலுக்கு ஒத்துக் கொள்ளாத போது, நமது உடலே அவற்றிற்கு எதிர்ப்புக் காட்டும். இந்த நிலைமையைத் தான் நாம் ஒவ்வாமை என்கிறோம்.

இந்த நோய் பற்றி, டாக்டர் எம்.ஜெயராஜா, எம்.பி.பி.எஸ்., எம்.டி., டி.எம்., அவர்களைச் சந்தித்து விளக்கம் கேட்டோம். இந்தச் சந்திப்பின்போது நாம் கேட்ட வினாக்களும், அவர் அளித்த பயன் மிகுந்த விடை களும் இங்கே தொகுத்தளிக்கப்படுகின்றன.

**ஒவ்வாமை (Allergy) என்றால் என்ன அதை நீக்கும் வழிகள் யாவை என்பதைப் பல கோணங்களிலும் இந்தக் கட்டுரை விளக்குகிறது:**

**''ஒவ்வாமை என்பது ஒருவருக்கு எவ்வாறெல்லாம் ஏற்படக்கூடும்? இதற்கான அறிகுறிகள் யாவை?''**

உதாரணமாக - ஒருவர், புதிய மருந்து ஒன்றை உட்கொள்வார்... சற்று நேரத்தில் உடலெல்லாம் தடிப்புத் தடிப்பாக ஏற்பட்டு, தோல் சிவந்து நமைச்சல் ஏற்படலாம்...

ஒருவர், வீட்டில் தூசி தட்டிக் கொண்டிருப்பார்... திடீரென மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டு, வினோத ஒலியுடன் அவருக்கு மூச்சு இழுப்பு ஏற்படும்...

மற்றொருவர் ஒரு பூங்காவிற்குப் போயிருப்பார்... திடீரெனத் தலை வலிக்கும்... மூக்கு மற்றும் கண்களிலிருந்து நீர் வடியும்... மூக்கடைப்பும் தும்மலும் விடாது ஏற்படலாம்.

இவையனைத்தும் ஒவ்வாமையின் சில அறிகுறிகள்... இந்த ஒவ்வாமை அறிகுறிகள் ஆளுக்கு ஆள், நேரத்துக்கு நேரம் வேறுபடலாம். அதாவது ஒருவருக்கு ஒரு ஒவ்வாப் பொருள் ஒரு வித்மான அறிகுறிகளை ஏற்படுத்தினால், அதே பொருள் மற்றொருவருக்கு வேறுவிதமான அறிகுறிகளை ஏற்படுத்தலாம்.

**''ஒவ்வாமை என்பது பல வகைகளை உடையதா?''**

இந்த அறிகுறிகளுக்கு ஏற்ப ஒவ்வாமையை நாம் பல வகைகளாகப் பிரிக்கலாம். 'தும்மல் நோய்', ஆஸ்த்மா, விஷக்கடி, எக்ஸிமா என்ற தோலில் ஏற்படும் நமைச்சல் ஆகியவை ஒவ்வாமை நோய்களில் குறிப்பிடத்தக்கவைகளாகும்.

**''ஒவ்வாமை எவ்வாறு ஏற்படுகிறது?''**

நோய்க்கிருமிகளோ, அல்லது எதிர்ப்பொருட்கள் (Antigens) எனப்படும் அன்னியப் பொருட்களோ நமது உடலுக்குள் நுழைந்த உடனேயே அவற்றை அழிக்க நமது உடலில் பலவிதமான பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளன.

முதலாவதாக - நோய்க்கிருமிகளையோ, அன்னியப் பொருட்களையோ செயலிழக்கச் செய்யும் எதிர் அணுக்கள் (Antibodies) உடலில் உற்பத்தி செய்யப்படுவதைக் கூறலாம். இந்த எதிரணுக்கள் B-Lymphocytes எனப்படும் இரத்தத்திலுள்ள வெள்ளை அணுக்களால் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த எதிரணுக்கள் Immunoglobulins என்றழைக்கப்படுகின்றன. ஏதாவது தீங்கு விளைவிக்கக் கூடிய பொருட்கள் உடலுக்குள் நுழைந்தால் அவற்றை இவை சிதைத்து விடுகின்றன. முக்கியமாக ஐந்து வகை எதிரணுக்கள் நமது ரத்தத்தில் சுற்றிக் கொண்டிருக்கின்றன. IgG, IgA, IgM, IgD, IgE என அவை குறிப்பிடப்படும். ஒவ்வொருவகை எதிரணுவுக்கும் அதற்கெனத் தனித்தனிப் பணிகள் உண்டு. முக்கியமாக IgE எதிரணு ஒவ்வாமை சம்பந்தமான



**டாக்டர் எம்.ஜெயராஜா**

நோய்க் குறிகள் ஏற்படக் காரண மாக உள்ளது.

உடலின் அடுத்த பாதுகாப்புக் கவசமாகச் செயல்படுபவை சில வகை வெள்ளையணுக்களாகும். Neutrophils, Phagocytes, Macrophages போன்ற வெள்ளையணுக்கள் இதில் அடங்கும்.

உடலின் பல பகுதிகளில் மாஸ்ட் செல்கள் (Mast Cells) எனப் படும் பிரத்தியேக செல்கள் உள்ளன; ஹிஸ்டமைன் (Histamine) மற்றும் பல்வேறு வகையான வேதிப் பொருட்களை - அதாவது கெமிகல் களை இவை உற்பத்தி செய்கின்றன. அதோடு ஒருவகை எதிரணுக்களை யும் இந்தச் செல்கள் கவர்ந்து இழுக்கின்றன. அதனால் அந்த எதிரணுக்கள் இந்த மாஸ்ட் செல் களின் மீது எப்போதும் ஒட்டிக் கொண்டிருக்கும். உடலில் நோய்க் கிருமிகளோ, அன்னியப் பொருட் களோ நுழையும் போது அவற்றை அழிப்பதற்காக மாஸ்ட் செல்களில் ஒட்டிக் கொண்டிருக்கும் எதிர ணுக்கள் விரையும். உடனே மாஸ்ட் செல்கள் வெடித்து அவற்றினுள் இருக்கும் ஹிஸ்டமைன் மற்றும் வேறு சில வேதிப் பொருட்கள் வெளியேற்றுகின்றன. இவை சிறிய ரத்தக் குழாய்களிலிருந்து அதிக அளவில் நிணநீர் எனப்படும் பிளாஸ் மாவை வெளியேறச் செய்யும். நோய்க் கிருமிகளை எதிர்ப்ப தற்கோ, அந்நியப் பொருட்களைச் சிதைப்பதற்கோ தேவையான பொருட் களும் அந்த நிணநீரில் இருக்கும். இதனால் அந்தக் காயத்தைச் சுற்றி லும் வீக்கம் ஏற்படுகிறது. ஆகவே இத்தகைய வீக்கம் நமது உடலில் இயல்பாக உண்டாக்கப்படும் ஒரு பாதுகாப்பு ஏற்பாடுதான்.

**இவை தவிர வேறு வகைகளிலும் நமது உடலுக்கு ஆபத்து ஏற்பட லாம். உதாரணத்திற்கு ஒரு விலங்கு நம்மைத் தாக்க வருவதாக வைத்துக் கொள்வோம். உடனே நாம் அந்த விலங்கை எதிர்த்துப் போரிடத் தயாராக வேண்டும். அல்லது தப் பித்து ஓடத் தயாராக வேண்டும். அதற்கு நமது உடலுக்கு அதிக அளவில் ஆற்றல் தேவைப்படும். இத்தகைய சூழ்நிலையில் நமது உயிரைப் பாதுகாக்க நமது உடலில் ஒரு விசேஷப் பாதுகாப்பு ஏற்பாடு**

## நகராட்சிக் கழிவுகளிலிருந்து சரளைக் கற்கள்!

**நகராட்சிக் கழிவுப் பொருட் களிலிருந்து எடை குறைந்த இலே சான சரளைக் கற்கள் தயாரிக்கும் முறையை, ஆஸ்திரேலிய நிறுவனம் ஒன்று கண்டுபிடித்துள்ளது. இந்த முறையில் நகராட்சிக் கழிவுகள் களிமண்ணுடன் சேர்க்கப்பட்டு 'நியூட்ரலைட்' என்ற ஒரு வகையான மண் கல் தயாரிக்கப்படுகிறது. இந்தக் கற்களைக் கட்டடங்கள் மற் றும் பிற கட்டுமானப் பணிகளுக்குப் பயன்படுத்தலாம்.**

**—ஆதாரம் 'இந்து'**

உள்ளது. நமது உடலிலுள்ள தசைகள் பொதுவாக இரண்டு வகை நரம்பு களால் கட்டுப்படுத்தப்படுகின்றன. அவற்றுள் ஒரு வகை நரம்புகள் பரிவு நரம்புகள் (அதாவது Sympathetic Nerves) என்றும், மற்ற வகை நரம்புகள் உபபரிவு நரம்புகள் (Parasympathetic Nerves) என்றும் அழைக்கப்படுகின்றன. பரிவு நரம் புகள் உடலைச் செயல்படுவதற்குத் தயார் செய்கின்றன; உபபரிவு நரம்புகள் உடலை ஓய்வெடுப்ப தற்குத் தயார் செய்கின்றன. பரிவு நரம்புகள் வெளியிடும் பொருட் களில் அட்ரீனலின் (Adrenaline) என்ற ஹார்மோன் முக்கியமானது. இது இதயத்தின் வேகத்தை அதிகரிக் கச் செய்கிறது; இரத்தக் குழாய்களை விரிவடையச் செய்கிறது. மூச்சுக் குழாய்களை விரிவடையச் செய்து நுரையீரல்களுக்குள் அதிகக் காற்றுச் செல்ல வழி செய்கிறது.

உபபரிவு நரம்புகள் வெளியிடும் பொருட்களில் அஸிட்டைல் கோலின் Acetylcholine) என்ற பொருள் முக்கியமானது. இது இதயத்தின் வேகத்தைக் குறைக்கச் செய்கிறது; மூச்சுக் குழாய்களையும் சுருங்கச் செய்கிறது.

**''மனித உடலுக்கு இவ்வாறான துன்பமெல்லாம் ஏற்படாதிருக்கத் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடு, இயற்கை யாகவே கிடையாதா?''**

உண்டு. நமது உடலின் பாது காப்பு ஏற்பாடுகளைப் பற்றிய விவரமும் இந்தப் பாதுகாப்பு ஏற் பாடுகளுக்கும் ஒவ்வாமைக்கும் உள்ள தொடர்பும் என்ன தெரி யுமா? எல்லோருடைய உடலிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் உண்டு என் றாலும், சிலருடைய உடலில் மட்டும் இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் அனாவசியமாகச் செயல்படுகின்றன. ஒவ்வாமை உள்ளவர்களின் உடல் சாதாரணமாக உடலுக்குத் தீங்கு விளைவிக்காத பொருட்களைக் கூட ஏதோ காரணத்தினால் நஞ்சுப் பொருளாக, அல்லது நோய்க் கிருமி யாகத் தவறாக அடையாளம் கண்டு அவற்றைத் தாக்கத் தொடங்கிவிடு கிறது. இதனால் உடலின் இயல் பான ஆரோக்கியம் பாதிக்கப்படு கின்றது. இதையே ஒவ்வாமை என் கிறோம். ஆனால், சிலருக்கு மட்டும் ஏன் ஒவ்வாமை ஏற்படுகிறது என்ப தற்கான காரணம், இன்னும் முழுமை யாகக் கண்டுபிடிக்கப்படவில்லை.

ஒருவருக்கு ஒவ்வாமை இருந் தால் பொதுவாக அவரது குடும்பத் தில் மற்றவர்களுக்கும் ஒவ்வாமை ஏற்பட அதிக வாய்ப்புண்டு. எனவே ஒவ்வாமைக்கு மரபு முக்கியக் காரணமாக இருக்கலாம் எனக் கருதப் படுகிறது.

**''நம் உடலில் ஒவ்வாமை ஏற்பட எவையெல்லாம் மூல காரணமாக இருக்கின்றன?''**

சாதாரணமாகத் தீங்கு விளை விக்காத சில பொருட்கள் சிலரது



**★ நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாப்பதிலும், ஒற்றுமையோடு பாடுபடுவதிலும்தான், நமது முன்னேற்றம் இருக்கின்றது.**

உடலில் கடுமையான எதிர்ப்பைத் தோற்றுவிக்கின்றன. இத்தகைய பொருட்கள் 'ஒவ்வாப் பொருட்கள்' அல்லது 'அலர்ஜென்ஸ்' என அழைக்கப்படுகின்றன. ஒவ்வாமை யுள்ள ஒருவரது உடலில் ஒரு ஒவ்வாப் பொருள் முதல்முறையாக நுழையும் போது வெளிப்படையான பாதிப்புகள் எதுவும் ஏற்படுவதில்லை. ஆனால் அந்த ஒவ்வாப் பொருளுக்கு அவரது உடலில் எதிரணுக்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவை மாஸ்ட் செல்களில் ஒட்டிக் கொள்ளும். மறுமுறை அந்த ஒவ்வாப் பொருள் உடலுக்குள் ஊடுருவும் போது, மாஸ்ட் செல்கள் உடைந்து ஹிஸ்டமைன் மற்றும் இதர பொருட்கள் வெளியாகின்றன. இதனால் ஏற்படும் விளைவுகள் உடலின் எந்தப் பகுதியில் நிகழ்கிறது என்பதைப் பொறுத்தது.

- மூக்கில் இது நிகழ்ந்தால் மூக்கிலிருந்து நீர் ஒழுகும்; மூக்கு அடைக்கும்; தும்மல் வரும்; கண்களிலும் இது போல் நீர் வடியும், அரிப்பு ஏற்படும், கண் சிவக்கும். இதையே நாம் "Allergic Rhinitis" அல்லது தும்மல் நோய் என்கிறோம். பொதுவாகப் பூக்களின் மகரந்தம், தூசி உண்ணி (Dust Mites) எனப்படும் நுண்ணிய பூச்சிகள், அழகு சாதனப் பொருட்கள் இதை ஏற்படுத்தலாம்.

நுரையீரலிலுள்ள சிறிய மூச்சுக் குழாய்களில் இது நடந்தால், மூச்சுக் குழாய்களின் தசைகள் சுருங்கி, குழாய்கள் சிறியதாகி மூச்சு விடுவதில் சிரமமும், இருமலும் தோன்றும்; கஷ்டப்பட்டு மூச்சு விடுவதால் மூச்சுக் காற்று ஒருவித பிரத்தியேக ஒலியுடன் வெளியேறுகிறது. இதையே நாம் ஆஸ்த்மா என்கிறோம்.

குடலில் இத்தகைய விளைவுகள் தோன்றும்போது, வயிற்றுப்போக்கு, குமட்டல், வயிற்று வலி ஆகியவை தோன்றக்கூடும். இத்தகைய நோய்க் குறிகள் தோன்றக் காரணம் ஹிஸ்டமைன் குடலில் உள்ள தசைகளைச் சுருங்கச் செய்வது தான். முக்கியமாகப் பால், முட்டை, கோதுமை, சாக்லெட், கடல் உணவுகள், கொட்டைகள் இவற்றில் உள்ள சில புரதங்கள் சிலருக்கு ஒத்துக் கொள்வதில்லை.

தோலில் ஒவ்வாமை தொடர்பான பாதிப்புகள் ஏற்படும்போது,



விஷக்கடி எனப்படும் உடலில் நமைச்சலுடன்• ஏற்படும் தடிப்பு (Urticaria) உராய்வுத் தோல் நோய் (Contact Dermatitis) போன்ற தோல் வியாதிகள் தோன்றுகின்றன. குங்குமம், தோலில் தடவப்படும் கிரீம்கள், மருந்துகள், சிலவகை சோப்புகள் கூட சிலருக்குத் தோலில் ஒவ்வாமை ஏற்படுத்தலாம்.

எனவே ஒவ்வாமையின் நோய்க் குறிகள் பலவேறாக இருந்தாலும், அவற்றுக்குப் பின்னால் நடக்கின்ற நிகழ்பாடுகள் பொதுவானவையே. உடலின் எந்தப் பகுதி வழியே ஒவ்வாப் பொருள் தாக்குகிறது என்பதைப் பொறுத்து மேற்கூறிய நோய்கள் ஏற்படுகின்றன.

**'ஆஸ்த்துமா நோய்க்கும் மூல காரணம் ஒவ்வாமை தானா?'**

இந்த வகை நோய்களில் மிகவும் மோசமானது அதுதான். ஆஸ்த்மாவைப் பற்றிச் சற்று இங்கே கொஞ்சம் விவரமாகச் சொல்லலாம். பலவித உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், சுற்றுப்புறச் சூழலில் உள்ள மாசுகள், நோய்க் கிருமிகள், மிதமிஞ்சிய உடற்பயிற்சி, மற்றும் மன எழுச்சிக் காரணங்களால் ஆஸ்த்மா தோன்றலாம்.

சுற்றுப்புறச் சூழல் மாசுபடுவதால் ஏற்படும் Ozone, Nitrogen Dioxide மற்றும் Sulphur Dioxide போன்ற பொருட்களும் சிலருக்கு ஆஸ்த்துமா வரக் காரணமாக அமையும்.

சில வகைத் தொழில் செய்பவர்களுக்கு - அதிலும் முக்கியமாக மரத்தூள் காய்கறிகளின் தூசி ஆகியவற்றினிடையே வேலை செய்பவர்களுக்கும், சிலவகை மருந்துத் தொழிற்சாலைகளில் பணிபுரிவோருக்கும், சிலவகைக் கெமிக்கல்கள் மற்றும் பிளாஸ்டிக் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களுக்கும், மிருகங்களின் ரோமம் மற்றும் சிறிய பூச்சிகளின் கழிவுகளிடையே வேலையில் ஈடுபடுவோருக்கும் ஆஸ்த்துமா ஏற்படக் கூடும். வளர்ப்புப் பிராணிகளின் முடியின் காரணமாகச் சிலருக்கு ஆஸ்த்துமா தோன்றலாம்.

அதிக அளவு உடற்பயிற்சி அநேகமாக ஆஸ்த்துமா நோய் உள்ளவர்கள் அனைவருக்குமே நோயின் தீவிரத்தைக் கடுமையாக்கும்.

மனக்கிளர்ச்சி (Emotional Stress) ஏறக்குறைய 50 சதவிகிதம் ஆஸ்த்துமா நோயாளிகளுக்கு நோயின் அடிப்படைக் காரணமாக அமைகிறது. அதிகப்படியான சோகம் மட்டுமின்றி, அதிகப்படியான மன மகிழ்ச்சியும் கூட ஆஸ்த்துமாவை உண்டாக்கலாம்!

ஆஸ்த்துமா நோய் எந்த வயதினரையும் தாக்கலாம் என்றாலும், இந்நோயால் அவதிப்படுபவர்களில், 100-க்கு 50 பேருக்கு, 10 வயதுக்கு உள்ளேயே இந்நோய் ஆரம்பித்து விடுகிறது. நாளடைவில் பலருக்குத் தன்னாலேயே இந்நோய் குணமாகவும் வாய்ப்புண்டு.

**"சாதாரணமாக எப்படிப்பட்ட பொருட்களினால் ஒருவருக்கு ஒவ்வாமை நோய் தோன்றக்கூடும்?"**

பொதுவாக நாம் சாதாரணமாக அன்றாடம் பயன்படுத்தக்கூடிய பல பொருட்களில் எது வேண்டுமானாலும் ஒவ்வாப் பொருளாக இருக்கலாம். உணவுப் பொருட்கள், மருந்



**★ நம்பிக்கை இல்லாமல் செய்யும் முயற்சி, அடிவாரம் இல்லாத கிணற்றை ஆழம் காண முயற்சி செய்வதற்கு ஒப்பாகும்.**

துகள் எதுவுமே அதற்கு விதிவிலக்கு இல்லை. எனவே ஒவ்வாப் பொருளாக இருக்கக் கூடிய பொருட்களையெல்லாம் நாம் பட்டியலிட்டு விட முடியாது.

மிக முக்கியமாக உணவுப் பொருட்கள், மருந்துகள், தூசி உண்ணி, மகரந்தம் போன்ற சில பொருட்களே பெரும்பாலும் ஒவ்வாமைக்குக் காரணமாக உள்ளன. உணவு ஒவ்வாமை உள்ள ஒருவனுக்கு எந்த உணவுப் பொருள் ஒவ்வாப் பொருளாக இருக்கிறது என்பதைக் கண்டறிவது மிகவும் கடினம். நீக்கிப் பரிசோதித்தல், அதாவது (Elimination Diet) என்ற முறையில் சந்தேகப்படும் பொருட்களை ஒவ்வொன்றாக ஐந்து தினங்களுக்கு நிறுத்திப் பார்த்து, ஒவ்வாமை அறிகுறிகள் மறைகின்றனவா எனப் பார்ப்பது ஒரு முறை. அல்லது, பொதுவாக ஒவ்வாமை உருவாக்கக் கூடிய பல்வேறு பொருட்களின் கரைசலை சிறிய ஊசி மூலம் தோலில் போட்டுப் பார்த்து எந்தப் பொருள் அந்த ஒருவரது தோலில் தடிப்பை உண்டாக்குகிறதென்று நோக்கி ஒவ்வாமை உருவாக்கும் பொருட்களைக் கண்டறியலாம்.

**''ஒவ்வாமை நோயுள்ளவர்களுக்கான சிகிச்சை முறைகளைப் பற்றிக் கொஞ்சம் தெரிவியுங்களேன்?''**

தங்களுக்கு ஒவ்வாத பொருட்களையும் மருந்துகளையும் தவிர்க்க வேண்டும். இதுவே சிகிச்சையின் மிக முக்கியமான அம்சமாகும். ஆஸ்த்துமா நோயுள்ளவர்கள் - புகை பிடிப்பதை அறவே நிறுத்த வேண்டும். சுற்றுப்புறச் சூழல் மாசுபடாத இடங்களில் வாழ முயற்சிக்கலாம். மித மிஞ்சிய மன எழுச்சிகளைத் தவிர்க்க வேண்டும். அளவுக்கதிகமான உடற்பயிற்சி கூடாது. அதிகக் குளிருள்ள சூழ்நிலைகளைத் தவிர்க்கலாம். மருந்து வகைகளில்' ஆஸ்த்துமா நோயுள்ளவர்களுக்கு அட்ரீனலின், ஸால்பூடமால், டெர்பூடலின், அமினோஃபிலின், டெரிஃபிலின், கார்டிகோ ஸ்டீராய்டுகள் ஆகியவை மிகவும் பயனளிக்கின்றன. இவையனைத்தும் சுருங்கிய மூச்சுக் குழாய்களை விரிவடையச் செய்கின்றன. குரோமோலின் சோடியம் என்ற மருந்து மாஸ்ட் செல்கள் சிதறாமல் பாதுகாத்து ஆஸ்த்துமா அடிக்கடி வராமல் பாதுகாக்கக் கூடியதாகும்.

பொதுவாக மற்றவகை ஒவ்வாமை நோய்களுக்கும் குரோமோலின் சோடியம் மருந்து பயனுள்ளதாக உள்ளது. ஒவ்வாமை நோய்க் குறிகள் அடிக்கடி ஏற்படாமல் இது பாதுகாக்கிறது. இதே போல் கீடோடிஃபென் (Ketotifen) எனப்படும் புதியதோர் மருந்தும் ஒவ்வாமை அடிக்கடி வராமல் தடுக்க பயன்படுகிறது.

Antihistamines எனப்படும் ஹிஸ்டமைனுக்கு மாற்று மருந்துகளும், Glucocorticoids வகை மருந்துகளும் ஒவ்வாமை நோய்களின் தீவிரத்தைப் பெருமளவு குறைக்கின்றன.

ஆனால் இத்தகைய மருந்துகளை மருத்துவரின் அறிவுரைப்படி - தான் பயன்படுத்த வேண்டும்.

Desensitization Therapy எனப்படும் முறையில், உடலுக்கு ஒத்துக் கொள்ளாத பொருளையே கரைசலாக்கி ஊசி மூலம் சில நாட்கள் இடைவெளியில் கொஞ்சம் கொஞ்சமாகச் செலுத்தி, உடலின் எதிர்ப்புச் சக்தியை வளர்க்கிறார்கள். இதுவும் ஓரளவுக்குப் பலனளிக்கிறது.

**''அதெல்லாம் சரி; நோய் தீர்க்கும் மருந்துகளே கூட சில நேரங்களில் ஒவ்வாமை நோயை உண்டாக்கி விடுகின்றன என்கிறார்களே; அதெப்படி?''**

எல்லா மருந்துகளும், எல்லோருக்கும் அப்படிப்பட்ட பாதிப்புகளை ஏற்படுத்துவதில்லை; சில நேரங்களில் சில மருந்துகள் அப்படிப்பட்ட உபாதைகளுக்குக் காரணமாக இருந்து விடுவது உண்டு.

மருந்துப் பொருட்களை எடுத்துக் கொண்டால், முக்கியமாக ஆஸ்பிரின், அதே குணமுள்ள - வலி அல்லது வீக்கத்தைக் குறைக்கப் பயன்படுத்தப்படும் புரூஃபென் (Brufen), இன்டோமெதாசின் (Indomethacin) போன்ற வகை மருந்துகளும் - நிறமேற்ற வேண்டும் என்பதற்காக உணவுப் பொருட்களில் கலக்கப்படும் டார்ட்ராசின் (Tartrazine) என்ற பொருளும் அப்படிப்பட்ட விளைவை உண்டாக்கக் கூடும். உணவுப் பொருள் கெடாதிருக்கப் பயன்படுத்தப்படும் சல்பைடிங் ஏஜண்ட்ஸ் (Sulphiting Agents) அதிலும் குறிப்பாக சல்பர்-டை-ஆக்ஸைடு Sulphur Di-oxide) எனப்படும் பொருளும் சிலருக்கு ஒத்துக் கொள்ளாது; இதனால் அவர்களுக்கு அலர்ஜி நோய் ஏற்படக் கூடும். அவ்வளவே!''

**- சந்திப்பு: இல. இராசேந்திரன்.**

## புதிய சேமிப்புத் திட்டங்கள்

**தே**சிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் ஒன்றான பாங்க் ஆஃப் பரோடா, தனது 84-வது தொடக்க நாள் விழாவினையொட்டி இரண்டு புதிய சேமிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தியிருக்கிறது. YATHA SHATHI JAMA YOJANA மற்றும் FAST ACCESS DEPOSIT SCHEME என்னும் பெயருடைய இவ்விரு சேமிப்புத் திட்டங்களும் சாதாரண மக்களும் சேமிப்பில் ஈடுபட வசதியாகப் புதுமையான முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வங்கி 1990-'91-ஆம் நிதியாண்டில் ரூ.14,678 கோடியை டெபாசிட்டுக்கள் மூலம் பெற்றிருந்தது. இதில் 8,977 கோடி ரூபாயைக் கடனாக வழங்கியுள்ளது. கடந்த ஆண்டில் இந்த வங்கியின் மொத்த இலாபத் தொகை ரூ.35 கோடி. இதில் ரூ.10 கோடியை ஈவுத் தொகையாக அரசுக்கு அளித்துள்ளது. கடந்த ஆண்டில் இந்த வங்கியின் வளர்ச்சி 19.4 சதவிகிதம். இது நமது நாட்டின் தொழில் வளர்ச்சியைவிட அதிகமானதாகும்.

பாங்க் ஆஃப் பரோடா இந்தியாவில் மொத்தம் 2,274 கிளை அலுவலகங்களையும் அயல் நாடுகளில் 48 கிளைகளையும் கொண்டு செயல்படுகிறது. தென் மண்டலத்தில் இந்த வங்கிக்கு 190 கிளைகள் உள்ளன. இதில் தமிழ்நாட்டில் மட்டும் 81 கிளைகள் இருக்கின்றன. கடந்த ஆண்டில் இந்த தென் மண்டலக் கிளைகள் மட்டும் ரூ.300 கோடிக்கு ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக்கைகள் செய்துள்ளன. இதில் இந்த வங்கியின் சென்னை அயல் நாட்டுக் கிளை மட்டும் ரூ.110 கோடி அளவுக்குக் கடந்த ஆண்டில் வியாபாரம் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# மாணவர் பக்கம்



## காந்தியடிகளுக்குப் பிடித்த பாடல்

அண்ணல் காந்தியடிகளைக் கவர்ந்த பாடல் ஒன்று உண்டு. அது என்ன? அதை அவரே சொல்லக் கேட்போம்:

''ஒழுக்கமே எல்லாவற்றிக்கும் அடிப்படை; சத்தியமே ஒழுக்கமெல்லாவற்றின் சாரமும்'' என்று நான் கொண்ட உறுதியே அது. சத்தியம் என் ஒரே இலட்சியமாயிற்று. ஒவ்வொரு நாளும் அதன் மகிமை வளரலாயிற்று. அதற்கு நான் கொண்ட பொருளும் விரிவாகிக் கொண்டே வந்தது.

''அதேபோல நன்னெறியைப் போதிக்கும் ஒரு குஜராத்திப் பாடலும் என் அறிவையும் உள்ளத்தையும், கொள்ளை கொண்டது. 'தீமை செய்தோருக்கும் நன்மை செய்' என்ற அப்பாடலின் போதனை, என் வாழ்க்கையின் வழி காட்டும் தருமமாயிற்று. அதில் எனக்கு அதிகப் பற்று உண்டாகி விட்டதால் அதை மேற்கோளாகக் கொண்டு பற்பல சோதனைகளையும் செய்யத் தொடங்கினேன். மிக அற்புதமானவை என நான் எண்ணும் அப்பாடலின் வரிகள் இவை:

'உண்ணும் நீர் தந்த ஒருவனுக்குக் கைம்மாறாய்
விண்ணமுதைப்போல் அன்னம் விரும்பிப் படைத்திடுவாய்
அன்போடு கும்பிட்டால் அடிபணிந்து நீதொழுவாய்
செம்பான காசுக்குச் செம்பொன்னைத் தந்திடுவாய்
உயிர்காத்தோன் துன்பத்தை உயிர்கொடுத்து நீ
துடைப்பாய்
செயலாலும் சொல்லாலும் சிந்தையினாலும் பெரியோர்
சின்னஞ்சிறு உதவிசெய்தவர்க்கு எந்நாளும்
ஒன்றுக்குப் பத்தாய் உவந்துசெய்வர் பேருதவி
வையத்தார் எல்லோரும் ஒன்றெனவே மாண்புடையோர்
ஐயப்பா டின்றி அறிந்திருக்கும் காரணத்தால்
இன்னாசெய்தாரை ஒறுக்க, அவர் நாண
நன்னயம் செய்து விடுவர் இந்நானிலத்தே.'

—'சத்திய சோதனை' என்னும் நூலிலிருந்து



## திறமை வளர்க்கனும்

திட்ட மிட்டுச் செயல்கள் புரியும்
திறமை வளர்க்கனும்- அதைத்
தினமும் செய்தே வெற்றிக் கனிகள்
தட்டிப் பறிக்கனும்!
பெட்ட கம்போல் நமது நெஞ்சைப்
பேணிக் காக்கனும்- அதில்
பேர் அறிவாம் பெரும் பொருளைப்
பூட்டி வைக்கனும்!

-அழகு பழனிச்சாமி

● முதன் முதலாக 'டப்பிங்' முறையில் தயாரான இந்திப் படம் தமிழ் நாட்டில்தான் வெளியாகி இருக்கிறது. அது எது?

—1944ஆம் ஆண்டு ஏ.வி.எம். தயாரித்த 'ஹரிச்சந்திரா' என்ற படம் அண்டை மொழியிலிருந்து 'டப்பிங்' செய்யப்பட்டது.

● தமிழ்நாட்டில் முதன் முதலில் எம்.பி.பி.எஸ். மருத்துவப் பட்டம் பெற்ற பெண்மணி யார்?

—டாக்டர் முத்துலட்சுமிரெட்டி

● ஐ.நா.சபையின் தலைவராக இருந்த முதல் பெண்மணி யார்?

—பண்டிட் விஜயலட்சுமி.

சந்திரனில் மலைகள் இருப்பதை முதன்முதலில் ஆராய்ந்து கூறியவர் யார்?

—கலீலியோ.

● விண்வெளியில் பயணம் செய்த முதல் பெண்மணி யார்?

—வாலண்டினா தெரஸ்கோவா.

## முதன் முதலில்

● முதன் முதலில் இரயில்வே கால அட்டவணை யாரால் வெளியிடப் பட்டது?

—ஜார்ஜ் பராட்ஸா.

● முதன் முதலாகத் தபால்களை விமானம் மூலம் எப்பொழுது ஏற்றிச் சென்றார்கள்?

—1911-ஆம் ஆண்டு பிப்ரவரி 18-ஆம் தேதி.

● முதன் முதலில் இந்தியாவில் இருப்புப் பாதை எங்கு போடப் பட்டது?

—பம்பாயிலிருந்து தாணாவிற்கு.

● முதலில் சைக்கிளைத் தயாரித்தவர் யார்?

—1839-இல் ஸ்காட்லாந்தைச் சேர்ந்த கிரிக் பாட்ரிக் மாக்மிலன்.


தலைமைச்செயலாளர்
மாண்புமிகு
முதலமைச்சர்









## டாக்டர் இராதாகிருஷ்ணன் வாழ்க்கைக் குறிப்பு

1888 : செப்.5. டாக்டர் இராதாகிருஷ்ணன் பிறப்பு.

1903 : மெட்ரிகுலேஷன் தேர்வு

1905 : எப்.ஏ.தேர்வில் முதலாவதாகத் தேர்வு.

1908 : பி.ஏ. தேர்வில் முதலாவதாகத் தேர்வு.

1917 : சென்னை மாநிலக் கல்லூரியில் தர்க்க இயல் பேராசிரியர்

தமது முதல் ஆராய்ச்சிக் கட்டுரை வெளியிடல்-டாக்டர் பட்டம் பெறுதல்.

1910 : சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரியில் சேர்தல்.

1918 : 1921 : மைசூர் மகாராஜா கல்லூரியில் தத்துவ இயல் பேராசிரியர்

1927 : 1928 : 1930 : கல்கத்தா பல்கலைக் கழகத்தில், முதுகலைக் குழுத் தலைவர்.

1931 : பிரிட்டிஷ் அரசு, சர் பட்டம் வழங்கல்.

1931 : 1936 : ஆந்திரப் பல்கலைக் கழகத் துணை வேந்தர்.

1936 : 1942 : ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தின் தத்துவப் பேராசிரியர்.

1936 : பிரிட்டிஷ் சாம்ராஜ்யப் பல்கலைக் கழகங்களின் மாநாட்டில் பிரதிநிதியாகக் கலந்து கொள்ளல்.

1937 : 1938 : லக்னோவில் நடந்த ஆசியக் கல்வி மாநாட்டுக்குத் தலைமை வகித்தல்.

1938 : பிரிட்டிஷ் அறிஞர் சங்கத்தில், 'கௌதம புத்தர்' பற்றிச் சொற்பொழிவு.

சங்கத்தின் உறுப்பினராகத் தேர்வு செய்யப்படுதல்.

1939 : 1948 : காசி இந்துப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர்.

1948 : பல்கலைக்கழகக் கல்விக் கமிஷன் தலைவர்.

1950 : இந்தியாவின் ரஷ்யத் தூதர்.

1952 : யுனெஸ்கோ தலைவர்.

1953 : 1956 இருமுறை அமெரிக்கா சென்றார்.

1952 1962 : மே, 11 இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர்.

1962 மே, 12: 1966 இந்தியக் குடியரசுத் தலைவர்.

1975 : ஏப்.16 டாக்டர் இராதாகிருஷ்ணன் அமரரானார்.

## திரைப்படத்துறையின் பிரதிநிதிகளுடன் ஆலோசனை

தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள், திரைப்படத்துறையின் பல்வேறு துறை பிரதிநிதிகளுடன் திரைப்படத்துறையின் பிரச்சினைகள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட திரைப்படத்துறையினர் கடந்த ஆண்டில் குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட சிறந்த 9 திரைப்படங்களுக்கு ரூ.10 இலட்சம் மானியத் தொகை வழங்கப்பட்டது. இத்தொகையை அதிகரித்தும், கூடுதல் எண்ணிக்கையிலான படங்களுக்கு மானியத் தொகை வழங்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர். மேலும், சிறந்த படங்களுக்கான விருதுகள் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தனர்.

இக்கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்று, குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட சிறந்த படங்களுக்கு இந்த ஆண்டில் மானியத் தொகை மொத்தமாக ரூ.60 இலட்சம் வழங்கப்படும் என அறிவித்தார்.

இந்தப் படங்கள் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும். சிறந்த திரைப்படம், சிறந்த திரைப்பட இயக்குநர், சிறந்த திரைப்பட நடிகர், சிறந்த திரைப்பட நடிகையர், சிறந்த திரைப்படத் தொழில்நுட்ப வினைஞர்கள், சிறந்த கலைத்துறை வித்தகர்கள் அனைவருக்கும் தமிழக அரசு விருதுகள் வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படும் என்றும் தெரிவித்தார்.

"நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்"

# அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கம்

## திண்டுக்கல் - அண்ணா மாவட்டம்

தலைவர்
ஆர். கந்தசாமி
ஸ்ரீ கார்த்திகேயன் ரைஸ் மில்
நந்தவனம் ரோடு, திண்டுக்கல்.
போன்: 3193

*With Best Compliments From*

# NAGALAKSHMI FLOUR MILLS LIMITED, DINDIGUL

*Manufacturers and Suppliers of: 'Special' Quality Wheat Products under their famous 'AMMAN' Brand*

**Registered Office:**
*Mill & Sales Department*
*No.1, Trichy Road,*
*Dindigul 624 009.*
*PHONE:4571, 4572*
*TELEX: 440 217 NFM IN*

**Principal Office:**
*377, Suryanarayana Street,*
*Madras 600 081.*

*PHONE: 555586, 556765*
*TELEX: 41 6179 NFM IN*

*GRAM: FLOURMILL*

# மத்திய அரசு

# மாதந்தோறும் ஒரு இலட்சம் டன் அரிசி ஒதுக்கீடு செய்ய வேண்டும்!

"பட்ஜெட் தாக்கல் செய்யப் பட்ட உடனேயே பொது வினி யோகத் திட்ட ஆலோசனைக் கவுன் சில் கூட்டத்தைக் கூட்டி இருப்பது சமுதாயத்தில் உள்ள ஏழை எளிய மக்களின் நலனுக்காகப் பொது விநியோகத் திட்டத்தைப் பயன் படுத்த வேண்டும் என்ற பிரதமரின் ஆர்வத்தைப் பிரதிபலிக்கிறது.

இன்று விவாதிக்கப்படும் பொருள்கள் என்ற குறிப்பில் பொது விநியோகத் திட்டத்தைச் சீரமைத்து வலுவூட்டுவது என்பது முன்னுரிமை அளிக்கப்பட்டு இருப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன்.

**நியாய விலைக் கடைகள்**

தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப் படும் பொது விநியோக முறை குறித்துக் கோடிட்டுக் காட்ட விரும்பு கிறேன்.

மாநிலத்தில் உள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் குடும்ப அட்டைகள் வழங்குதல் மூலம் பொது விநி யோகத் திட்டம் அமல்படுத்தப்படு கிறது. தமிழ்நாட்டில் இப்போது 125 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த அட்டை களுக்கு 22 ஆயிரம் நியாய விலைக் கடைகள் மூலமாக அத்தியாவசியப் பண்டங்கள் விநியோகிக்கப்படு கின்றன.

**புரட்சித் தலைவர் எடுத்த முடிவு**

ஒவ்வொரு வருவாய்க் கிராமத் திலும் குறைந்தது ஒரு நியாய விலைக் கடை இருக்க வேண்டும் என்ற கொள்கை முடிவை 1978-ஆம் ஆண்டே, எங்கள் தலைவர், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். எடுத்து இருந்தார். அதன்படி எல்லா வருவாய்க் கிராமங்களிலும் நியாய விலைக் கடைகளைத் தொடங்கி-விட்டோம். இப்போது தமிழ்நாட்டில் 16 ஆயிரத்து 843 கிராம நியாய விலைக் கடைகளும், 5 ஆயிரத்து 125 நகர்ப்புற நியாய விலைக் கடைகளும் இருக்கின்றன. இந்த 21 ஆயிரத்து 907 கடைகளில் 1,061 கடைகள்தான் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்படுகின்றன. மீதம் உள்ள 20 ஆயிரத்து 907 கடைகள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடத்தப் படுகின்றன.



**— டெல்லியில், மாண்புமிகு பிரதமர் அவர்கள் கூட்டிய பொது விநியோக முறையின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட மாண்புமிகு புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களின் உரை (23.8.1991).....**

**பகுதி நேர நியாய விலைக் கடைகள்**

ஒவ்வொரு வருவாய்க் கிராமத் திலும் நியாய விலைக் கடைகளைத் திறந்தது தவிர, சில இடங்களில் வருவாய்க் கிராமங்களின் பகுதி யாகச் சில குடியிருப்புகளில் உள்ள மக்கள் வெகு தூரம் சென்று பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப் படும் பொருட்களைப் பெற வேண்டி யது இருக்கிறது. இத்தகைய இடங் களில் கடைகள் நடத்த வாடகை இல்லாமல் கட்டடம் தர வேண்டும் என்ற நிபந்தனையோடு பகுதி நேர நியாய விலைக் கடைகள் தொடங்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இம் முறைகளில் தமிழ்நாடு முழுவதும் சில்லறைக் கடைகள் திறக்கப் பட்டுள்ளன.

**நடமாடும் நியாய விலைக் கடைகள்**

வால்பாறை மலை, கல்வராயன் மலை, ஜவ்வாது மலை, கொடைக் கானல் மலை, சிறுமலை போன்ற மலைப்பகுதிகளில் உள்ள சில தனியான பகுதிகளில் மத்திய அரசின் உதவியோடு நடமாடும் நியாய விலைக் கடைகள் செயல் படுகின்றன.

மத்திய அரசு ஒதுக்கீடு செய்யும் அரிசி, கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய் ஆகியவற்றைப் பெறுவதற்காக மொத்த ஏஜெண்ட் ஆக, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் செயல்படுகிறது. இந்தப் பொருட்கள் இந்தக் கழகத்திற்குச் சொந்தமான கிடங்குகளில் சேமித்து வைக்கப்பட்டு நியாய விலைக் கடைகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. ஒவ்வொரு தாலுக்கா தலைநகரத்திலும் இத்தகைய கிடங்கு இருக்கிறது. நியாய விலைக் கடைகளை நடத்தும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான கூட்டுறவு மொத்தக் கடைகள் இந்தப் பொருட்களைப் பெற்றுக் கொள்கின்றன.

மத்திய அரசு அறிவுறுத்தியபடி 2 ஆயிரம் பேருக்கு ஒரு நியாய விலைக் கடை என்று இல்லாமல், 2,500 பேருக்கு ஒரு நியாய விலைக் கடை என்ற அடிப்படையில் தமிழ்நாட்டில் 5 கோடியே 56 இலட்சம் மக்களுக்கு, 22 ஆயிரம் கடைகள் இருந்தாலும் இது போதுமானதாகக் கருதப்படுகிறது.

எங்கள் அனுபவத்தில் இருந்து பொருளாதார ரீதியாக இலாபகரமானதாகவும், பயனுள்ளவாறும் இருக்க ஒரு நியாய விலைக் கடைக்கு 800 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும்.

இதைக் கருத்தில் கொண்டு, நகர்ப்புறங்களில் ஒவ்வொரு கடையிலும் 800 அட்டைகள் இருக்குமாறு கடைகளைச் சீரமைக்க மாநில அரசு திட்டமிட்டுள்ளது. முதல் கட்டமாக 1,200 அட்டைகளுக்கு மேல் உள்ள கடைகளைச் சீரமைத்துக் கொண்டிருக்கிறோம்.

இது எந்த அளவில் இருந்தாலும் சரி; ஒவ்வொரு வருவாய்க் கிராமத்துக்கும் ஒரு கடை இருக்க வேண்டும் என்பது எங்கள் அரசின் கொள்கையாக இருப்பதால், 500 அட்டைகளுக்கும் குறைவாக இருக்கும் எண்ணிக்கையில் 10 ஆயிரம் கடைகள் இருக்கின்றன. இந்தக் கடைகள் ஒவ்வொன்றும் 2 ஆயிரம் பேர்கள் கொண்ட மக்கள் தொகையின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. இந்தக் கடைகளில் இலாபம் இல்லாததால், இந்தக் கடைகளை நடத்தக் கூட்டுறவு அமைப்புகளுக்கு மாநில அரசு உதவித் தொகை வழங்குகிறது.

**பொது விநியோகத் திட்டத்தின் மூலம் 'பாமாயில்' விநியோகிக்க மத்திய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகள் பற்றி நான் அறியாமல் இல்லை. ஆனால் அந்தக் கட்டுப்பாடுகளுக்கு இடையிலும் பண வீக்கத்தைக் குறைக்கும் வகையிலும் - சாதாரண மக்களுக்கு உதவும் வகையிலும் ஓரளவுக்காவது கூடுதல் சமையல் எண்ணெய் வழங்க நாம் முயற்சிக்க வேண்டும்.**

மிக அதிக அளவில் மக்களின் தேவைகளை இக் கடைகள் பூர்த்தி செய்வதால், அத்தியாவசியப் பண்டங்களை வீடு வீடாகக் கொண்டு போய்க் கொடுக்கும் முறை தேவை இல்லை என்று கருதுகிறோம். இத்தகைய முறையை அறிமுகப் படுத்துவதால் ஏராளமான சங்கடங்கள் ஏற்படக்கூடும். பொது விநியோக முறை மூலமாகக் கூடுதலாக அத்தியாவசியப் பண்டங்கள் விற்பதை வரவேற்கும்போது, ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பொது விநியோக முறையின் கீழ், எந்த விஷயமானாலும் அது உரிமையாகவே கருதப்படும். எனவே, நாம் எல்லாக் குடும்ப அட்டைகளுக்கும் பொருட்களை வழங்க வேண்டும்.

இந்தச் சூழ்நிலையில் எல்லோருக்கும் தேவையான அளவு அந்தக் குறிப்பிட்ட பொருளை 'இருப்பு' வைத்துக் கொள்ள வேண்டும். சில பொருட்களை ஒரு பகுதியில் உள்ளவர்களுக்கு மட்டும் கொடுத்துவிட்டு மற்றவர்களுக்கு மறுக்க முடியாது. மற்றொரு வழியாக இந்தப் பொருட்களை உரிமை என்ற அடிப்படையில் இல்லாமல், கிடைப்பதை, அடிப்படையாக வைத்து நுகர்வோர் கூட்டுறவுக் கடைகள் போன்ற மற்ற அமைப்புகள் மூலமாகக் கிடைக்கச் செய்யலாம். தமிழ்நாட்டில் இந்த முறைதான் செயல்படுத்தப்படுகிறது.

**குறைந்த விலையில் பருப்பு வகைகள்**

இத்தகைய முறைகள் மூலம் இந்தக் கடைகளில் பருப்பு வகைகளை வெளி மார்க்கெட்டைவிடக் குறைந்த விலையில் கிடைக்கச் செய்ய முடியும்.

மத்திய அரசு பொது விநியோக முறையின்கீழ் விநியோகிக்கத் திட்டமிட்டுள்ள பொருட்களைக் கொள்முதல் செய்து மத்திய அமைப்புகள் அல்லது தேசிய அளவிலான முதன்மை அமைப்புகள் மூலம் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**பாமாயில்**

இந்த மாநாட்டில் விவாதிக்க, குறிக்கப்பட்ட பொருட்கள் தவிர வேறு சில பொதுவான பிரச்சினைகளைக் குறிப்பிட விரும்புகிறேன். முதலாவதாகக் கடந்த வாரம் ஐதராபாத்தில் நடந்த உணவு அமைச்சர்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை வற்புறுத்த விரும்புகிறேன்.

குறிப்பாக, பொது விநியோகத் திட்டத்தின் மூலம் 'பாமாயில்' சப்ளை செய்ய மத்திய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகள் பற்றி நான் அறியாமல் இல்லை. ஆனால் அந்தக் கட்டுப்பாடுகளுக்கிடையிலும் பண வீக்கத்தைக் குறைக்கும் வகையிலும் - சாதாரண மக்களுக்கு உதவும் வகையிலும் - ஓரளவுக்காவது கூடுதல் சமையல் எண்ணெய் வழங்க நாம் முயற்சிக்க வேண்டும்.

**ஒரு இலட்சம் டன் அரிசி**

மத்தியத் தொகுப்பில் இருந்து தமிழ்நாட்டுக்கு ஒரு இலட்சம் டன் அரிசி ஒதுக்கீடு வேண்டும் என்று ஏற்கெனவே நான் கேட்டிருந்தேன். ஆனால், இப்போதுள்ள ஒதுக்கீடான

75 ஆயிரம் டன் அரிசிக்கு மேல் ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர் மாதங்களுக்கு மேலும் 6 ஆயிரம் டன் அரிசி வழங்க மத்திய அரசு சம்மதித்துள்ளது. ஆண்டு முழுவதும் மாதந்தோறும் ஒரு இலட்சம் டன் அரிசி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று மறுபடியும் நான் மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

**புழுங்கல் அரிசி**

ஒவ்வொரு ஆண்டும் 8 இலட்சத்தில் இருந்து 9 இலட்சம் டன் அரிசியைத் தமிழ்நாடு கொள்முதல் செய்து வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள பெரும்பான்மையான மக்கள் புழுங்கல் அரிசியையே வாங்குவதால் தமிழ் நாட்டுக்குக் கூடுதலாக வழங்கும் அரிசியைப் புழுங்கல் அரிசியாகவே வழங்க வேண்டும். சமீபத்தில் நடந்த தென் மாநில உணவு அமைச்சர்கள் மாநாட்டில் தீர்மானித்தபடி, ஆந்திராவில் இருந்து புழுங்கல் அரிசியை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**சர்க்கரை**

இதற்கு முன்பு நான் கேட்டுக் கொண்டதைப் போல, இப்போது வழங்கப்படுவது போல 1986-ஆம் ஆண்டு மக்கள் தொகையை அடிப்படையாக வைத்து இல்லாமல் - சமீபத்திய மக்கள் தொகையை அடிப்படையாக வைத்து மாநிலத்துக்குச் சர்க்கரை ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும் என்று இந்தக் கூட்டத்தில் வற்புறுத்த விரும்புகிறேன்.

**ஒத்துழைப்பு**

பொது விநியோகத் திட்ட ஆலோசனைக் கவுன்சில் கூட்டத்தைக் கூட்டியதற்காக நான் பிரதமருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்தியாவசியப் பண்டங்களின் விலையைக் குறைப்பதற்கும், பொது விநியோகத் திட்டத்தைச் சீரமைத்து, வலுவூட்டுவதற்கும் மத்திய அரசு எடுக்கும் எல்லா நடவடிக்கைகளுக்கும் தமிழக அரசு முழு ஒத்துழைப்பையும் நல்கும் என்று நான் உறுதி அளிக்க விரும்புகிறேன்.

மேற்கண்டவாறு மாண்புமிகு புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

---

—நுகர்வோர் பாதுகாப்பு:

## தமிழகமெங்கும் தணிக்கை

**மா**ண்புமிகு புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணைக்கிணங்க கடந்த ஜூலை மாதத்தில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அலுவலர்கள் தமிழகமெங்கும் திடீர் தணிக்கைகள் மேற்கொண்டனர்.

இத் திடீர் சோதனையில் ரூ.9,94,738/- மதிப்புள்ள 166 கடத்தல் தொடர்பான முறைகேடுகளும் ரூ.3,51,548/- மதிப்புள்ள 309 கள்ளச்சந்தை முறைகேடுகளும், ரூ.4,41,350/- மதிப்புள்ள 55 பதுக்கல் தொடர்பான முறைகேடுகளும் கண்டுபிடிக்கப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சென்னை நகரில் மட்டும் 141 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு ரூ.1,85,184/- மதிப்புள்ள பல்வேறு அத்தியாவசியப் பண்டங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. ரூ.24,185/- மதிப்புள்ள பல்வேறு அத்தியாவசியப் பண்டங்கள் பறிமுதல் செய்யப்பட்டு அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பல்வேறு மாவட்டங்களில் நடந்த சோதனைகளில் 11 லாரிகள், 1 டிராக்டர், 2 வண்டிகள், 1 மினிலாரி, 1 வேன், 20 சைக்கிள்கள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

திருச்சி மாவட்டத்தில் 5,614 போலி குடும்ப அட்டைகளும் சென்னை நகரில் 5,872 போலி குடும்ப அட்டைகளும் உட்பட மாநிலம் முழுவதும் 44,308 போலி குடும்ப அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டு நீக்கப்பட்டுள்ளன. சென்னை நகரில் 3 மண்ணெண்ணெய்க் கைவண்டி உரிமம் மற்றும் ஒரு சில்லறைப் பதிவுச் சான்றிதழ் நீக்கப்பட்டு மண்ணெண்ணெய் வழங்கல் நிறுத்தப்பட்டுள்ளது. 17 மண்ணெண்ணெய்க் கைவண்டி வணிகர்களுக்குத் தண்ட இழப்புக் கட்டணம் விதிக்கப்பட்டுள்ளது.

---



## இந்த ஆண்டு திரு.வி.க. விருது: இராஜம் கிருஷ்ணன் பெறுகிறார்!

ஆண்டுதோறும் வழங்கப்படும் திரு.வி.க. விருது 1991-ஆம் ஆண்டிற்கெனப் புகழ்பெற்ற நாவலாசிரியை திருமதி இராஜம் கிருஷ்ணன் அவர்களுக்கு வழங்கப்படும் என மாண்புமிகு புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்.

திருமதி இராஜம் கிருஷ்ணன் அவர்கள் தமிழகத்தின் புகழ்வாய்ந்த நாவலாசிரியை; 45 நாவல்களையும் நூற்றுக்கணக்கான சிறு கதைகளையும் பல குறு நாவல்களையும் எழுதியவர். சாகித்ய அகாதமி விருதினையும் பல்வேறு மாநில விருதுகளையும் பெற்றவர் திருமதி இராஜம் கிருஷ்ணன். திரு.வி.க. விருது உருவாக்கப்பட்ட 12 ஆண்டுகளில் பெண்மணி என்ற நிலையில், எவருக்கும் இவ்விருது இதுவரை வழங்கப்படவில்லை. நாடறிந்த நாவலாசிரியையாகத் திகழும் திருமதி இராஜம் கிருஷ்ணன் அவர்களுக்குப் 'பெண்ணின் பெருமை' எழுதிய தமிழ்த் தென்றல் திரு.வி.க. பெயரில் அமைந்த விருது வழங்கப்படுவது பெருமைக்கு மேலும் பெருமை சேர்க்கிறது.

சென்னைக் கடற்கரை முதல் லஸ் வரை

# துரித ரயில் போக்குவரத்து

சென்னை நகரில் நாளுக்கு நாள் பெருகிவரும் மக்கட் தொகையின் காரணமாக நகரப் பேருந்துகளிலும், புறநகர் மின்சார இரயில் வண்டிகளிலும் எப்போழுதும் கூட்டம் நிரம்பிய வண்ணமே காட்சியளிக்கிறது.

நகரின் சாலைகளில் ஏற்கெனவே பல இலட்சக்கணக்கான-மோட்டார் வாகனங்கள் சென்று கொண்டிருப்பதால், மீண்டும் கூடுதலாகப் பேருந்துகளை இயக்க முடியாத நிலை பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு. இந்நிலையில் சென்னை நகரில் பெருகிவரும் மக்கள் தொகை மற்றும் போக்குவரத்துத் தேவைகளைக் கருத்திற் கொண்டு, சென்னைக் கடற்கரை முதல் மயிலாப்பூர் - லஸ் வரை பெருநகர் துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் என்ற புதிய திட்டம் மத்திய திட்டக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு, இரயில்வே குழுவால் (Railway Board) 1983-ஆம் ஆண்டு அனுமதி வழங்கப்பட்டது.

இந்தத் திட்டத்தில் மொத்த மதிப்பீடு ரூ.108.21 கோடி. இந்தத் தொகை 1987-ஆம் ஆண்டு இரயில்வே குழுவால் அனுமதிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் முக்கியத்துவம் குறித்து இதன் தலைமைத் திட்ட மேலாளர் திரு. ரா.நரசிம்மன் அவர்களை நேரில் சந்தித்தபோது அவர் இந்தத் திட்டம் குறித்து கீழ்க் கண்டவாறு விளக்கினார்:



**திட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

சென்னைக் கடற்கரை முதல் லஸ் வரையிலான இந்த துரிதப் போக்குவரத்துத் திட்டத்தின் மொத்த நீளம் 8.55 கி.மீ. இதில் சென்னைக் கடற்கரை முதல் பார்க்டவுன் வரையிலான சுமார் 2.75 கி.மீட்டர் தூரம் தரை வழியிலும், அதன்பின் பார்க்டவுன் முதல் லஸ் வரையிலான மீதி 5.80 கி.மீ. தூரம் உயரத்திலேயும் இரயில் செல்லும். இதனாலேயே இந்த வழித்தடத்தில்



செல்லும் இரயில் 'பறக்கும் இரயில்' எனவும் அழைக்கப்படுகிறது.

இது இரட்டை வழித்தடங்களைக் கொண்ட அகல இரயில் பாதைத் திட்டமாகும். இந்தத் திட்டம் நிறை வடையும்போது சுமார் 6 இலட்சம் பயணிகள் தினந்தோறும் இதில் பயணம் செய்யலாமெனக் கணக் கிடப்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு 5 நிமிட இடைவெளியில் இருவழிப் பாதைகளிலும் மொத்தம் 310 இரயில் வண்டிகள் செல்லும். சென்னைக் கடற்கரையிலிருந்து லஸ் வரையிலான தூரத்தை இந்த இரயில் சுமார் 17 நிமிடங்களில் கடக்கும். ஆனால், பேருந்திலோ இந்தத் தூரத் தைக் கடக்க சுமார் 40 முதல் 45 நிமிடங்கள் ஆகும். இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேறி, இரயில் ஓடத் தொடங்கியதும், அரக்கோணம் மற்றும் கும்மிடிப்பூண்டி மார்க் கங்களிலிருந்து வரும் மின்சார இரயில்களை இந்தப் புதிய வழித் தடத்திலும் நீட்டிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. இந்தப் புதிய பாதை யில் விடப்படும் இரயில் 3 எஞ்ஜின் களுடன் கூடிய 9 இரயில் பெட்டி களைக் கொண்டதாக இருக்கும்.

இந்த இரயிலில் ஒரே சமயத்தில் சுமார் 2,844 பயணிகள் பயணம் செய்யலாம். அதாவது, கிட்டத்தட்ட 28 பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகள் ஒரே நேரத்தில் இந்த இரயிலில் பயணம் செய்யலாம்.



### இரயில் நிலையங்கள்

இந்தத் துரித இரயில் போக்கு வரத்துத் திட்டத்தின்படி, சென்னைக் கடற்கரை முதல் லஸ் வரையிலான 8.55 கி.மீ. தூரத்தில் மொத்தம் 8 இரயில் நிலையங்கள் உள்ளன. இவற்றில் கடற்கரை, கோட்டை, பார்க்டவுன் ஆகிய 3 இரயில் நிலையங்கள் தரையிலும், சிந்தாதிரிப் பேட்டை, சேப்பாக்கம், திருவல்லிக் கேணி, லாயிட்ஸ் சாலை, லஸ் ஆகிய 5 இரயில் நிலையங்கள் தரையிலிருந்து உயரத்திலேயும் அமைக்கப்படும்.

கடற்கரையிலிருந்து சிந்தாதிரிப் பேட்டை வரும்போது இந்த இரயில் தரை மட்டத்திலிருந்து சுமார் ஐந்தரை மீட்டர் உயரத்தில் செல்லும். எனவே தான் சிந்தாதிரிப்பேட்டை இரயில் நிலையம் மிக உயரமாக இரண்டு அடுக்கு மாடியுடன் கட்டப்படுகிறது.

### துரிதப் பணிகள்

இந்தத் திட்டத்திற்குத் தேவைப் படும் நிலத்தின் மொத்தப் பரப்பு 22.91 எக்டேர். இதில் 19.09 எக்டேர் நிலம் மாநில அரசுக்குச் சொந்தமானது. மீதமுள்ள நிலத்தில் 2.72 எக்டேர் தனியாருக்கும், 1.10 எக்டேர் மத்திய அரசுக்கும் சொந்த மானது. தனியார் நிலத்தை மாநில அரசு கையகம் செய்து, இந்தத் திட்டத்திற்குத் தேவையான அனைத்து நிலங்களையும் இரயில்வே துறைக்கு இலவசமாக வழங்கும்.

கடற்கரையிலிருந்து டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை வரை யிலான 7.13 கி.மீ. தூரத்திற்கான நிலமும், டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலையிலிருந்து ½ கி.மீ. தூரத்திற் கான நிலமும் இதுவரை இரயில்வே நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, தற்சமயம் இங்குத் துரிதமாகப் பணிகள் நடைபெற்றுக் கொண்டி ருக்கின்றன.

### முடியுந்தறுவாயில்...

சென்னைக் கடற்கரை - லஸ் துரித இரயில் போக்குவரத்துத் திட்டப் பணிகள் 1983-இல் தொடங் கப்பட்டு, கடற்கரையிலிருந்து பார்க் டவுன் வரையிலான தரைமட்டப் பணிகள் அனைத்தும் தற்சமயம் முடியும் தறுவாயில் உள்ளன. பார்க் டவுன் முதல் சேப்பாக்கம் வரை

**சென்னை-சிந்தாதிரிப்பேட்டையில் அமையவிருக்கும் புதிய இரயில் நிலையத்தின் மாதிரிப்படம்.**



ராட்சதத் தூண்கள் அமைக்கும் பணி முடிவடைந்து விட்டது. சேப் பாக்கம் முதல் இராதாகிருஷ்ணன் சாலை வரை ராட்சதத் தூண்கள் அமைக்கும் பணி தற்சமயம் மும்முர மாக நடைபெற்று வருகிறது.

சென்னைக் கடற்கரை, கோட்டை இரயில் நிலையங்கள் அமைக்கும் பணிகள் முடிவடைந்து விட்டன. பார்க்டவுன் மற்றும் சிந்தாதிரிப் பேட்டை இரயில் நிலையங்கள் அமைக்கும்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வாண்டு இறுதிக்குள் இவை கட்டி முடிக்கப் பட்டு விடுமென எதிர்பாக்கப் படுகிறது.

சேப்பாக்கம் இரயில்வே நிலையத் திற்கான அடிக்கல் போடப்பட்டு இரயில் நிலையம் கட்டும் பணி விரைவில் துவங்கும். 1992-ஆம் ஆண்டு இறுதி வாக்கில் சென்னைக் கடற்கரையிலிருந்து சேப்பாக்கம் வரை முதல் கட்டமாக இரயில் விடப்படும் என்று இந்தத் திட்டத் தின் தலைமைத் திட்ட மேலாளர் அவர்கள் தெரிவிக்கிறார்.

சென்னைக் கடற்கரை - லஸ் வரையிலான இரயில் போக்கு வரத்து 1994-95-ஆம் ஆண்டில் நடைபெறுமென எதிர்பார்க்கப் படுகிறது.

**இந்தியாவிலேயே...**

சென்னைக் கடற்கரை - லஸ் துரித இரயில் போக்குவரத்துத் திட் டத்தின் முதல் மதிப்பீடு ரூ.53 கோடியாக இருந்தது. தற்போது இதன் மதிப்பீடு ரூ. 108.21 கோடி யாக உயர்ந்துள்ளது. இதுவரை இந்தத் திட்டத்திற்கு 53.56 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 50 சதவிகிதப் பணிகள் முடிவடைந்து விட்டன. இவ்வாண்டு இத்திட்டத்திற்கு ரூ.13 கோடி ஒதுக் கப்பட்டுள்ளது.

இந்தத் துரித இரயில் போக்கு வரத்துத் திட்டம் முழுமையாக முடிந்து இரயில் ஓடத் தொடங்கும் போது, சென்னை நகர மக்களுக்கு இது பெரிதும் பயனுள்ளதாக இருக் கும் என்பதில் ஐயமில்லை. சாலைப் போக்குவரத்து நெரிசலும் வெகு வாகக் குறையும். இந்தத் திட்டத்தின் ஒரு சிறப்பு அம்சம் என்னவென் றால், இரயில் பாதை பெரும்பாலும் பக்கிங்காம் கால்வாய் வழியாகச் செல்லும். அதுவும் சாலைப் போக்கு வரத்துக்கு எந்த விதப் பாதிப்பும் ஏற்படாதவாறு இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் இன்னொரு சிறப்பம்சம் என்னவென்றால், சுமார் 5.80 கி.மீ. தூரத்திற்குத் தரையிலிருந்து உயரே இரயில் பறப்பதாகும். இத்தகைய திட்டம் இந்தியாவிலேயே முதன்முதலாகத் தமிழ்நாட்டில்தான் செயல்படுத்தப் படுகிறது என்பதை நாம் பெருமை யோடு குறிப்பிட வேண்டும்!

- ஜே. சந்திரன்.

## குடிநீர்த் தட்டுப்பாடு நீங்க ரூ.2.5 கோடி: மாண்புமிகு முதல்வர் ஆணை

**தமிழ்நாட்டில், சில மாவட்டங் களில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற் பட்டுள்ளதைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்கள் குடிநீர்த் திட்டங்களுக்காக இடர்ப்பாடு நிவா ரண நிதியிலிருந்து** (CALAMITY RELIEF FUND) ரூ.2.5 கோடி வழங்கிட ஆணையிட்டுள்ளார்.

இந்த நிதியுதவியின் மூலம் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் மூலமாக, 400 ஆழ் குழாய்க் கிணறுகள் ரூ.1.4 கோடி செலவில் அமைக்கப்படும். அதே போல சேலம், புதுக்கோட்டை, வடஆர்க்காடு அம்பேத்கார், பெரியார் ஆகிய மாவட்டங்களில் லாரிகள் மூலம் குடிநீர் வழங்க ரூ.80 இலட்சம் செலவிடப்படும். மேலும் கிணறு களை ஆழப்படுத்த சேலம் மாவட் டத்தில் ரூ.20 இலட்சமும், இராம நாதபுரம் மாவட்டத்தில் குழாய்கள் அமைப்பை விரிவாக்கம் செய்ய ரூ.10 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள் ளது. இந்தத் தொகை மூலம் சில மாவட்டங்களில் ஏற்பட்டிருக்கிற குடிநீர்ப் பிரச்சினையை முழுமை யாகத் தீர்க்க உடனடியாக உதவுகிற வகையில் ரூ.2.5 கோடியைச் செல விட மாண்புமிகு புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்திர விட்டுள்ளார்.

## பஸ் ஊழியர் இறந்தால், குடும்பத்துக்கு ரூ.60 ஆயிரம் உதவி

**போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் போது மரணம் அடையும் தொழிலாளர்கள் குடும்பத்துக்கு எந்தவிதப் பிடித்தமும் இல்லாமல் 20 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும் என்று மறைந்த முதல் அமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் உத்தரவிட்டு இருந்தார்.**

**தி.மு.க. அரசில் 1.9.1989 அன்று இந்தத் தொகை 40 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் என்று அறிவித்தனர். ஆனால், இதுவரையில் கொடுக்கவில்லை.**

**மாண்புமிகு புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் 1.9.1989 முதல், இறந்த தொழிலாளர் களுக்குப் பிடித்தமே இல்லாமல் 40 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டு உள்ளார். தி.மு.க. அரசு அறிவித்து, 40 ஆயிரம் ரூபாய் வழங்கப்படாத அந்தக் காலகட்டத்தில் மரணம் அடைந்த தொழிலாளிகள் குடும்பத்துக்கு இந்தத் தொகையை வழங்க உத்தரவிட்டுள்ளார். 1990-91-ஆம் ஆண்டில் மட்டும் 457 பேர் மரணம் அடைந்துள்ளனர்.**

**1.8.1991 முதல் ஒவ்வொரு தொழிலாளி யிடமும் மாதம் 5 ரூபாய் பிடித்தம் செய்யவும், பணியில் இருக்கும்போது மரணம் அடையும் தொழிலாளர்கள் குடும்பத்துக்கு ரூ.60 ஆயிரம் வழங்கவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.**

**இத் தகவலை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. செங்கோட்டையன் அவர்கள் சென்னையில் நிருபர்களிடம் தெரி வித்தார்.**

# இடைத்தேர்தல் (24-8-1991) முடிவுகள்

## பெரியார் மாவட்டம்

### 117. காங்கேயம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | ... | 1,60,773 |
| பதிவான வாக்குகள் | ... | 1,03,519 |
| செல்லாதவை | ... | 1,223 |

**இராம. வீரப்பன் (அஇஅதிமுக) வெற்றி**

| | | |
|---|---|---|
| இராம. வீரப்பன் | அஇஅதிமுக ... | 98,783 |
| சி.எஸ். அருணாசலம் | சுயே ... | 1,072 |
| பொன். ரத்தினசாமி | சுயே ... | 800 |
| ஆ. கணேசமூர்த்தி | சுயே ... | 420 |
| பி.எம். பழனிசாமி | சுயே ... | 136 |
| வி.டி.ஆர். வீரப்பன் | சுயே ... | 131 |
| ஆர். குருசாமி | சுயே ... | 129 |
| எம்.எல்.ஜி.கே. ராஜேந்திரன் | சுயே ... | 108 |
| டி.கே. கருத்தப்பாண்டியன் | சுயே ... | 90 |
| ஜே. குமாரி | சுயே ... | 85 |
| வி.எம். சின்னப்பொண்ணு வாத்தியார் | சுயே ... | 78 |
| எஸ். முனுசாமி | சுயே ... | 67 |
| எஸ். பழனிசாமி | சுயே ... | 58 |
| கே. ரங்கசாமி | சுயே ... | 57 |
| பி. ஆறுமுகம் | சுயே ... | 54 |
| யு. நாகூர் மீரான் பீர்முகமது | சுயே ... | 51 |
| ஏ.பி. சின்னசாமி | சுயே ... | 40 |
| எஸ். சதாசிவம் | சுயே ... | 39 |
| கே.சி. ரங்கசாமி | சுயே ... | 37 |
| டாக்டர். கே. பத்மராஜன் | சுயே ... | 33 |
| பி. ராமநாதன் | சுயே ... | 28 |

## சென்னை மாவட்டம்

### 2. துறைமுகம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | ... | 1,21,040 |
| பதிவான வாக்குகள் | ... | 36,721 |
| செல்லாதவை | ... | 254 |

**அ. செல்வராசன் (திமுக) வெற்றி**

| | | |
|---|---|---|
| அ. செல்வராசன் | திமுக ... | 19,347 |
| க. சுப்பு | காங்கிரஸ் ... | 16,111 |
| எ.கே. தாஜுதீன் | சுயே ... | 606 |
| ஒய். ஜலீல் | சுயே ... | 67 |
| டி.எச்.எம். நூருல் அமீன் | சுயே ... | 63 |
| டி.கே. தேவன் | சுயே ... | 52 |
| சர்மா நகர் எம். ஜலாலுதீன் | சுயே ... | 32 |
| கே. சீனி முகமது | சுயே ... | 24 |
| இ.எம். ஆறுமுகம் | (லோக்தள்) ... | 22 |
| எஸ். அன்பழகன் | சுயே ... | 16 |
| சி. அமீனா | சுயே ... | 16 |
| ஒ.அ. வரத தேசிகன் | சுயே ... | 16 |
| எ.கே. ஐநஸ் | சுயே ... | 15 |
| எம். மோகன் | சுயே ... | 13 |
| கடல் தன்சேகரன் | சுயே ... | 11 |
| ஜே. அந்தோணி | சுயே ... | 10 |
| எல். அரசு | சுயே ... | 10 |
| சி.வி. நாராயணன் | சுயே ... | 9 |
| யு. அயூப் | சுயே ... | 8 |
| ஜி. மதியழகன் | சுயே ... | 7 |
| மனக் சந்த் நகர் | சுயே ... | 7 |
| எம்.சி. விஜயகுமார் | சுயே ... | 5 |

### 7. எழும்பூர் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | ... | 1,28,272 |
| பதிவான வாக்குகள் | ... | 46,109 |
| செல்லாதவை | ... | 260 |

**இளம்வழுதி (தி.மு.க.) வெற்றி**

| | | |
|---|---|---|
| இளம்வழுதி | தி.மு.க. ... | 23,139 |
| டி. யசோதா | காங்கிரஸ் ... | 21,936 |
| வி. சிவகுமார் | சுயே ... | 276 |
| அரக்கோணம் மா.வரதராஜன் | ஜனதா ... | 221 |
| வெங்கடேசன்(எ) பி.அம்பெட் வெங்கடேஷ் | சுயே ... | 154 |
| இ. சாரதா | சுயே ... | 51 |
| எம். சுப்ரமணி | சுயே ... | 42 |
| ஆர். சாரங்கபாணி | சுயே ... | 30 |

## திருச்சி மாவட்டம்

### 158. முசிறி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | ... | 1,81,551 |
| பதிவான வாக்குகள் | ... | 1,13,722 |
| செல்லாதவை | ... | 1,016 |

**எம். தங்கவேல் (அஇஅதிமுக) வெற்றி**

| | | |
|---|---|---|
| எம். தங்கவேல் | அஇஅதிமுக ... | 70,812 |
| ஆர். நடராஜன் | திமுக ... | 39,568 |
| எம். சிவபெருமாள் | சுயே ... | 584 |
| சரோஜா வீரப்பன் | தமம ... | 374 |
| எம். ராஜேந்திரன் | சுயே ... | 284 |
| கே. சிங்காரம் | சுயே ... | 220 |
| டி.கே. கருத்தபாண்டியன் | சுயே ... | 184 |
| எ. அலமேலு | சுயே ... | 149 |
| டி. பாலகிருஷ்ணன் | பாமக ... | 134 |
| எம். ராஜேந்திரன் | சுயே ... | 130 |
| எஸ். பெருமாள் | சுயே ... | 84 |
| எஸ். ராஜேந்திரன் | சுயே ... | 77 |
| எம். செல்வராஜு | சுயே ... | 62 |
| வி. ரெங்கசாமி | சுயே ... | 44 |

**முதலாவது அட்டையில்...**

கோட்டைக் கொத்தளத்தில் ஆகஸ்ட் 15 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தேசியக் கொடி ஏற்றி வைத்தார்.

**இரண்டாவது அட்டையில்...**

ஆகஸ்ட் 15-ஆம் நாள், கோட்டைக் கொத்தளத்தின் முன்னால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இராணுவ அணிவகுப்பைப் பார்வையிட்டார்.

**கடைசிப் பக்க அட்டையில்...**

தருமபுரி மாவட்டம் பர்கூரில், 21.8.91-இல் நடைபெற்ற அரசு நலத்திட்ட விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாபெரும் மக்கட் கடலிடையே உரையாற்றினார்.

# மாவட்டச் செய்திகள்

## கோவை-பெரியார் மாவட்டங்களில்:

பரம்பிக்குளம் முக்கியக் கால்வாயின் இரண்டாம் மண்டல ஆயக்கட்டுப் பகுதிகளுக்குத் திருமூர்த்தி அணையிலிருந்து 1.8.1991 அன்று காலை முதல் பாசனத்திற்குக் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மு. கலைவாணன், இ.ஆ.ப., அவர்களால் தண்ணீர் திறந்துவிடப் பட்டது. இதனால் இந்த முக்கியக் கால்வாயிலிருந்து 48.60 கிலோ மீட்டர் வரையுள்ள வலதுபுற ஆயக் கட்டுப் பகுதிகளும், 109.60 கிலோ மீட்டர் முதல் 124 கிலோ மீட்டர் வரை இடதுபுறமுள்ள ஆயக்கட்டுகளும் 1991 டிசம்பர் மாதம் முதலிரண்டு வாரங்கள் நீர்ப்பாசன வசதி பெறும்.

இதனால், உடுமலை வட்டத்தில் சுமார் 42,029 ஏக்கரும் பொள்ளாச்சி வட்டத்தில் 4,860 ஏக்கரும், பல்லடம் வட்டத்தில் 15,344 ஏக்கரும் ஆக, கோவை மாவட்டத்தில் 62,233 ஏக்கர் நிலம் பயனடையும்.

இந்தத் திருமூர்த்தி மலைப் பகுதியில் அனைத்துத் தரப்பு மக்களும் மகிழ்ச்சியடையும் வகையில் சுற்றுலா மையம் அமைக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இங்கு படகுக் குழாம் விரைவில் அமைக்கப் படவுள்ளது. விவசாயிகளுக்கும் அனைத்து மக்களுக்கும் உதவுவதில் இந்த அரசு தொடர்ந்து நல்ல பணிகளை ஆற்ற முனைந்துள்ளதற்கு இது சீரிய உதாரணமாகும்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மைத் துறையின் சார்பாக விவசாயிகளுக்கு விதைகளையும், இடுபொருட்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் உடுமலை சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.பி. மணிவாசகம், மற்றும் வேளாண்மைப் பெருங்குடி மக்களும் கலந்து கொண்டார்கள்.



இந்த நீர் மூலம், பெரியார் மாவட்டத்தில் தாராபுரம் வட்டத்தில் 7,849 ஏக்கர் நிலமும் காங்கேயம் வட்டத்தில் 5,174 ஏக்கர் நிலமும் ஆக, கோவை மாவட்டத்தில் பயனடையும் 62,233 ஏக்கரையும் சேர்த்து, மொத்தம் 75,256 ஏக்கர் நிலம் பாசன வசதிபெறும். 1.8.1991 முதல் 13.12.1991 முடிய 135 நாட்களுக்கு முறை வைத்து அப்பகுதிகள் பாசன வசதி பெறும்.

கோவை மாவட்டத்தில் உடுமலை வட்டத்தில், ஜல்லிப்பட்டி, தளி, பெரிய வாளவாடி, சின்னவாளவாடி, முடக்குப்பட்டி, தென்போத்நாதன், தீபானப்பட்டி, சர்க்கார் புதூர், ஆர். வேலூர், போடிப்பட்டி ராகல்பாவி, வலசுப்பட்டி, பூலாங்கிணறு, கணபதிபாளையம், உடுமலைப்பேட்டை, அந்தியூர், கணக்கண்பாளையம் பூக்குளம், குரிஞ்சேரி, முக்கூத்து ஜல்லிப்பட்டி, பனக்கிநாறு, தோத்தம்பட்டி, சோமவாரப்பட்டி, கோட்டமங்கலம், வடுகபாளையம், கொண்டம்பட்டி, புதுப்பாளையம், விருகல்பட்டி, கொங்கல் நகரம், இலுப்பநகரம், அளிக்கடவு, மூங்கில் தோப்பு, அனந்தக்கடவு, பெரியபட்டி, வீதம்பட்டி, வாகத்தொழுவு, காசானம்பாளையம் ஆகிய கிராமங்களில் உள்ள விவசாய நிலமெல்லாம் பாசன வசதி பெறும்.

பொள்ளாச்சி வட்டத்தில் உள்ள உலகநாயக்கன்பட்டி, கோமங்கலப்புதூர், கோமங்கலம், பூசாரிப்பட்டி, ஆளப்பன்பட்டி, மூலனூர், ஏ.நாகூர், கொண்டகவுண்டன்புதூர் பாளையம், சின்ன நெகமம், பல்லடம் வட்டத்தில் ஜே. கிருஷ்ணாபுரம், வடக்கு அவிநாசிபாளையம், தொங்குட்டி பாளையம், அழகமலை, தெற்கு அவிநாசிபாளையம், காங்கயன் கோவில் ஆக மொத்தம் 52 கிராமங்களிலுள்ள விவசாய நிலமெல்லாம் பாசன வசதிபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

- ★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
- ★ லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
- ★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.


Licence No. TN/MS(C)/PP-23